திருமா மணிநங்கை வந்தாள்! – எங்கள்
தேசந் தழைத்திட வந்தாள்! வந்தாள்!



# கூடல்

## பரல் : 3

கண்ணகி கலை இலக்கிய விழா மலர் – 2014

கண்ணகி கலை இலக்கியக் கூடல்
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமா மணிநங்கை வந்தாள்! - எங்கள்
தேசந் தழைத்திட வந்தாள்! வந்தாள்!

# கூடல்

பரல் - 3

## கண்ணகி கலை இலக்கிய விழா மலர் - 2014

**ஆகஸ்ட் 01,02,03 - 2014**

**1ம் நாள் :**

**தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய கண்ணகி கலை அரங்கு**

**2ம், 3ம் நாள் :**

**தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம்**

**விழாமலர் அனுசரணை :**

வைத்திய கலாநிதி க . முருகானந்தன்

84018
56285

**கண்ணகி கலை இலக்கியக் கூடல்,**

**மட்டக்களப்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமா மணிநங்கை வந்தாள்! - எங்கள்
தேசந் தழைத்திட வந்தாள்! வந்தாள்!



# கூடல்

## பரல் – 3

**கண்ணகி கலை இலக்கிய விழா மலர் – 2014**

**தொகுப்பாசிரியர்**

கதிரவன் த. இன்பராசா

**மலர்க்குழு**

செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணன்
அ.அன்பழகன்குருஸ்
ச.மதன்
க.செல்வானந்தம்
க.சுதர்சன்
ஆர். சயனொளிபவன்
தம்பிலுவில் ஜெகா
செ.தபராசா

**கண்ணகி கலை இலக்கியக் கூடல்**
45A, பிரதான வீதி, சின்ன ஊறணி,
மட்டக்களப்பு.

தொ.பே.இல: 0777492861
0652053003
மின்னஞ்சல்: kannahivizha@gmail.com

## கூடலில் கூடுவோம்

கிழக்குமாகாணத்தின் தென்திசையில் நகரும் கண்ணகி கலை இலக்கியவிழா, கண்ணகி பற்றிய தனித்துவமான கலை இலக்கிய அறிவூட்டல்களையும் ஆர்வமூட்டல்களையும், விழிப்புணர்வையும் மக்கள் மத்தியில் விசிறி வருகின்றது இதனால் அவ்வப் பிரதேசங்களில் கண்ணகி கலை இலக்கியத் தளத்தில் மக்கள் கண்ணகிகலை இலக்கியங்கள் பற்றிச் சிலாகிக்கத் தொடங்கியுள்ளனர். கலை இலக்கியக் கூடலின் இந்தத் தொடர் செயற்பாட்டின் அடுத்த நகர்வு நான்காவது கண்ணகி கலை இலக்கிய விழாவாக அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில், தம்பிலுவில் கிராமத்தில் நடைபெறுவது என்பது எட்டப்படும் ஒருமைல் கல்லாகும்.

இம் முறை மூன்று நாட்களாகப் பெருந்திருக்கும் கண்ணகி கலை இலக்கியவிழா, களத்தில் கண்ணகி கலையான கொம்புமுறி விளையாட்டை காட்சிப்படுத்த விழைகின்றது. கண்ணகி ஆலய முன்றலில் அருகிவரும் கலைப்பாரம்பரியமொன்றை தற்கால சமூகத்திற்கு எடுத்துக்காட்டி, அதனூடாக புதிய உத்வேகத்தை உருவாக்க முன்வருகின்றது.

கண்ணகி கலை இலக்கிய விழாவின் ஆவணமாய் அமையும் 'கூடல்' சஞ்சிகையும் இங்கு மூன்றாவது பரலால் நிறைந்து நிற்கின்றது. கடந்த வருட (2013) மூன்றாவது கண்ணகி கலை இலக்கியவிழாவின் சகல விடயங்களையும் இக் 'கூடல்' அடுத்த காலங்களுக்கு எடுத்துச் சொல்லும் வகையிலும், நாலாவது கண்ணகி கலை இலக்கிய விழாபற்றிய அறிவித்தல்களையும், கண்ணகிகலை இலக்கிய அடையாளங்களையும் தாங்கிநிற்கின்றது.


கண்ணகி கலை இலக்கியவிழாவில் அனைவரும் ஒன்றிணைந்த புதிய பண்பாட்டுத் தளம் ஒன்றை உருவாக்கும் முயற்சியில் பலதரப்பட்டவர்கள் இணைந்துள்ளமை தற்போது "கூடலின்" வெற்றிப்பாதையின் தூண்டு கோலாக அமைகின்றது. இதே உத்வேகத்தை அனைவரும் உணர்ந்து எம்மோடு கைகோர்க்க வேண்டும். கூடல் தன் கண்ணகிகலை இலக்கியக் கூட்டத்தைக் கூட்டும் என்பதேவலுவானது. இது கால வோட்டத்தில் கண்ணகி பற்றிய கலை இலக்கியச் சிந்தனைகள் ஒருமித்த விசாலமான "பேராளர்" அவையினால் சாத்தியமாகும். எனவே அனைவரையும் அழைக்கும் எங்கள் கூடலில் கூடுவோம் வாருங்கள்.

**அன்பழகன் குருஸ்.**
**செயலாளர்.**
**கண்ணகிகலை இலக்கியக் கூடல்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணகி இலக்கிய விழாப் பட்டயம்



தமிழ் மண்ணோடும் தமிழ் மரபோடும் இணைந்த கதை கண்ணகி கதை. அவளின் திண்மையும், தீரமும் நிறைந்த வாழ்வும், மக்கள் நலன் நாட்டமும் அவளை மக்களின் தெய்வமாக்கின.

சோழ நாட்டில் பிறந்து, பாண்டிய நாட்டிலே வழக்குரைத்து, சேர நாட்டில் தெய்வீகமான கண்ணகி, ஈழ நாட்டில் சிங்கள தமிழ் மக்களின் மத்தியில் வழிபாட்டிற்குரிய தெய்வமானாள்.

பின்னாளில் கண்ணகி "கண்ணகையம்மன்" என கிழக்கிலங்கையில் நிலைபெற்று விடுவதுடன், கிழக்கிலங்கையின் பண்பாட்டு அடையாளங்களுள் ஒன்றாகவும் ஆகிவிடுகின்றாள். கிழக்கிலங்கையில் வைகாசித் திங்கள் அவளுக்குரியதாகும். இதன்போது கிழக்கிலங்கை விழாக்கோலம் பூணும்.

மக்கள் தெய்வமான கண்ணகியின் கதை சிலப்பதிகாரம், சிலம்பு கூறல், கண்ணகி காவியம், கண்ணகி வழக்குரை, குளுத்திப் பாடல், கண்ணகையம்மன் நாடகம், கண்ணகி வசந்தன், கும்மி, கரகம், காவடி, கொம்பு முறிப்பு, குரவைக் கூத்து என தமிழில் கண்ணகி கலை, இலக்கியமாக விரிந்துள்ளது.

கண்ணகிக்குரித்தான வைகாசி மாதத்தில் அவளை நினைவுகூரவும், அவளது இலக்கியங்களைப் பரவலாக்கவுமான நோக்குடன் கண்ணகி இலக்கிய விழா 2011.06.18 அன்று எம்மால் தொடக்கி வைக்கப்படுகின்றது.

இவ்விழா எதிர்காலத்தில் வருடம் தோறும் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லப்படும் எனவும் இத்தால் பிரகடனப்படுத்தப்படுகின்றது.

இப் பட்டயம் கண்ணகி இலக்கிய விழாக் குழுவினரால் 2011.06.18ம் திகதி நடைபெற்ற "கண்ணகி இலக்கிய விழா 2011" இன் தொடக்க விழாவில் காரைதீவைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபர் திருமதி **கோமேதகவல்லி செல்லத்துரை** அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டு, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் **திரு.சுந்தரம் அருமைநாயகம்** அவர்களிடம் கையளிக்கப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கண்ணகி கலை இலக்கியக் கூடல்" செயற்குழு - 2014

**காப்பாளர்** - பேராசிரியர் **சி.மௌனகுரு.** (காப்பாளர்) -
45/19, 2ம் குறுக்கு, சின்ன உப்போடை, மட்டக்களப்பு.
0773405414, 0652223053

**துணைக் காப்பாளர் - செ.எதிர்மன்னசிங்கம். -**
(முன்னாள் வடகிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர்)
22, 5ம் குறுக்கு, திஸ்ஸவீரசிங்கம் சதுக்கம், மட்டக்களப்பு. 0772029888

| இல | முழுப் பெயர் | முகவரி | தொ.பே.எண் |
|---|---|---|---|
| 1 | தம்பியப்பா கோபாலகிருஸ்ணன். **(தலைவர்)** | 607, பார்வீதி, மட்டக்களப்பு. | 0771900614 |
| 2 | அ.அன்பழகன் குரூஸ். **(செயலாளர்)** | 45A, சின்ன ஊறணி, மட்டக்களப்பு. | 0777492861 |
| 3 | கணபதிப்பிள்ளை ஆறுமுகம். **(துணைத்தலைவர்)** | 7, ஞானசூரியம் சதுக்கம், மட்டக்களப்பு. | 0718380887 |
| 4 | மாணிக்கப்போடி சதாசிவம். **(துணைத்தலைவர்)** | புதுக்குடியிருப்பு, ஆரையம்பதி. | 0757735507 |
| 5 | செல்வி.கதிராமன் தங்கேஸ்வரி. **(துணைத்தலைவர்)** | 10/1, பயனியர் வீதி, மட்டக்களப்பு. | 0776854619 |
| 6 | ச.ஜெயராஜா. **(பொருளாளர்)** | 19, முதலாம் குறுக்கு, கல்லடி, மட்டக்களப்பு. | 0777249729 |
| 7 | சி.சாமித்தம்பி. | 32/2, கண்ணகியம்மன் கோவில் வீதி, தாண்டவன்வெளி, மட்டக்களப்பு. | 0772933537 |
| 8 | த.இன்பராஜா | கதிரவன் கலைக்கழகம், புதுக்குடியிருப்பு, ஆரையம்பதி | 0754265201 |
| 9 | அ.செல்வேந்திரன் | 23/1, டயஸ் லேன், மட்டக்களப்பு. | 0773618402 |
| 10 | கி துரைராஜசிங்கம். | 73, வாவிக்கரைவீதி-1, மட்டக்களப்பு. | 0718497158 |
| 11 | ம.வேதநாயகம். | 12/8A, திருமகள் வீதி தெற்கு, மட்டக்களப்பு. | 0718112652 |
| 12 | திருமதி, சுந்தரமதி வேதநாயகம். | 12/8A, திருமகள் வீதி தெற்கு, மட்டக்களப்பு. | 0652225090 |
| 13 | செ.துரையப்பா. | 4, முதலியார் வீதி, மட்டக்களப்பு. | 0652222547 |
| 14 | த.அழகையா. | 14/10, கூழாவடி, மட்டக்களப்பு. | 0773599875 |
| 15 | காசுபதி நடராஜா. | 42, 2ம் குறுக்கு, கல்லடி வேலூர், மட்டக்களப்பு | 0773247132 |
| 16 | தி.நாகநாதன் | புதுக்குடியிருப்பு, ஆரையம்பதி. | 0779364161 |
| 17 | க. செல்வாநந்தம். | 10, சிவன்கோவில் வீதி, பனங்காடு, அக்கரைப்பற்று. | 0771272984 |
| 18 | செ.தபராசா | 17, நல்லையா வீதி, மட்டக்களப்பு. | 0652225848 |
| 19 | ச.மதன் | புதுக்குடியிருப்பு, ஆரையம்பதி. | 0773620328 |
| 20 | ச.தெய்வேந்திரன் | 394/42A, நாகதம்பிரான் கோவில் வீதி, ஞானசூரியம் சதுக்கம், மட்டக்களப்பு. | 0777917577 |
| 21 | கதிர் பாரதிதாசன். | 15/4, அதிகார் வீதி, மட்டக்களப்பு. | 0770837335 |
| 22 | மண்டூர் அசோகா. | 8/22, பிள்ளையார்கோவில் கல்லடி, மட்டக்களப்பு. | 0771026140 |
| 23 | திருமதி. சி.ஞானசூரியம். | 25/2, மாரியம்மன் கோவில் வீதி, கல்லடி, மட்டக்களப்பு. | 0771768830 |
| 24 | சி.விநோதன் | கொக்குவில், மட்டக்களப்பு. | 0776017043 |
| 25 | இ.வரதராஜன் | கடற்கரை வீதி, புதுக்குடியிருப்பு, ஆரையம்பதி. | 0727010160 |
| 26 | க.சுதர்சன். | தலைவர் வீதி, அக்கரைப்பற்று - 8 | 0774004984 |
| 27 | மு.தவராஜா | 25/10, அரசடிப் பிள்ளையார்கோவில் வீதி, மட்டக்களப்பு. | 0778163710 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | முழுப் பெயர் | முகவரி | தொ.பே.எண் |
|---|---|---|---|
| 28 | கே.ஜோதிநாதன் ரவி. | 42/01, கண்ணகியம்மன் கோவில் வீதி, திருப்பெருந்துறை, மட்டக்களப்பு. | 0754403145 |
| 29 | இ.தேவராசா | வில்லியம் பிள்ளை வீதி, தம்பிலுவில்-01. | 0673673243 |
| 30 | ம.மலரவன். | தம்பிலுவில் - 02 0752352731 | |
| 31 | பரதன் கந்தசாமி. | நாவலர் கோட்டம், யாட் வீதி, கல்முனை. | 0714417901 |
| 32 | வே.சண்முகநாதன். | பாண்டிருப்பு, கல்முனை. | 0776078786 |
| 33 | க.டனுஸ்கரன். | 10, அருச்சுணர் வீதி, பாண்டிருப்பு-1, கல்முனை. | 0778511890 |
| 34 | எஸ்.அரசரெத்தினம். | 32, V.V. வீதி, கல்முனை. | 0777386178 |
| 35 | கண.இராஜரெத்தினம். | (கண்ணன்) குருகுலம், தம்பிலுவில். | 0773779119 |
| 36 | வெ.ஜெயநாதன். | 157, விஷ்னு கோயில் வீதி, காரைதீவு. | 0672250442 |
| 37 | வே.தட்சணாமூர்த்தி. | பிரதான வீதி, புதுக்குடியிருப்பு. | 0757110130 |
| 38 | சி.புவனேந்திரன். | கிரான்குளம் மத்தி, கிரான்குளம். | 0776947789 |
| 39 | அ.குலேந்திரராசா. | விபுலாநந்த வீதி, புதுக்குடியிருப்பு. | 0778163717 |
| 40 | த.கைலாயபிள்ளை. | நாவலர் வீதி, அக்கரைப்பற்று. | 0773664282 |
| 41 | டேவிட் குருபரன் | பாடசாலை வீதி, தாழங்குடா - 3 | 0770698870 |
| 42 | வ.ஜெயந்தன். | சந்தை முன் வீதி, தம்பிலுவில். | 0775024968 |
| 43 | டேவிட் குருபரன் | | |
| 44 | ஆர்.சயனொளிபவன் | 90, கண்ணகி அம்மன் கோவில் வீதி, மட்டக்களப்பு. | 0774368089 |
| 45 | சி.விநாயகமூர்த்தி | தம்பிலுவில் | |
| 46 | முல்லை வீரக்குட்டி | தம்பிலுவில் | |
| 47 | எஸ்.பி.நாதன் | தம்பிலுவில் | |
| 48 | ஆ.கணேசமூர்த்தி | திருக்கோவில் | |
| 49 | செ.கணேசானந்தம் | 18/1, M.O.H. விடுதி ஒழுங்கை கல்முனை - 01 | 0776124037 |
| 50 | ப.குணசேகரம் | களுதாவளை | |

அரியபுவி மகளுமலை கடலிலுறை பவனும்
அரவுதளை அணிபவனு மலையரசன் மகளுமையும்
பெரியதவ முனியுமிரு டிகளுமல ரயனும்
பெருமைசெறி கலைமகளு மூர்வசியு மிந்திரனும்
தெரிவரிய உனதுபத மலரையனு தினமும்
தெண்டனிட் டடிபணிய வேமனமி ரங்கி
விரிவுசெறி குளமதுகள் நிறையமழை பொழியவருள்
மேவிவள ரைந்துகர விக்கினேஸ் வரனே.

**- தம்பிலுவில் மழைக் காவியத்திலிருந்து -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசம்



**"மட்டுநகர் விழாவில் "செங்கதிர்" ஆக நுழைந்து
கட்டழகாய் முதல் "கூடல" புதுவையிலே பிறந்து
பட்டிநகர் அருளாலே"பரல்" இரண்டு விரிந்து
திட்டமுடன் தம்பிலுவில் வரும் "கூடல்" மூன்று."**

கண்ணகி இலக்கியவிழாக்குழுவாக 2011 இல் ஆரம்பித்து முதலாவது விழா **மட்/மகாஜனக்கல்லூரி கலையரங்கில்** இடம் பெற்றபோது **"செங்கதிர்"** சஞ்சிகை **"கண்ணகி இலக்கிய விழா"**ச்சிறப்பிதழாக வெளிவந்தது. தொடர்ந்து கண்ணகி இலக்கிய விழாக்குழுவானது **"கண்ணகி கலை இலக்கியக் கூடல்"** ஆக உருவாகி இரண்டாவது **"கண்ணகி கலை இலக்கிய விழா 2012 " மட்/புதுக்குடியிருப்பில்** நிகழ்ந்தபோது கூடல், பரல்:01 எந்திரி வ.கருணநாதன் அவர்களின் அனுசரணையுடனும், மூன்றாவது **"கண்ணகி கலை இலக்கிய விழா-2013" அக்கரைப்பற்று - ஆலையடிவேம்பு** பிரதேசத்தில் நடைபெற்றபோது **'கூடல்', பரல்:02** பனங்காடு - பட்டிநகர் அருள்மிகு ஸ்ரீ கண்ணகையம்மன் ஆலயத்தின் அனுசரணையுடனும் வெளிவந்தமையையும் தற்போது **திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவு தம்பிலுவில்** மண்ணில் நிகழும் நான்காவது **கூடல். பரல்:3** வைத்தியகலாநிதி க. முருகானந்தன் அவர்களின் அனுசரணையில் வெளிவருகின்றமையையும் இவ்விதழில் பதிவு செய்து கொள்ள விரும்புகிறோம்.

ஒவ்வொரு வருடமும் **"கண்ணகி கலை இலக்கிய விழா"**வில் இடம்பெறும் ஆன்றோர் கருத்துக்கள், ஆய்வரங்கக்கட்டுரைகள், ஆவணப்படங்கள் உள்ளடங்கியதாக **"கூடல்"** வெளிவரும். அவை பரல்..பரல்களாக வெளிப்படும்.

கடந்தவருட **அக்கரைப்பற்று - ஆலையடிவேம்பு** பிரதேச விழாவினைப் பிரதிபலிக்கும் காலத்தின் கண்ணாடியாக இக்'கூடல்' பரல் 3 உங்கள் கரங்களில் குதூகலிக்கின்றது.

தொன்மைமிகு சக்தி வழிபாட்டின் சொந்தக்காரர்கள் நாம். அதிலும் பயபக்தி நிறைந்த கண்ணகியின் பூர்வீகம் எமது வரலாறு. அன்று முதல் இன்று வரை சரித்திர அடையாளங்களை பறைசாற்றும் பண்பாடு கண்ணகி கலை இலக்கியங்களில் பதிந்து பரவிக்கிடக்கின்றன. இவற்றை வெளிக்கொணர்ந்து கிழக்கிலங்கை மக்களை கலை, இலக்கிய, பண்பாட்டுத் தளத்தில் ஒன்றுபடுத்தி சமூக, பொருளாதார, கல்வி, ஆன்மீக ரீதியாக மேம்படுத்துவதும் **"கண்ணகி கலை இலக்கியக் கூடல்"** எனும் அமைப்பின் பணியாக அமைகின்றது.

இழந்தவைகள் போக எஞ்சியவைகளைக் கொண்டு சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய கடப்பாடு எமக்குள்ளது. அடையத்தவறிய அபிலாஷைகளையும், தொலைந்த தொன்மங்களையும் கண்ணகி கலை இலக்கியத்தின் மூலம் மீட்டுப்பார்க்க முடியும். அதற்கான அத்திவாரமே **"கூடல்"** கண்ணகி இலக்கியங்கள் கூறும் வாழ்வியல் எமது சமூகத்திற்கும், சமகாலத்திற்கும் தகும். கற்புடை மங்கையின் திண்மையும் தீரமும் அநீதியை எதிர்த்து அழிக்கும் என்பது உங்கள் எண்ணங்களில் இருக்கட்டும். **"கூடல்" பரல்: 03** வெளிவர உதவிய உள்ளங்கள் அனைத்திற்கும் நன்றிகள், வாழ்த்துக்கள்.

- நன்றி -

**கதிரவன் த.இன்பராசா**
**கண்ணகி கலை இலக்கிய கூடல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயம்




தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய முகப்புத் தோற்றம்

நுழைவாயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணகி கலை இலக்கிய விழா 2014 - விழாக்குழு - திருக்கோவில் பிரதேசம்



**முன்வரிசையில் அமர்ந்திருப்போர் (இடமிருந்து வலம்)**

திரு.ஆ.உலகராஜா, திரு.சி.விநாயகமூர்த்தி (பொருளாளர்), திரு.வ.ஜயந்தன் (தலைவர்), கவிஞர் முல்லைவீரக்குட்டி (செயலாளர்), திரு.எஸ்.பி.நாதன் (துணைச்செயலாளர்), திரு.சோ.பரஞ்சோதி, திரு.ஆ.கணேசமூர்த்தி (துணைத்தலைவர்)


**பின்வரிசையில் நிற்போர் (இடமிருந்து வலம்)**

திரு.த.பாஸ்கரன், திரு.உ.சுமன், திருமதி.யோகா.யோகேந்திரன், கவிஞர் தம்பிலுவில் ஜெகா, திரு.லோ.சந்திரபவன், திரு.சு.உதயசந்திரன், திரு.சோ.சதானந்தம், திரு.மு.புவிதாசன், திரு.ந.நித்தியகுமார், செல்வி.கீ.லோஜினி, செல்வி.சு.வியூமி, திரு.பா.கிருபாகரன், திரு.கோ.சேந்தன், திரு.க.கணேசன், திருகு.தயாரூபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "கண்ணகிகலை இலக்கியக் கூடல்" செயற்குழு– 2014



**அமர்ந்திருப்போர். (இடமிருந்துவலம்) :**திரு.வே.சண்முகநாதன். திரு.இ.தேவராசா. திரு.செ.துரையப்பா. திரு.அ.செல்வேந்திரன். திரு.மா.சதாசிவம் (துணைத்தலைவர்). திரு.செ.எதிர்மன்னசிங்கம் (துணைக்காப்பாளர்). திரு.த.கோபாலகிருஸ்ணன் (தலைவர்). செல்வி.க.தங்கேஸ்வரி (துணைத்தலைவர்). திருமதி.சுந்தரமதிவேதநாயகம் (துணைச்செயலாளர்). திரு.செ.தபராசா. திரு.ம.வேதநாயகம். திரு.எஸ்.ஜெயராஜா (பொருளாளர்).

**நடுவரிசை. (இடமிருந்துவலம்) :** திரு.ச.மதன். திரு.த.அழகையா. திரு.க.டனுஸ்கரன். திரு.த.இன்பராசா. திரு.அ.அன்பழகன் குரூஸ் (செயலாளர்). திரு.அ.குலேந்திரராசா. திரு.டேவிட் குருபரன். திரு.சி.வினோதன். திரு.ஆர்.சயனொளிபவன். திரு.கே.ஜோதிநாதன் ரவி.

**பின் வரிசை(இடமிருந்துவலம்) :** திரு.ச.தெய்வேந்திரன். திரு.கண.இராஜரெத்தினம் (கண்ணன்). திரு.சி..விநாயகமூர்த்தி. திரு.வ.ஜயந்தன். திரு.க. செல்வாநந்தம். திரு.த.கைலாயபிள்ளை. திரு.முல்லைவீரக்குட்டி. திரு.எஸ்.பி. நாதன். திரு.க.சுதர்சன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15, ஜூன் 2013 சனிக்கிழமை,

## முதலாம் நாள் காலை அமர்வு.

## "தொடக்க விழா"

**அரங்கு** : **"கூலவாணிகன் சாத்தனார்"** அரங்கு.


**காலம்** : **15.06.2013** சனிக்கிழமை காலை **08.30** - பி.ப 01.15

**இடம்** : ஆலையடிவேம்பு பிரதேச சபை கலாசார மண்டபம். அக்கரைப்பற்று.

**தலைமை** : **பேராசிரியர் சி. மௌனகுரு.**



பேராளர் பதிவு



விழா ஊர்வலம்

வாகனப் பேரணி அக்கரைப்பற்று பனங்காடு பட்டிநகர் அருள்மிகு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயத்திலிருந்து ஆரம்பித்து...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோளாவில் கண்ணகி அம்மன் கோயில் வழியாக



அக்கரைப்பற்று மருதையடி கண்ணகியம்மன் ஆலயத்தை அடைந்து




அங்கிருந்து நடைபவனியாக விழா மண்டபம் வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. டி. டபிள்யூ. யூ. வெலிகல்ல
(பணிப்பாளர்,
கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவலகள் திணைக்களம்)



வைத்திய கலாநிதி.
ம. தேவராஜன்

## மங்கல விளக்கேற்றல்




தமிழ்மொழி வாழ்த்து –
செல்வி. **பு. கஜேந்தினி,** திருமதி. **ந. ராஜ்குமார்**



கண்ணகி கலை இலக்கிய விழாக் கீதம்
செல்வி. **கௌசல்யா இராமலிங்கம்**



வரவேற்பு நடனம்
**அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஸ்ண தேசியபாடசாலை மாணவிகள்**
**நெறியாள்கை: திருமதி. த. விஜயசாந்தன்** (நடன ஆசிரியை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரவேற்புரை
**திரு. த. கைலாயபிள்ளை**
(விழாக்குழுத்தலைவர்)




தொடக்கவுரை
**செங்கதிரோன் த. கோபாலகிருஷ்ணன்**
(தலைவர் - கண்ணகி கலை இலக்கியக்கூடல்)



தலைமையுரை
பேராசிரியர் **சி. மௌனகுரு**




விழா மலர் வெளியீட்டுரை
**கதிரவன் த. இன்பராசா** (தொகுப்பாசிரியர்)




'கூடல்' பரல் – 02 வெளியீடு : **கலாநிதி. அரிமா. அ. செல்வேந்திரன்**
முதற்பிரதி பெறுனர் – **திரு. க. கார்த்திகேசு**
(தலைவர், வண்ணக்கர் - அக்கரைப்பற்று பனங்காடு பட்டிநகர் அருள்மிகு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொடக்க விழா அரங்கில் அதிதிகள்



தொடக்க விழா அரங்கில் அவையோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கவுரை



# கண்ணகி கலை இலக்கிய விழா – 2013

செங்கதிரோன்.த.கோபாலகிருஸ்ணன்
(தலைவர், கண்ணகி கலை இலக்கியக்கூடல்)

ஆலையடிவேம்பு அக்கரைப்பற்றில் நடைபெற்ற 'கண்ணகி கலை இலக்கிய விழா – 2013' இன் முதல் நாள் ஜூன் 15 தொடக்கவிழாவில் (காலை அமர்வு) கண்ணகி கலை இலக்கியக்கூடல் தலைவர் செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணன் ஆற்றிய தொடக்கவுரை

வஞ்சகமில்லாத வாழ்க்கை முறையையும், விருந்திருக்க உண்ணாத வேளாண்மைத் தனத்தையும், வந்தாரை வாஞ்சையோடு வரவேற்று வாழவைப்பதில் வற்றாத மனப்போக்கையும், சாதிமத பேதமற்ற சமரச நோக்கையும், சகோதரத்துவ மனப்போக்கையும் கொண்ட கிழக்கிலங்கைத் தமிழ்ச்சமூகத்தின் தனித்துவமான பண்பாட்டு விருட்சத்தின் வேராக விளங்கும் கண்ணகி தொன்மங்களின் அடியொற்றி எழுந்த கண்ணகி கலை இலக்கியங்களைப் பரவலாக்கும் நோக்குடன் 2011 இல் மட்டக்களப்பில் தொடக்கி வைக்கப்பட்ட கன்னி விழாவான 'கண்ணகி இலக்கிய விழா -2011' சென்ற வருடம் மட்டக்களப்பு புதுக்குடியிருப்புக் கிராமத்தில் 'கண்ணகி இலக்கிய விழா – 2012' ஆகத் தொடர்ந்து மூன்றாவது விழா இன்று அம்பாறை மாவட்டத்தில் ஆலையடி வேம்பு பிரதேசம் அக்கரைப்பற்றில் 'கண்ணகி இலக்கிய விழா – 2013' ஆக முகிழ்கிறது.
ஆலையடி வேம்புப் பிரதேசத்தில் வரலாற்றுப் புகழ் மிக்க பட்டிமேட்டில் 'அக்கரைப்பற்று பனங்காடு பட்டிநகர் அருள் மிகு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயம்' அமைந்திருப்பதும், மேலும் கோளாவில் கண்ணகி அம்மன் ஆலயம் மற்றும் மருதையடி கண்ணகி அம்மன் ஆலயம் ஆகிய இரு ஆலயங்களையும் சேர்த்து மொத்தமாக மூன்று கண்ணகி அம்மன் ஆலயங்கள் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவு எல்லைக்குள் அமைந்திருப்பதும் இம்மக்கள் கண்ணகி தொன்மங்களைப் பேணி பாதுகாத்து வருவதற்கான அடையாளங்களே. மேலும், ஆலையடிவேம்புப் பிரதேசம் பல்லின சமூகங்களை ஒன்றிணைக்கும் பெருமையையும் பாரம்பரியத்தையும் உடையது. இத்தகைய பின்புலத்திலே இவ்வருட கண்ணகி கலை இலக்கிய விழா ஆலையடிவேம்பு பிரதேச மண்ணில் நடைபெறுவது சாலப் பொருத்தமே.

கண்ணகி கலை இலக்கிய விழாக்களை வடிவமைக்கும் பணிக்காக எம்மால் உருவாக்கப்பட்ட "கண்ணகி கலை இலக்கியக் கூடல்" என்ற பண்பாட்டு அமைப்பு,

- உலகமயமாக்கலினாலும் - தகவல் தொழில்நுட்பத்தின் அதீத வளர்ச்சியினாலும் - நுகர்வுக் கலாசாரத்தினாலும் - இயந்திர நாகரீகத்தினாலும் கற்பழித்து விடாமல் எமது மண்ணின் பாரம்பரியக் கலை இலக்கிய வடிவங்களையும் பண்பாட்டு விழுமியங்களையும் காப்பாற்றி மீளக்கட்டமைத்துப் பேணி வளர்த்தெடுத்து அவற்றை அடுத்த சந்ததிக்கு முறையாகக் கையளிக்கும் பணிகளையும்,
- கிழக்கிலங்கைத் தமிழ்ச் சமூகத்தைப் பண்பாட்டுத் தளத்தில் ஒன்றிணைத்து அவர்களது சமூக, பொருளாதார, அரசியல், கல்வி கலை இலக்கிய மேம்பாட்டை நோக்கி அவர்களை அறிவுபூர்வமாக ஆற்றுப்படுத்தும் அமைதியான செயற்பாடுகளையும்

கண்ணகி கலை இலக்கியக்கூடல் முன்னெடுத்து வருகின்றது. கண்ணகி கலை இலக்கிய விழாவானது வெறுமனே விழாக்களாக அமையாது சமூக மாற்றத்திற்கான – மறுமலர்ச்சிக்கான விசையாக வெளிக்கிளம்ப வேண்டும் என்பது எமது வேணவா.

2011இல் மட்டக்களப்பில் மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரிக் கலை அரங்கில் நடைபெற்ற முதலாவது 'கண்ணகி கலை இலக்கிய விழா' இவ்விழாவில் வெளியிடப் பெற்ற கண்ணகி இலக்கய விழாப் பட்டயத்திற்கு அமைவாகத் தொடர்ந்து 2012இல் மட்டக்களப்பு புதுக்குடியிருப்புக் கிராமத்தில் நடைபெற்ற இரண்டாவது கண்ணகி கலை இலக்கிய விழா - இப்போது இங்கு தொடங்கி வைக்கப்பட்டுள்ள மூன்றாவது கண்ணகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை இலக்கிய விழா என்பவற்றில் இதுவரைக்கும் ஐந்நூறிற்கும் மேற்பட்ட போராளர்கள் பதிவு செய்து கொண்டுள்ளனர். மேலும் பதிவுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்விழாவின் நிறைவு நாளன்று போராளர்களின் எண்ணிக்கை எழுநூறையும் தாண்டலாம்.

எதிர் வரும் ஜனவரி மாதம் இவர்களையெல்லாம் ஒன்றிணைத்துப் 'போராளர் மாநாடு' ஒன்றினை நடத்தி அம்மாநாட்டில் பல முன்மொழிகளைச் சமர்ப்பித்துக் கலந்துரையாடித் தீர்மானங்களை மேற்கொண்டு அவற்றிற்கு எதிர்காலத்தில் செயல் வடிவம் கொடுக்கும் நடவடிக்கைகளைக் 'கண்ணகி கலை இலக்கியக் கூடல்' மேற்கொள்ளவிருக்கின்றது.

நாம் மனங்கொண்டிருக்கும் எதிர்காலச் செயற்பாடுகள் சிலவற்றை இங்கு கோடிட்டுக் கூறுவது பொருத்தம் என எண்ணுகின்றேன்.

- முதலாவது கண்ணகி கலை இலக்கிய விழாவில் பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களால் தலைமையுரையில் தெரிவிக்கப்பட்ட யோசனைகளுக்கமைய கிழக்குப்பல்கலைக்கழகம் மற்றும் மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம் ஆகிய நிறுவனங்களினூடாக பல்கலைக்கழக இந்து நாகரித்துறையில் கண்ணகி வழிபாட்டு முறைகளை ஒரு பாடநெறியாக ஆக்கவும், தமிழ் மொழித்துறையில் கணணகி இலக்கிய பீடம் ஒன்றினை உருவாக்கி அதன் மூலம் கண்ணகி இலக்கிய ஆய்வுகளை நடாத்தவும், பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் பயிலும் மாணவர்களுக்குக் கண்ணகி கலைகளைப் பயிற்றுவிக்கவும், சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் சிலப்பதிகாரம் மற்றும் கண்ணகி வழக்குரையில் வரும் ஆடல் பாடல்களை மீளுருவாக்கம் செய்யவும் ஆவன செய்தல்
- தமிழறிஞர் குழு ஒன்றின் மூலம் 'கண்ணகி வழக்குரை' காவியத்திற்கு உரை எழுதிப் பதிப்பித்து அதனை மக்களிடையே பரவலாக்குதல்.
- ஏட்டுப் பிரதிகளாக உள்ள கண்ணகி இலக்கியங்களைத் தேடியெடுத்து அச்சில் பதிப்பித்தல் மற்றும் ஏற்கனவே பதிக்கப் பெற்றவற்றை மீள்பதிப்புச் செய்தல்.
- கலை இலக்கியச் செயற்பாடுகளோடு மட்டும் நின்றுவிடாமல் எமது சமூகம் அவாவி நிற்கும் கல்வி, சமூகம் மற்றும் வாழ்வாதாரச் செயற்பாட்டுப் பணிகளையும் மேற் கொள்ளல் என்பன அவற்றுள் சில

அடுத்த வருடம் நடைபெறவுள்ள நான்காவது 'கண்ணகி கலை இலக்கிய விழா – 2014'லினைத் தம்பிலுவில் கிராமத்தில் நடத்துமாறு அங்குள்ள ஆர்வலர்கள் பலர் கண்ணகி கலை இலக்கியக் கூடலிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இக்கோரிக்கையினை எமது செயற்குழு பரிசீலனைக்கு எடுக்கும். அத்துடன் அடுத்த வருட கண்ணகி கலை இலக்கிய விழாவில் ஆய்வரங்கின் குவிமையமாக 'கண்ணகி வழக்குரை' விளங்கும்.

நிறைவாக வெகுவிமரிசையாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்விழாவின் நெம்பு கோலாக நின்று செயற்படும் 'கண்ணகி கலை இலக்கியக் கூடல்' இன் அம்பாறை மாவட்ட இணைப்பாளரும் அக்கரைப்பற்று விழாக்குழுவின் செயலாளருமான தம்பி செல்வானந்தத்தையும், அவருக்குப் பக்கபலமாக இருக்கும் பொருளாளர் தம்பி சுதர்சனையும், இவர்களுக்கு வேண்டிய ஆதரவளித்து ஆற்றுப்படுத்தும் விழாக்குழுத் தலைவர் நண்பர் கைலாயபிள்ளை அவர்களையும் ஏனைய விழாக்குழு உறுப்பினர்களையும், இன்று வெளியிடப்படவுள்ள விழாமலர் கூடல் பரல் - 2 இற்கான அனுசரணை வழங்கிய அக்கரைப்பற்று பனங்காடு பட்டிநகர் அருள்மிகு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய அறங்காவலர் சபையினரையும், மற்றும் விழாவிற்கு வேண்டிய ஏனைய வளங்களை மனமுவர்ந்து வழங்கிய நலன் விரும்பிகள் அனைவரையும், பேராதரவு வழங்கிய ஆலையடிவேம்பு பிரதேச மக்களையும் இவ்விடயத்தில் சிலாகித்துப் பாராட்டுவது 'கண்ணகி கலை இலக்கியக் கூடல்' இன் தலைவர் என்ற முறையில் எனது தார்மீகக் கடமையாகும்.

2011இல் ஆரம்பித்து வருடாவருடம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும் இக் 'கண்ணகி கலை இலக்கிய விழா' வானது வெறுமனே கூடிக்கலையும் விழாக்களாக இல்லாது இன்று சகல வழிகளிலும் பாதிப்புற்று விரக்தியடைந்துள்ள எமது சமூகத்தை நம்பிக்கையூட்டக்கூடிய இன்னுமொரு 'புதியவெளி'க்கு இட்டுச் செல்கின்ற உந்து விசையாக எதிர்காலத்தில் வெளிக்கிளம்ப வேண்டும் என்ற எமது வேணவாவை மீண்டும் வெளிப்படுத்தி அவ்வாறு அமைவதற்கு இங்கு கூடியுள்ள அனைவரது ஆதரவை நாடியும், இன்றைய காலை அமர்வான கூலவாணிகன் சாத்தனார் அரங்கிலே நடைபெற்றுக் கொண்டிருக்கும் தொடக்க விழாவைச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் முதன்மை அதிதிகள், சிறப்பு அதிதிகள், பேராளர்கள் மற்றும் ஏனைய பார்வையாளர்கள், நிகழ்வுகளில் பங்குபற்றியவர்கள், ஊடகவியலாளர்கள், கண்ணகி கலை இலக்கிய ஆர்வலர்கள் அனைவருக்கும் கண்ணகி கலை இலக்கியக் கூடல்' இன் சார்பில் நன்றியையும் வணக்கத்தினையும் நல்கி எனது தொடக்கவுரையை நிறைவு செய்கிறேன். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையுரை



# கண்ணகி வழக்குரை காவியத்தை கற்றோரும், மற்றோரும் அறியவைக்குக.

**பேராசிரியர் சி. மௌனகுரு**

கண்ணகி வழக்குரை மட்டக்களப்பின் கண்ணகி கோயில்களில் எல்லாம் வருடம் தோறும் படிக்கப்படும் ஒரு காவியம். திரௌபதை அம்மன் கோயில்களில் பாரத அம்மானை படிக்கப்பட கண்ணகிஅம்மன் கோயில்களில் கண்ணகி வழக்குரை படிக்கப்படும். மக்கள் பண்டொருகால் இப்படிப்பில் ஆழ்ந்தனர். தொழில்நுட்ப ஊடகங்கள் வராத ஒரு காலத்தில் நமது ஐதீகக் கதைகளையும், பண்பாட்டையும் மக்களுக்குரைக்கும் ஊடகங்களாக கோயிலில் வழக்குரை ஊடகங்களாக கோயிலில் வழக்குரை அம்மானை படித்தலும் கூத்துகளும் அமைந்தன. இவையாவும் இரவு நேரங்களில் நிகழ்ந்தன.

இன்று இப்படிப்புகள் கோயில்களில் வெறும் சடங்குகளாக ஆகிவிட்டன. சில இடங்களில் கண்ணகி வழக்குரையின் சில பாடல்கள் மாத்திரம் ஒப்புவிக்கப்படுகின்றன. மக்களும் அதனைக்காவியமாக அன்றி சடங்காகவே அணுகுகின்றனர்.

இத்தனைக்கும் கண்ணகிவழக்குரை ஒரு காவியமாகும். தமிழில் கி.பி 10ம் நூற்றாண்டில் காவிய இலக்கணம் வகுத்தது தண்டியலங்காரம்.

தன்னிகரில்லாத தலைவனுடைய வாழ்வை இன்னின்னவாறு கூற வேண்டுமென்று காவிய இலக்கணம் வகுக்கப்பட்டது. ஆனால் தமிழில் தோன்றிய சில காவியங்கள் இவ்விலக்கணத்துள் உட்படவில்லை.

தமிழ் மரபில் காவிய இலக்கணம் வேறாக இருந்தது. சிலப்பதிகாரம், கண்ணகி வழக்குரை என்பன அக்காவிய இலக்கணத்துள் உட்படாதவை. எனினும் அவை காவியங்கள்தான். தமிழ் மரபுக்காவியங்கள் என நாம் அதனை அழைக்கலாம்.

சிலப்பதிகாரம் உ.வே.சாமிநாதய்யரால் பதிக்கப்படும் வரை அதனைத் தமிழ் அறிஞர் அறியவில்லை. அதனைச் சிறப்பதிகாரம் என அறிந்துவைத்திருந்தோரும் இருந்தனர்.

அறிஞர்கள் சிலப்பதிகாரத்தின் இலக்கிய நயத்தையும் காவிய நயத்தையும் எழுதவும், பேசவும் ஆரம்பித்தனர். சிலப்பதிகாரம் அறிஞர் உலகில் அறியப்படலாயிற்று.

ம.பொ.சி.சிவஞானகிராமணியார் தமது பேச்சாற்றல் மூலம் சிலப்பதிகாரத்தைத் தமிழகத்தின் பட்டிதொட்டிகள் எங்கும் பரப்பினார்.

தி.மு.க.அதனைத் தனது கலாசார ஆயுதமாக்கியது. இதல் கருணாநிதியின் பங்கு அதிகம்.

இன்று கண்ணகியும் சிலம்பும் தமிழ் மக்கள் பண்பாட்டின் ஒரு குறியீடாகிவிட்டது.

சிலப்பதிகாரக் கண்ணகியையும், அவள் கதையையும் ஈழம் இன்னொருவகையில் நோக்கியது. அதன் விளைவுதான் 'கண்ணகி வழக்குரை'.

கண்ணகியின் பூர்வீக வரலாற்றொன்றைச் சிருஸ்டித்ததுடன் அவளை இந்துமதத்துடன் இறுகப்பிணைத்தது கண்ணகி வழக்குரை.

கண்ணகி வழக்குரை கோயில் சடங்கில் படிக்கத் தொடங்கியதும் அதன் இலக்கியநயம் மறந்து சடங்குத்தன்மையே மேல் எழுந்தது.

கண்ணகி கலை இலக்கிய விழாவை வருடாவருடம் நடத்தி கண்ணகிப்பண்பாட்டை முன்னெடுக்கும் கண்ணகி கலை இலக்கியக்கூடலின் செயற்பாடு கடந்த மூன்று வருடங்களாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் கண்ணகி வழக்குரையில் கவனம் செலுத்துவதும் அவசியமாகின்றது.

கண்ணகி வழக்குரையை இலக்கியமாகப் பார்க்கும் பார்வையை ஏற்படுத்தலும் அதனைப் பொதுமக்கள் மத்தியில் சிலப்பதிகாரம்போல் கொண்டு செல்லுதலும், நமது பண்பாட்டு அடையாளங்களைப் பேணும் பணியில் ஒன்று போலத் தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகி வழக்குரையை நமது கற்றோரும் மற்றோரும் முதலில் படிக்கவேண்டும். பாடலில் படிப்பது சிரமமானால் வசனத்திலாவது அது பற்றிக் கூறப்படவேண்டும்.

கண்ணகி வழக்குரைக்குள் ஒரு காவியக்கட்டுக்கோப்பு தெரிகிறது.

அதிலே பல்வேறு வகையான பாத்திரங்கள் வருகின்றன. ஒவ்வொருத்தரும் தத்தமக்குரிய குணாதிசயங்களுடன் நடமாடுகின்றனர்.

பாத்திரமோதுகைகள் வருகின்றன. அவை கதை வளர்ச்சிக்கு உதவுகின்றன.

கண்ணகி வழக்குரையில் வரும் அணிகள், அலங்காரங்கள், இலக்கிய நயங்கள் இதுவரை யாராலும் எடுத்துப்பேசப்படவில்லை.

இத்தனைக்கும் மேலாக கண்ணகி வழக்குரை கப்பல் கட்டும் கலை, போர்க்கலை, இசைக்கலை, நடனக்கலை பற்றிப் பேசுகிறது.

இக்கலைகளுக்குத் தமிழரிடம் நீண்டதோர் பாரம்பரியம் உண்டு. சோழப்பெருமன்னர் காலத்தில் (10ம் நூற்றாண்டில்) கடல் கடந்து பல நாடுகளையும் வென்ற ராஜராஜசோழனிடம் பெரும் கப்பற்படையும் காலாட்படையும் இருந்தது. கப்பற்கலை, போர்க்கலை விற்பன்னர்களாக அவர்கள் இருந்துள்ளனர்.

இவைபற்றிய தகவல்கள் அருமையாகவே கிடைக்கின்றன.

நடனம், இசை என்பன 2000 ஆண்டுகளாகத் தமிழ் மக்களிடம் உண்டு. இவை அனைத்தையும் 17ம் நூற்றாண்டுப் பின்னணியில் நமக்குத் தருகிறது கண்ணகிவழக்குரை. கண்ணகி வழக்குரையை ஆய்வுப்பொருளாக மாற்றுகையில் அதன் இலக்கிய நயம், பாத்திரவார்ப்பு, அணிஅலங்காரம், அது கூறும் கலை மரபுகள் பற்றி அறிய வாய்ப்பு ஏற்படும்.

எனவே தொடர்ந்து இரண்டு மூன்று ஆண்டுகளுக்குக் கண்ணகி கலை இலக்கியக்கூடல் கண்ணகி வழக்குரை காதையை ஆய்வின் பொருளாகக் கொள்ளவேண்டும் என்ற கருத்தை நான் முன் வைக்கின்றேன்.

2012ல் மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பிலே நடைபெற்ற இரண்டாவது கண்ணகி கலை இலக்கியவிழாவிலும் இக்கருத்தை எனது தலைமையுரையில் வலியுறுத்தினேன். அது காரிய சாத்தியமாகவில்லை. இவ்வாண்டும் அக்கருத்தை மேலும் வலியுறுத்துகிறேன். அடுத்த ஆண்டு கண்ணகி கலை இலக்கிய விழாவில் இது சாத்தியமாகும் என நம்புகிறேன்.

கண்ணகி வழக்குரை இலக்கியமாக நோக்கப்படவேண்டும். அது கூறும் விடயங்கள் தேடப்படவேண்டும். தொடர்ச்சியாக இதனைச் செய்வதன் மூலம் கண்ணகிவழக்குரையை ஆய்வாளர் ஆழமாகக் கற்கும் வாய்ப்பு ஏற்படும். தாம் கற்றவற்றைக் கருத்தரங்கில் உரைப்பதன்மூலம் கண்ணகி வழக்குரை இன்னொருதளத்தில் மக்கள் மத்தியில் செல்ல வாய்ப்புஏற்படும்.

தமிழ் நாட்டில் சிலப்பதிகாரம் போல இலங்கையில் குறிப்பாக மட்டக்களப்பில் கண்ணகி வழக்குரை காவியம் பற்றிய விழிப்புணர்வு தோன்றவும் இச்செயற்பாடு உதவும். அடுத்த ஆண்டு இது நிச்சயம் நிறைவேறும் என எண்ணி என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

# அஞ்சலி



கோளாவில், அக்கரைப்பற்றைச் சேர்ந்த திருமதி.மீனாட்சி வடிவேல் சிறந்த சமூக சேவகியாவார். அக்கரைப்பற்றில் ஆலையடிவேம்பு பிரதேசசபை கலாசார மண்டபத்தில் 15,16 ஜூன் 2013இல் நடைபெற்ற மூன்றாவது கண்ணகி கலை இலக்கிய விழாவின் வெற்றிக்குப் பெரிதும் பங்களித்தவர். முதலாம் நாள காலை அமர்வில் இடம்பெற்ற ''நூலங்காடி''யைத் திறந்து வைத்தவரும் கூட. அன்னாருக்கு எம் அஞ்சலி.

அமரர்.திருமதி.மீனாட்சி வடிவேல்
13.07.1940 - 01.01.2014

- கண்ணகி கலை இலக்கியக்கூடல் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிதிகள்



வைத்தியகலாநிதி
**ம. தேவராஜன்**
**(முதன்மைஅதிதி)**



சைவப்புலவர், சைவசித்தாந்தபண்டிதர்,
ஜோதிடமணி **சிவஸ்ரீ**
**க. லோகநாதக்குருக்கள்**
**(சிறப்பு அதிதி)**



அருட்தந்தை **யோசப் மேரி**
**அடிகள்**
**(சிறப்பு அதிதி)**



**திரு. வே. ஜெகதீசன்**
(பிரதேச செயலாளர், ஆலையடிவேம்பு)
**(சிறப்பு அதிதி)**



**வைத்தியகலாநிதி**
**க. வித்தியாசங்கர்**
**(சிறப்பு அதிதி)**



**திரு. பரதன் கந்தசாமி**
(தலைவர், கல்முனை தமிழ்ச்சங்கம்)
**(சிறப்பு அதிதி)**



**திருமதி. சுபா சக்கரவர்த்தி**
(மட்டக்களப்பு வலயக்கல்விப்பணிப்பாளர்)
**(சிறப்பு அதிதி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நன்றியுரை
**க. செல்வானந்தம்**
(அம்பாறை மாவட்ட இணைப்பாளர், கண்ணகி கலை இலக்கியக்கூடல்)



நிகழ்ச்சித் தொகுப்பு :
**வி. சுகிர்தகுமார்** (சமுர்த்தி உத்தியோகத்தர்)



நூலங்காடி திறப்பு : **புரவலர் திருமதி. மீனாட்சிவடிவேல்**
இணைப்பாளர் : **பொறியியலாளர் வேலு சண்முகநாதன்**
அனுசரணை : **கிழக்கிலங்கை சிற்றிதழ்கள் ஒன்றியம்**



அவையோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15, ஜூன் 2013 சனிக்கிழமை,

## முதலாம் நாள் மாலை அமர்வு.

### "இயல் அரங்கு"

| | | |
|---|---|---|
| அரங்கு | : | **"சேரன் செங்குட்டுவன்" அரங்கு.** |
| காலம் | : | **15.06.2013** சனிக்கிழமை மாலை 03.00 – 06.30 |
| இடம் | : | ஆலையடிவேம்பு பிரதேச சபை கலாசார மண்டபம். அக்கரைப்பற்று. |
| தலைமை | : | **திரு. வா. குணாளன்.** (ஆலையடிவேம்புக் கோட்டக்கல்விப் பணிப்பாளர்) |



அறிமுகவுரை
**திரு. சு. சிறிதரன்**
(உதவிக்கல்விப்பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், திருக்கோவில்)



தலைமையுரை
**திரு. வா. குணாளன்**
(ஆலையடி வேம்புக் கோட்டக்கல்விப் பணிப்பாளர்)




கவியரங்கம் : "ஒரு மா பத்தினி வந்தாள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவியரங்கத்தலைமை
**கவிமணி நீலாபாலன்**



கவிஞர் **அக்கரைப்பாக்கியன்**



கவிஞர் **மேரா**



கவிஞர் **தம்பிலுவில் ஜெகா**



கவிஞர் **நிலாதமிழின்தாசன்**



கவியரங்கில் அவையோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உயர்திரு பொ. சுவர்ணராஜ் (மேல்நீதிமன்ற நீதிபதி)
## முதன்மை அதிதி

கண்ணகியினுடைய வாழ்க்கையிலே அவர் சிந்தித்த விதங்கள் அவருடைய சிந்தனைத்திறன் செயலாற்றிய விதங்கள் ஆகியவை இப்போது காணப்படுகின்ற தமிழ் சமுதாயத்திற்குமிகப் பொருத்தமாக இருக்கும் என நினைத்து ஒருசில விடயங்களை நான் சிந்திக்கத் தலைப்பட்டேன். ஒருசில கேள்விகளும் என்னுள் எழுந்தன.

பூம்பூகார் பட்டணத்திலே இருந்து கண்ணகி மதுரைஅடைந்ததை யாவரும் அறிவோம். அந்த வேளையில் கண்ணகி ஒரு தீர்மானம் எடுக்கின்றாள். கோவலன் மீண்டும் அவனது நிலைமையை அடையவேண்டும். தங்களுடைய குடும்பம் மீண்டும் தழைக்க வேண்டும் என அவள் நினைக்கின்றாள். இதனால் கணவனுடன் மதுரை சென்று தனது ஒரு காற்சிலம்பை விற்று வாணிபம் செய்யுமாறு அறிவுரை கூறுகின்றாள்.

இக்காலகட்டத்தில் இருக்கின்ற தமிழ்ச் சமுதாயத்தின் நிலையைப் பார்த்தோமானால் அதன் நிலை என்ன என்பது யாவரும் அறிந்ததே. அவ்வாறு தாழ்ந்திருக்கின்ற சமுதாயம் மேலானதாக எழுச்சிபெறவேண்டும் என தன்முன்பாக ஒரு குறிக்கோளை வைக்கவேண்டிய அவசியம் தற்போது இருக்கின்றது. திரும்பவும் நாம் பழைய நிலையை அடையவேண்டும் என்ற அவா சமுதாயத்தில் தோன்றி அது மற்றவர்கள் மத்தியில் தீயெனப்பரவ வேண்டியது அவசியமாக இருக்கின்றது. கண்ணகிக்கு அவ்வாறான ஒரு சிந்தனை ஓட்டம் இருந்ததை நாம் காணமுடியும். கண்ணகி தன் குடும்ப நிலையை ஏற்ற உயர்த்த அரும்பாடுபடுகின்றார்கள்.

முதலில் நாம் திரும்பவும் எழும்பவேண்டும் எனத் தீர்மானிக்கவேண்டும். அந்த எண்ணம் தீயைப்போன்று பரவிச்சென்று அது எல்லோரையும் ஆட்கொள்ளவேண்டும்.

கண்ணகி உண்மையை அறியச் சிலம்பை உடைக்கின்றாள். அதே போன்று நாம் தற்போது உள்ள சமுதாயத்தில் சொற்பொழிவுகளை வெறுமனே நம்பிவிடாது அதன் உட்கருத்து என்ன என்பதை உடைத்துப்பார்க்கவேண்டும். அல்லாவிட்டால் விடிவு நம்மை வந்து சேராது. சமுதாய எழுச்சியை நாம் அனைவரும் நோக்கவேண்டும். அவ்வாறு நோக்கும் அனைவரும் நாம் ஒன்றாக இணையும் போது நம்முடைய பல திறமைகளை வெளிக்கொணரக்கூடியதாக இருக்கும்.

சனப்பலம், அறிவுப்பலம், பணப்பலம், அரசியல்பலம் போன்றவை நமது தேவையாக இருக்கின்றது. இந்தப் பலங்களை நாம் பெற ஒருவர் மாத்திரம் நினைத்தால் போதாது. ஒவ்வொருவரும் தினமும் நினைத்துப்பார்க்கவேண்டும்.

## பொறியியலாளர் செ. திலகராஜா
(கிழக்கு மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர்)
## முதன்மை அதிதி



சிலப்பதிகாரத்தைப் பார்க்கின்றபொழுது அஃறிணைப் பொருளான சிலம்பிற்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை வடித்திருக்கின்றார் இளங்கோவடிகள், அந்தளவுக்கு அதில் சிலம்பு முக்கியத்துவம் பெறுகின்றது. இதில் கண்ணகியின் பொறுமைதான் அவளுக்குப் பெருமை சேர்த்துள்ளது.

கண்ணகி கோவலன் கதை அனைத்துக்கணவன்மார்களுக்கும் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கின்றது. கண்ணகி கோவலனுக்கு வெறும் தலையாட்டியாக வாழவில்லை என்பதை அவள் கோவலனுக்குப் புத்திசொல்லும் வேளையிலே நாம் காணக்கூடியதாக உள்ளது.

மனைவியின் புத்திமதிகளைக் கேட்காத கோவலன் கொலையுண்டு இறக்கின்றான். இது மனைவியின் புத்திமதியைக் கேட்காத கணவன்மார்களுக்கு ஒரு சிறந்த பாடமாகும். இதுவரை காலமும் பொறுமை காத்த கண்ணகி இறுதியில் தனது பொறுமையை இழக்கின்றாள்; அரசனிடம் நீதி கேட்கின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திரு. மு. கோபாலரட்ணம்** (பிரதேச செயலாளர், திருக்கோவில்)
**சிறப்பு அதிதி**

தற்போது பழைய இலக்கியங்கள், நூல்கள் சகலவையும் இப்போதைய சந்ததிக்குத் தெரியாது. நவீன யுக இலக்கியங்களையே கற்றுவருகின்றார்கள். அத்தோடு தொழிநுட்ப முன்னேற்றங்கள் தான் கூடுதலாகக் காணப்படுகின்றது.

எமது குழந்தைகளுக்குக் கண்ணகி என்றால் யார்? என்று தெரியாது. பல இலக்கியங்களிலே வருகின்ற பாத்திரங்களைக் கதைக்கும் போது எமது குழந்தைகளுக்குத் தெளிவில்லாத தன்மைகள் காணப்படுகின்றன. ஆனால் இன்றைய சமூகம் இவ்வாறான விழாக்களை எடுக்கும்போது நிச்சயம் எமது தற்போதைய சந்ததியினருக்கு அது பிரயோசனமாக அமையும்.

பெண்கள் சமூகத்தில் வாழ்ந்த மிகவும் கஸ்டமான சூழ்நிலை காலங்காலமாக இருந்து வந்துள்ளது. அந்தவகையில் கண்ணகி என்ற பாத்திரத்தின் சகல அம்சங்களும் எந்த வகையிலே அதை நீக்கவேண்டும் எவ்வாறு பெண்களைக் காப்பாற்ற வேண்டும், சமூகம் எவ்வாறு இருக்கவேண்டும் போன்ற விடயங்களை தெளிவுபடுத்துகின்றன.

வைகாசித்திங்கள் என்றால் ஊரே விழாக்கோலம் பூணும். கண்ணகி விழா எடுக்கும் ஒரு வாரத்திற்கு முன்னரே ஊர் புனிதமான ஊராக மாறுகின்றது. அங்கே ஒழுக்கங்கள் மற்றும் எவ்வாறு குடும்பம் இருக்கவேண்டும் என்பதோடு சமையல் முறைகள் போன்றவை மாற்றப்படுகின்றன. இவ்வாறு ஒரு ஒழுக்கமான சமூகத்தை உருவாக்கக்கூடிய வரலாற்றுக்கதையாக இக் கண்ணகி கதை இருக்கிறது.

# அஞ்சலி



அமரர். அன்புமணி
06.03.1935 -12.01.2014

நாடறிந்த மூத்த எழுத்தாளர் அன்புமணி அவர்கள் (இரா.நாகலிங்கம்) கண்ணகி கலை இலக்கியக்கூடலின் உருவாக்கத்திலிருந்தே எம்மோடு இணைந்து செயற்பட்டவர். 18,19 யூன் 2011 மட்டக்களப்பு மகாஜனக்கல்லூரிக் கலை அரங்கில் நடைபெற்ற முதலாவது கண்ணகி கலை இலக்கிய விழாவின் தொடக்கவிழா (முதல்நாள் காலை அமர்வு)வில் வெளியிடப்பெற்ற, 'செங்கதிர்' கண்ணகி இலக்கியவிழாச் சிறப்பிதழின் வெளியீட்டுரையை அன்புமணி அவர்களே நிகழ்த்தினார். மேலும் 28,29 ஜூலை 2012இல் மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இரண்டாவது கண்ணகி கலை இலக்கியவிழாவில் வெளியிடப்பெற்ற - முதலாவது கண்ணகி கலை இலக்கிய விழாவின் நிகழ்ச்சித்தொகுப்புகள் அடங்கிய 'கூடல்' பரல் - 1 (கண்ணகி கலை இலக்கிய விழா மலர் 2012) இன் தொகுப்பாசிரியராகச் செயற்பட்டதோடு அதன் வெளியீட்டுரையையும் நிகழ்த்தினார். கண்ணகி கலை இலக்கியக்கூடலின் செயற்குழு உறுப்பினரான அன்னாரின் இழப்பு கண்ணகி கலை இலக்கியக்கூடலுக்குப் பாரிய இழப்பாகும். அன்னாருக்கு எம் அஞ்சலி.

– கண்ணகி கலை இலக்கியக்கூடல் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாநிதி. றமீஸ் அப்துல்லா
தலைவர், மொழித்துறை
தென்கிழக்குப்பல்கலைக்கழகம்

## சிறப்பு அதிதி உரை

இந்த வேளையில்

சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் எமது பாடசாலைக் காலத்திலே நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்ற தலைப்பிலே சம்மாந்துறைப் பிரதேச மட்டத்திலும், கல்முனை மாவட்ட மட்டத்திலும் கண்டியிலே நடைபெற்ற தேசியமட்டத்திலும் பேசி நான் முதற்பரிசு பெற்ற ஞாபகம் எனக்கு வந்தது. இப்போது அந்தப் பேச்சையே பேசி உங்களிடம் விடைபெறவேண்டும் என என்னுடைய நினைவாற்றலை பரிசோதித்த போது அது முடியாமலே போய்விட்டது. ஆனால் அந்தக் கண்ணகியின் கதையை அன்று நான் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்ற தலைப்பிலே பேசியபோது அன்று முஸ்லிம் சமூகத்திற்கு மத்தியிலே மிகவும் ரசிக்கத்தக்க கதையாக என்னுடைய பேச்சை அவர்கள் பார்த்தார்கள்.

கண்ணகியும் போவலனும் ஒன்று சேர்ந்திருந்த அந்தக் காட்சியை

**மாசறுபொன்னே! வலம்புரிமுத்தே! காசறுவிரையே! கரும்பே! தேனே! அரும்பறல்பாவாய்! ஆருயிர்பருந்தே பெரும்குடி வணிகன் மலையிடைப்பிறவா மணியே, அலையிடைப் பிறவா அமிழ்தே! யாழிடைப் பிறவா இசையே....**

என நான் பேசியபோது அவர்கள் என்னைப்பார்த்து அகமகிழ்ந்து அதே நேரம் கண்ணகி தன்திருக்கரத்தால் தன் மார்பகத்தைத் திருகி எறிந்து மதுரையை எரித்தாள் என்ற போது அழுத காட்சியைக் கண்டு நான் சந்தோசப்பட்டிருந்தேன். ஆனால் இன்று பல்கலைக்கழக மாணவனாக நான் வளர்ந்த பின்னர் இந்த சிலப்பதிகாரத்தைப் பார்க்கின்ற போது எனக்கு மிகுந்த பல சுவையான செய்திகளைச் சொல்லுவதற்கு விருப்பமாக இருக்கிறன்றது. ஆனால் ஐந்து சிறப்பதிதிகள் பேச இருக்கின்றார்கள் 25 நிமிடங்களுக்குள் என நினைத்தபோது 5 நிமிடங்களுக்குள் நான் பேசி ஆகவேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டேன். உண்மையிலே சிலப்பதிகாரத்திற்கு இருக்கின்ற கண்ணகி என்ற அம்சத்தோடு தொடர்புபடுத்தியிருக்கின்ற தெய்வீக அம்சத்தை பேசுவது ஒரு சார்பான அம்சமான இருக்க அதனுடைய இலக்கிய அம்சத்தை பற்றிப் பார்ப்பதற்கு நிறைய விடயங்கள் இருக்கின்றது. பாரதியாரை நாங்கள் ஏன் நவீனத்தினுடைய தொடக்கமாக கொள்கின்றோம் என்றால் அதிலும் நாங்கள் சில சந்தேகப்படுகின்றோம். 19ஆம் நூற்றாண்டிலே இருந்த கோபாலகிருஸ்ண ஐயரை பற்றி நாங்கள் பேசவேண்டி இருக்கின்றது. அவருடைய சரித்திரத்தைப்பற்றிப் பேசவேண்டியிருக்கின்றது. அப்போது தனிமனித இலக்கியத்தைப்பற்றி பேச வேண்டிய காலம் பாரதியாருக்கு முன்பே தோன்றியிருக்கின்றது என்று சொல்லுவார்கள். ஆனால் என்னைப் பெறுத்தவரையிலே இந்த தனிமனித இலக்கியத்தைப்பற்றிப் பேசுகின்ற காலம் சுமார் 6ம் நூற்றாண்டிலேயே சிலப்பதிகாரத்திலே ஆரம்பித்து விட்டது எனலாம். அதுமாத்திரமன்றி அரசையும் அரசகுடி மக்களையும் மாத்திரமே பேசிக்கொண்டிருந்த இலக்கியம் சாமான்ய மனிதர்களைப் பற்றிப்பேசவேண்டிய தொடக்கமும் 6ம் நூற்றாண்டிலே சிலப்பதிகாரத்திலே இருந்து ஆர்ம்பிக்கின்றது என்று சொல்லவேண்டி இருக்கிறது.

அது மாத்திரமன்றி ஒரு நவீனத்தினுடைய கதையை ஒரு நாவல் உடைய தொடக்கத்தை உரைநடை அற்ற செய்யுள் வந்த வடிவத்தினையும் நாங்கள் சிலப்பத்திகாரத்திலே இருந்து ஆரம்பிக்கின்றது என்று சொல்லவேண்டிஇருக்கிறது.

சிலப்பதிகாரம் நவீன இலக்கியத்தினுடைய முதற்குறிப்பாக அமைகின்றது என்ற செய்தியை நான் இங்கு சொல்ல வேண்டி இருக்கின்றது.

அதனுடைய வஞ்சிக்கண்டத்திலே வரந்தரு காதையை அடிப்படையாகவைத்து நான் நிறைவு செய்ய விரும்புகின்றேன்.

சோழநாட்டிலே தோன்றி பாண்டியநாட்டிலே துன்பப்பட்ட அவலப்பட்ட அந்தப் பெண் சேரநாட்டிலே சேரன் செங்குட்டுவன் மண்ணில் வீரநிலையை அடைகின்றான். ஒரு தனி மனிதனுடைய காவியமாக ஒருதனிமனிதனுடைய நவீனமாக விளங்குகின்ற இந்தக்காவியத்தைப்பற்றிய பல்வேறு பார்வைகள் தேவைப்படுகின்றது. உளவியல் நீதியான பார்வை சமூகவியல் ரீதியானபார்வை இந்தக் காவியத்தைப்பற்றி பேசவேண்டிய நிலைக்கு நாங்கள் வந்திருக்கின்றோம். வெறும் காவிய மனோநிலையில் இருந்து விடுபட்டு இது மிகப்பெரிய சமூகவியல் இலக்கியம் என்ற அடிப்படையில் நாங்கள் பேசவேண்டி இருக்கின்றது. இந்த சமூகத்திலே பெரும்பாலும் பேசப்படுகின்ற இந்தப் பெண்களுடைய - பெண்கள் துன்பப்படுகின்ற அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் சிறுமைப்படுத்தப்படுகின்ற நிலைமையை இந்தச் சிலப்பதிகாரம் எப்படிப் பார்க்கின்றது. எவ்வளவு தூரம் இந்த பெண்கள் ஆண்களைப் பற்றிய அபிப்பிராயத்தை கொண்டிருக்கின்றார்கள் என்ற செய்தியை நாங்கள் படிக்கவேண்டியிருக்கின்றது.

இது ஒரு வகையிலே ஆணாதிக்கரீதியான சிந்தனையாக இருந்தாலும் பெண்களுடைய இந்தத் தாய்மனத்தை, அது எவ்வாறு பிரதிபலித்துக்காட்டுகின்றது என்ற செய்தியை நாம் மற்றவர்களோடு பேசவேண்டி இருக்கின்றது. ஆகவேதான் நான் சமய நிலைகளுக்கப்பால் இந்தப் பெண்களுடைய பிரச்சினைகளைப் பற்றிப்பேசுகின்ற பெண்களின் வாழ்க்கைமுறையில் ஏற்படுகின்ற செய்திகளைப்பற்றி மற்றவர்களுடன் நாங்கள் எவ்வாறு கலந்துபேசவேண்டும் என்ற செய்தியை சொல்ல இந்த இலக்கியத்தைப்பற்றிப் பேசவேண்டி இருக்கின்றது.

அது மாத்திரமன்றி இந்த நாட்டைப் பொறுத்த வரையிலே பௌத்தர்களுடைய இலக்கியத்தினுடைய முதற்படியாக பௌத்த சமயமும் சமண சமயமும் மேலோங்கி இருந்த காலகட்டத்திலே தோன்றிய இந்த அற்புதமான இலக்கியத்தைப்பற்றியும் நாங்கள் பேசவேண்டி இருக்கின்றது. எனவே இந்த சிலப்பதிகாரத்தையும் அதனைத் தொடர்ந்து வந்த மணிமேகலையும் பற்றி பேசவருகின்ற நாங்கள் தனியே தமிழ்ச்சகோதரர்களுக்கு மத்தியிலே மாத்திரம் பேசி நிற்காது சிங்கள சகோதரங்களையும் சேர்த்து அவர்களுக்கு மத்தியிலும் நாங்கள் கொழும்புபோன்ற இடங்களிலே இந்த செய்திகளைக் கட்டாயம் சொல்லியே ஆகவேண்டும் என்பதை நான் இந்தக் கண்ணகிகலை இலக்கியக்கூடல் அமைப்பினருக்கு வற்புறுத்திக்கொண்டு இறுதியாக நான் இன்னும் பல விடயங்களைப்பேச ஆசைப்பட்ட சூழ்நிலையில் இறுதியாக இந்த வாழ்க்கையைப்பற்றி வாழ்க்கையினுடைய எண்ணப்பாட்டைப்பற்றி இளங்கோ என்ன சொல்லுகிறார் என்பதை மாத்திரம் கூறி உங்களிடம் இருந்து விடைபெறப்போகின்றேன்.

நாங்கள் பல காவியங்களை எடுத்துப்பார்க்கின்றபோது சில செய்திகளை மாத்திரம்தான் கண்டுகொள்ள முடியும் ஆனால் இந்தக்காவியத்தை எடுத்துப்பார்க்கின்றபோது அரசர்களுடைய, மக்களுடைய, வியாபாரிகளுடைய, கள்வர், தோழர்கள், பெண்கள் போன்றோரின் செய்திகள் என பல்வேறு விதமாக அந்தக்கால கட்டத்தில் அந்த நாடு எவ்வாறு வணிக நிலையில் மேம்பட்டிருந்தது என்ற செய்தியை நாங்கள் படிப்பதற்கு இந்தச் சிலப்பதிகாரம் ஒரு அற்புதமான காவியமாக அமைகின்றது. குறிப்பாக இசை பற்றிய செய்திகளை அறிவதற்கு இதிலே நாங்கள் பல விடயங்களை அறிந்து கொள்ளமுடிகின்றது. இவ்வளவெல்லாம் பேசிய இளங்கோவடிகள் கடைசியாக இப்படித்தான் சொல்லி இந்தக்காவியத்தை நிறைவு செய்திருக்கின்றார். அந்த இடத்தை மாத்திரம் ஞாபகப்படுத்தி எவ்வளவு தூரம் சமய சமரசம் மிக்க ஒரு காவியமாக சிலப்பதிகாரம் திகழ்கின்றது என்பதை ஞாபகப்படுத்தி நான் விடைபெற விரும்புகின்றேன். எனக்கு முன்னர் பேசிய ஐயா அவர்கள் ஒருவிடயத்தை அதாவது மதுரைக்கிடைப்பட்ட தீ யாரை எரிக்கவேண்டும் என்பதைச் சொன்னார்கள். அதே செய்தியை இஸ்லாம் சமயம் சொல்கின்றது. இஸ்லாமிய சமயத்திலே யுத்தம் புரிகின்ற போது பசுக்கள், இளம்பெண்கள், முதியோர்கள், நோயாளிகள் போன்றவர்களை ஒதுக்கி நீங்கள் யுத்தம் செய்யுங்கள் என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

இஸ்லாமிய சமயத்தினுடைய அடிப்படையான ஒரு விடயம் இந்த வாழ்க்கை நிலையற்றது. அடுத்த உலகத்திற்கு நீங்கள் தயார் செய்யுங்கள் என்பதை இளங்கோவடிகள் மிக அற்புதமாக இதைச் சொல்லுகிறார். பிறருக்குக் கவலை தருவதை விட்டுவிடுங்கள், தெய்வம் உண்டு என்பதைத் தெளிவாக உணருங்கள்.

**கடவுளை உரைத்தோரைப் பேணுங்கள்**
**பொய் சொல்லப்பயப்படுங்கள்**
**கோள் சொல்லாதீர்கள்**
**மாமிசம் உண்பதைத் துறந்து விடுங்கள்**
**உயிர்களைக் கொல்லாதீர்**
**தானங்கள் செய்க**
**யாத்திரைகள் மேற்கொள்ளுக**
**பிறர்செய்த உதவியை மறக்காதீர்**
**கெட்ட சினேகத்தை ஒதுக்குங்கள்**
**பொய்சாட்சி சொல்லாதீர்கள்**
**சத்தியத்தை விட்டுவிடாதீர்கள்**
**பெற்றோர்களுடைய சபைகளுக்குச்செல்லுங்கள்**
**கெட்டவர்கள் கூட்டத்திற்கு தவறிக்கூடப் போய்விடாதீர்கள்**
**பிறர்மனைவியை விரும்பாதீர்கள்**
**துன்பமுற்ற உயிர்களைக்காப்பாற்றுங்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீட்டையும் அரசசாலைகளையும் காப்பாற்றுங்கள்**
**தீயவற்றை நீக்குங்கள்**
**களவு காமம் பொய் பயனற்ற பேச்சு போன்றவற்றை ஒதுக்குங்கள்**
**இளமை செல்வம் உடல் இவை நிலையில்லை என்பதை உணருங்கள்**

இவை இருக்கும் நாள்வரை நல்லதைச் செய்து நாம் செல்ல இருக்கின்ற தேசத்திற்கு உறுதுணையானவற்றைச் செய்யுங்கள் அகன்ற உலகத்தில் வாழ்வீர் என இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் மூல் சொல்லி வைக்கின்றார்.



## பொறியியலாளர் திரு. த. பத்மராஜா (சிறப்பு அதிதி)

'சிலப்பதிகாரம் நூலாக இருப்பதை விட இவ்வாறான நிகழ்வின் மூலம் தான் மக்களைச் சென்றடைகின்றது. இச்சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தரும் இவ் விழா எங்கள் மண்ணில் தொடர்ந்து வரவேண்டும். மேலும் இவ்விழாக்குழுவினர் எமது பொக்கிஷங்கள் மறைந்து விடாமல் காப்பற்ற வேண்டும்."



இயல் அரங்கில் அவையோர்



நன்றியுரை
**பொன். பேரின்பம் (ஆசிரியர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16, ஜூன் 2013 ஞாயிற்றுக்கிழமை,

## இரண்டாம் நாள் காலை அமர்வு.

## "ஆய்வரங்கு" - " கண்ணகி - ஓர் பன்முகப் பார்வை"

**அரங்கு** : **"இளங்கோவடிகள் அரங்கு."**

**காலம்** : **16.06.2013** ஞாயிற்றுக்கிழமை காலை **10.00** - பி.ப **01.40**

**இடம்** : ஆலையடிவேம்பு பிரதேச சபை கலாசார மண்டபம். அக்கரைப்பற்று.

**தலைமை** : **செல்வி. க.தங்கேஸ்வரி.** பீ.ஏ. தொல்லியல்



ஆய்வரங்கில் ஆய்வாளர்கள்



அறிமுகவுரை

**திரு. செ. தர்மபாலன்**

(முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர். திருக்கோவில்)



ஆய்வரங்கத் தலைமை

**செல்வி. க. தங்கேஸ்வரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆய்வரங்கத் தலைமையுரை



**செல்வி.கதிராமன் தங்கேஸ்வரி**
**பீ.ஏ.(தொல்பொருளியல் சிறப்பு)**

கண்ணகி கலை இலக்கியக்கூடல் ஏற்பாட்டில் கண்ணகி கலை இலக்கிய விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு இளங்கோவடிகள் அரங்கிலே ''கண்ணகி ஓர் பன்முகப் பார்வை'' என்ற கட்டமைப்பிற்குள் நடைபெறுகிறது. இவ் அரங்கிலே மதிப்பீடு செய்யவுள்ள பேராசிரியர் செ.யோகராசா அவர்களே! பேராசிரியர் மகேஸ்வரன் அவர்களே! ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்க வந்திருக்கும் சிரேஷ்ட விரிவுரையாளர்களான செல்வி.அனுசியா சேனாதிராஜா, திருமதி ரூபிவலன்ரினா பிரான்சிஸ், திருமதி சாந்திகேசவன் மற்றும் ஆய்வாளர் நவநாயகமூர்த்திக்குப் பதிலாக வந்திருக்கும் செல்வி கவிதா உங்கள் அனைவருக்கும் எனது பணிவான வணக்கம். முதன்மை, சிறப்பு அதிதிகளே, பேராளர்களே, விழாக்குழுவினர்களே, மண்டபத்தில் நிரம்பியிருக்கும் சபையோர்களே, அறிஞர்களே இணைப்பாளர் தர்மபாலன் அவர்களே வணக்கம்.

இன்று நவீனங்களின் வளர்ச்சியினால் மரபுகள் மாறுகின்றன. வழிபாட்டு முறைகள் மாற்றமடைகின்றன, கலாசாரப்பண்புகள் திரிபுபடுகின்றன. இவற்றையெல்லாம் பேணவேண்டும், பாதுகாக்கவேண்டும். அதே நேரம் கிழக்கிலங்கைத் தமிழ் சமூகத்தை ஒரு பண்பாட்டுத்தளத்தில் ஒன்றிணைத்து அறிவுபூர்வமாக அவர்களை ஆற்றுப்படுத்தவேண்டும் என்ற நம்பிக்கையில் இக்கண்ணகி கலை இலக்கியவிழாவை தொடர்ச்சியாக நடாத்த முனைந்துள்ளோம். 2011ல் மட்டக்களப்பிலும் 2012ல் புதுக்குடியிருப்பிலும், 2013ல் இம் முறை அக்கரைப்பற்றிலும் நடாத்துகின்றோம்.

கிழக்கிழங்கையின் பண்பாட்டு அம்சங்களில் முக்கியமானது கண்ணகி அம்மன் வழிபாடும் கண்ணகி விழாவும்.

**''ஆடித்திங்கள் பேரிருள் பக்கத்து**
**அழல் சேர் குட்டத்து அட்டமி ஞாயிறு**
**வெள்ளி வாரத்து ஒள்ளொளி உண்ண**
**உரைசால் மதுரையொடு அரசு கேடுறும்."**

என்பது சிலப்பதிகாரச் செய்யுள்

அதாவது மதுரை தீப்பற்றி எரிவது பற்றிய தீர்க்கமான சொல் ஒன்றின்படி மதுரை மூதூர் தீப்பற்றி எரிந்தது. இது தெய்வத்தின் சீற்றத்தினால் விளைந்தது என நம்பினர். ஒரு முலை குறைந்த திருமா பத்தினிக்கு உயிர்ப்பலி ஊட்டப்பட்டது. மதுரையின் அவலமும் போக்கப்பட்டு சூழ்ந்திருந்த இருளும் நீக்கப்பட்டது. (**''சிலப்பதிகாரம் அழற்படு காதை வரி 4270 - 4271")**

அன்று நடந்தது மதுரை எரி ஊட்டப்பட்டதோடு முடியவில்லை. கண்ணகி மக்கள் தெய்வமாகிவிட்டாள். கொற்றவை வழிபாட்டுடன் தொடங்கிய சக்தி வழிபாடு பத்ததி முறையிலே பரிணமித்து கண்ணகி வழிபாட்டுடன் இரண்டறக்கலந்து விட்டது. பால், பழம் பரப்புமடை என்பவற்றுடன் மாதருடன் கூடி மஞ்சள் நீராடி அன்போடு பரவினால் அடியார்க்கெல்லாம் அருள்பாலிக்கும் அம்மனாய் வடிவாய் இருக்கும் மாது கண்ணகை என்பதற்கமைய கண்ணகி கொண்டாடப்படுகிறாள். இவளின் பல்வேறு அம்சங்களையும் நிலைநிறுத்தி இந்தக் கண்ணகி கலை இலக்கிய விழா கொண்டாப்படுகிறது. ஆய்வரங்கு நிகழ்த்தப்படுகிறது.

## முதலாவது ஆய்வரங்கிலே

'கண்ணகி இலக்கியங்களில் கிழக்கின் பண்பாடு'
'கண்ணகி நம்பிக்கைகள் ஓர்பொது நோக்கு
கிழக்கிலங்கைச் சமூகத்தில் சிலப்பதிகாரம் கூறும் வாழ்வியல்'
'அந்நிய அறிஞர்கள் தேடலில் கண்ணகி
போன்ற தலைப்புகளில் ஆராயப்பட்டது.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது ஆய்வரங்கிலே

'சிலப்பதிகாரத்தில் கண்ணகி'

'கண்ணகி வழக்குரையில் கண்ணகி'

'கோவலன் கதையில் கண்ணகி'

'சிலம்பு கூறலில் கண்ணகி'

என வெவ்வேறு இலக்கிய நூல்களில் கண்ணகியின் தன்மைகள் ஆராயப்பட்டன. இம்முறை இவற்றை எல்லாம் விடுத்து வேறு முறைகளில் ஆராயப்பட உள்ளது.

இம்முறை முன் கூறிய எல்லாவற்றையும் விட வேறுபட்டு கண்ணகியின் பண்பு, கற்பு என்பதற்கமைய கொண்டாடப்படும் அவரின் பண்புகள், இல்லறம், அவளின் அருளினால் மக்கள் பெற்ற, பெறும் பயன்கள், பலன்கள் அனுபவங்கள் போன்றன ஆராயப்படவுள்ளன.

எனவேதான்

(அ) 'சிலப்பதிகாரக் கண்ணகியின் இல்லறம்' என்று தலைப்பு எடுக்கப்பட்டது. இது தலைப்பாய் இருந்தாலும் கண்ணகியின் இல்லறம் உலகிற்கு எதனை உணர்த்துகிறது என்ற விடயமே இங்கு ஆராயப்படும். எல்லாவற்றையுமே இழந்து போன நிலையில் மீண்டும் வாழவேண்டும் என்ற துணிவிலே கணவனுடன் பாண்டிநாடு வருகிறாள். இப்படி பெண்களுக்கு விழிப்புணர்ச்சி ஊட்டும் வகையில் அமையும். இது தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் ரகுபரன் செய்ய இருந்தது. தற்போது அவரது பிரதிநிதியான சுபராஸ் அவர்கள் ரகுபரன் அவர்களின் ஆய்வினைச் சமர்ப்பிப்பார்.

(ஆ) 'மாதவி மணிமேகலை ஆகியோரின் வாழ்வியல்' - இது தலைப்பு எனினும் இவர்கள் இருவரதும் வாழ்க்கை உலகிற்கு எதனை உணர்த்துகிறது என்பது பற்றியே ஆராயப்படும். இதனை கிழக்குப்பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் திருமதி ரூபிவலன்ரினா பிரான்சிஸ் முன்னெடுப்பார்.

(இ) கண்ணகி வரலாறு நடந்தது தமிழ் நாட்டில். தமிழ் நாட்டுக்கு உரித்தான கண்ணகி இன்று எம்மவள் ஆகிவிட்டாள். இன்று கண்ணகி பற்றிய நிலைப்பாடு தமிழகத்தில் எப்படி உள்ளது என்பதை உணருமுகமாகவே இதனை திரு.நவநாயகமூர்த்தி செய்வார் என்று கொடுக்கப்பட்ட போதும் கட்டுரையை அவரது மகள் ந.கவிதா படிக்கவுள்ளார். நவநாயகமூர்த்தி நிறைய தேடலில் ஈடுபடும் ஒருவர் என்பதால் அவருக்கு இத் தலைப்பு கொடுக்கப்பட்டது.

உதாரணமாக 'தமிழகத்தில் கண்ணகி வழிபாடு' என்பது இன்று அருகிவிட்ட நிலையில் வேறு பெயர்களால் நடைபெறுகிறது. மதுரையிலே திருவாச்சியூரில் அமைந்திருக்கும் காளி மதுரகாளி எனப்படுகிறாள். கண்ணகி கோபமாக திருவாச்சியூர் வந்தபோது அங்கு செல்வி அம்மன் குடிகொண்டிருந்தாள். அவளிடம் இரவு தங்கிப் போக கண்ணகி இடம் கேட்டாள். மாயன் என்ற மந்திரவாதி செல்வி அம்மனைக் கட்டி வைத்துள்ள விடயமும் செல்வி அம்மன் மலையில் இருக்கிறாள் என்ற விடயமும் அறிகிறாள். மாயனை வதைத்து அழித்தொழிக்கின்றாள். இப்படித்தான் தமிழக நிலமை

(உ) அடுத்து கிழக்கிலங்கையில் கண்ணகி வழிபாட்டின் பிரதிபலிப்புக்கள் என்ற தலைப்பு. இது தற்கால மக்கள் வாழ்வியலுடன் சம்பந்தமானது. மக்கள் காவடி, கற்பூரவட்டா என பல விதமான நேர்த்திகள் செய்கிறார்கள். இப்படியெல்லாம் செய்வதால் சமூகத்தில் மக்களிடம் ஏற்பட்ட பிரதிபலிப்புகள், அனுபவங்கள் பற்றிய விதமாக அமையும். இதனைத் தென்கிழக்குப்பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் செல்வி அனுசூயா சேனாதிராசா செய்வார்.

(ஊ) 'வடஇலங்கையில் கண்ணகி வழிபாடு - என்பது தலைப்பு' எனவே வடக்கிலே அங்கணாங்கடவை மூலம் வந்த கண்ணகி வழிபாடு கிழக்கிலே வேரூன்றி உள்ளது. வடக்கிலே கண்ணகிகோயில் இருந்த இடங்களுக்கெல்லாம் என்ன நடந்தது என்பது பற்றி கிழக்குப்பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சாந்திகேசவன் எடுத்துரைப்பார்.

இவ் ஆய்வரங்கிலே பெரும்பாலும் இந்தப் பிரதேசத்தை சேர்ந்த ஆய்வாளர்கள் பங்குபெறவேண்டும் என்ற காரணத்தாலே தான் கூடியளவு இப்பிரதேச ஆய்வாளர்களைத் தெரிவு செய்தோம். இவ் ஆய்வரங்கிலே பங்கு பற்றும் எல்லோருமே முது நிலை விரிவுரையாளர்கள். அவர்கள் மலைகள் என்றால் மதிப்பீடு செய்யவுள்ள பேராசிரியர்கள் சிகரங்கள் எனலாம். எனவே இவ் ஆய்வரங்கு பயனுள்ளதாக அமையும் என எதிர்பார்க்கின்றோம்.

எதிர்காலத்திலே கண்ணகி வழக்குரையை ஆய்வு செய்யவேண்டும் எனப் பேராசிரியர் மௌனகுரு நேற்று தலைமையுரையில் கூறியிருந்தார். எனவே ஆய்வு செய்யப்படவேண்டியது வழக்குரை மட்டுமல்ல சிலப்பதிகாரத்தில் கூறப்படும் வரலாறு வழக்குரையில் வேறுவிதமாக உள்ளதையும் ஆய்வு செய்யவேண்டும். முல்லைத்தீவில் உள்ள ஏட்டுப்பிரதியில் வேறு விதமாக உள்ளது. எதிர்காலத்தில் இவை எல்லாமே ஆய்வு செய்யப்படவேண்டும். பெருமதிப்பு மிக்க ஆய்வாளர்களே உங்களுக்குத் தந்த நேரத்திற்குள்ளே கடுகு சிறிது காரம் பெரிது என்பதற்கமைய உங்கள் திறமையைக் காட்டுமாறு வேண்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுரை 1

# சிலப்பதிகாரக் கண்ணகியின் இல்லறம்

க.இரகுபரன்,
முதுநிலை விரிவுரையாளர்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

சிலப்பதிகாரப் பாவிகங்களுள் ஒன்று ***உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்*** என்பது. பொதுமக்கள் மத்தியிலும் கண்ணகி பத்தினித் தெய்வமாகவே போற்றப்படுகிறாள். இல்லறத்தை மாசுமறுவின்றி நடத்துபவளே பத்தினி எனப்படுபவள். வேறு வகையிற் சொல்வதானால் கற்புடன் நடந்து கொள்பவள் பத்தினி. கற்பு என்ற சொல்லுக்கு உரிய நேர்ப்பொருள் கொள்கை என்பது. அவ்வகையில் இல்லறத்துக்குரிய கொள்கைகளினின்றும் வழுவாது நடந்து கொள்பவள் பத்தினி எனலாம்.

## திருமணம்

இல்லறம் என்பது திருமணத்திலேயே ஆரம்பிக்கிறது. சிலப்பதிகார ஆசிரியர் தம் காவியத்தை கோவலன் - கண்ணகி திருமணத்தோடேயே ஆரம்பிக்கிறார். அக்காலத்தைய இயல்பின்படி கண்ணகி இளம்வயதிலேயே திருமணம் முடித்து வைக்கப்படுகிறாள். திருமணத்தின் போது அவளுக்கு வயது பன்னிரண்டு;கோவலனுக்கு வயது பதினாறு. கடல் வாணிபத்தில் ஈடுபடுகின்ற பெருஞ் செல்வன் ஒருவனின் மகள் கண்ணகி. கோவலனும் அப்படியே.

கண்ணகி அழகாலும் ஒழுக்கத்தாலும் நல்ல பெயர் எடுத்தவள்.

**"போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் (அருந்ததியின்) திறம் இவள் திறம் என்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக் காதலாள்"**

என்று தன் சூழலிலே புகழப்படுபவள்.

கோவலனின் ஒழுக்கம் பற்றிச் சிலப்பதிகார ஆசிரியர் எதுவும் பாராட்டியதாகத் தெரியவில்லை. ஆனால் மிக அழகானவன் என்று ஊரிலுள்ள பெண்கள் மத்தியில் பேரெடுத்தவன்; அவர்களால் விரும்பப்படுபவன் என்கிறார் இளங்கோ.

**"மண்தேய்த்த புகழினான்; மதிமுக மடவார்தம்
பண்தேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டி
'கண்டேத்தும் செவ்வேள்'என்று இசைபோக்கி காதலால்
கொண்டேத்தும் கிழமையான் கோவலன் என்பான்"**

இவர்களது திருமணம் காதல் திருமணமா பேச்சுத் திருமணமா என்று இளங்கோ வெளிப்படையாகக் கூறவில்லை; ஆனால் அவர்களது காதல் பற்றி எதுவும் கூறாததாலும் அவர்களது திருமண நடைமுறை பற்றிக் கூறுவனவற்றை வைத்துக் கொண்டும் அது பேச்சுத் திருமணமே என்பதை ஊகிக்கலாம். இருவரது பெற்றோரும் அவர்களுக்குத் திருமணம் செய்துவைக்க விரும்பினார்கள். திருமணம் மிகவும் ஆடம்பரமாக நடந்தது; முதிய அந்தணர் ஒருவரால் ஓமம் வளர்த்து வைதிக முறைப்படி அத்திருமணம் நடந்தது.

## தாம்பத்திய வாழ்க்கை

ஏழடுக்கு மாளிகையொன்றின் நான்காவது மாடியில் புதுமணத் தம்பதியான அவர்கள் தங்கவைக்கப்பட்டார்கள்; அங்குதான் அவர்களது முதலிரவு; பள்ளியறையிலே அவர்கள் இருவரும் சூரியனும் சந்திரனும்போல விளங்கினார்கள். மல்லிகைப் பூவால் கட்டப்பட்ட மாலையைக் கோவலன் அணிந்திருந்தான்; கண்ணகி கழுநீர்ப் பூமாலை அணிந்திருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எது மல்லிகைமாலை எது கழுநீர்மாலை என்று தெரியாதவகையில் மாலைகள் இரண்டும் கசங்கி உருவழியும்படியாக அவர்கள் இருவரும் கலந்தார்கள். ஒரு நிலையில், தன் கையைச் சற்றே நெகிழ்த்தியவனாக, கோவலன், தீராக்காதலோடு, கண்ணகியின் முகம் நோக்கி நலம் புனைந்துரைக்கின்றான்; அது மிக நீண்டதாக - கண்ணகியிடம் அவன் அடைந்த திருப்தியின் பிரதிபலிப்பு என்னும் படியாக- மிகுந்த கவிதைத் தன்மை உடையதாக அமைகிறது. பதிலுக்குக் கண்ணகி பேசியதாக இளங்கோ காட்டவில்லை; பேசாமடந்தையாகவே இருந்தாள் போலும்! தினமும்,

**"உலவாக் கட்டுரை பலபாராட்டி**
**தயங்கிணர்க்கோதை தன்னொடும் தருக்கி**
**வயங்கிணர்த் தாரோன் மகிழ்ந்து"**

இருந்தான். எனவே இருவரது தாம்பத்திய வாழ்க்கையில் எந்தக் குறையும் இல்லை என்பதை உணரலாம். 'தருக்கி'என்ற சொல்லாட்சி அவதானிக்கத் தக்கது. தருக்குதல் என்றால் சண்டை செய்தல் - போர் செய்தல். அது கலவிப்போர். இருவரும் கலவியில் முழுமையாக ஈடுபட்டனர் என்பது கருத்து. இவ்வாறாக இருந்துவரும் நாட்களிலே இவர்கள் முறையான இல்லறத்தை ஆரம்பிக்க வேண்டும் என்ற நோக்கில் - அதாவது அறம் செய்தல், விருந்துபசாரம் செய்தல் முதலான இல்லறக் கடமைகளை இவர்கள் சுயமாகவும் சுதந்திரமாகவும் செய்யவேண்டும் என்றநோக்கிலேகோவனலதுதாய், அவர்கள்தனியொருவீட்டிலே தனிக்குடித்தனம் நடத்த ஏற்பாடு செய்தாள். அங்கே முறையான இல்லறத்திலே சில ஆண்டுகள் கழிந்தன.

## பிரிவு

அவ்வாறு அவர்கள் வாழ்ந்துவரும் காலத்திலேதான் மாதவியின் அரங்கேற்றம் வருகின்றது. முறையாக நாட்டியத்தையும் பிற கலைகளையும் பயின்ற ஆடல்குல மகளும் அழகியுமான மாதவியின் அரங்கேற்ற முடிவில் அவள் ஏலம் விடப்பட, அவளை ஆயிரத்து எட்டுக் களஞ்சு பொன் கொடுத்து தன்னுடையவளாக்கினான் கோவலன். அவளுடைய வீட்டிற் சென்று தங்கினான்.

**"மாதவி தன்னொடு**
**அணைவுறு வைகலின் அயர்ந்தனன் மயங்கி**
**விடுதல் அறியா விரும்பினன் ஆயினன்"**

அன்றைய காலச் சூழ்நிலையில் ஆடவர் பரத்தையரை நாடிச் செல்லுதல் குற்றமான விடயமல்ல; பரத்தையரிடம் செல்வதும் அவர்களை விட்டுவிடுவதும் சாதாரண விடயம்- அது விட்டுவிட வேண்டிய உறவு. ஆனால் கோவலன் ***விடுதல் அறிய விரும்பினன் ஆயினான்.***

## பிரிவு நிலையில் கண்ணகி

தன் அழகு தனக்குரியதல்ல கணவனுக்கு உரியது என்ற நினைப்பில் வாழ்பவளாகவே கண்ணகியை இளங்கோ சித்திரிக்கிறார். கணவன் தன்னுடன் இருந்த காலத்தில் தன்னை நன்கு அலங்கரித்துக் கொண்ட கண்ணகி, கணவன் தன்னைப் பிரிந்த சோகத்தால் தன்னை அலங்கரிப்பதையே மறந்து சோகமே வடிவானவளானாள்.

**"அஞ்செஞ் சீறடி அணி சிலம்பு ஒழிய**
**மென்துகில் அல்குல் மேகலை நீங்க**
**கொங்கை முன்றில் குங்குமம் எழுதாள்**
**மங்கல அணியின் பிறிதணி மகிழாள்**
**கொடுங்குழை துறந்து வடிந்து வீழ் காதினள்**
**திங்கள் வாள்முகம் சிறுவியர்ப்பு இரிய**
**செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்ப**
**பவள வாள்நுதல் திலகம் இழப்ப**
**தவள வாள்நகை கோவலன் இழப்ப**
**மையிருங் கூந்தல் நெய்யணி மறப்ப**
**கையறு"**

நெஞ்சத்தினளானாள் கண்ணகி. சம்பிரதாயப்படி அணிய வேண்டிய மங்கலஅணி (தாலி) தவிர வேறு எதனையும் அவள் அணிந்தாளில்லை. கோவலன் பிரிந்தபின்பு அவளுடைய உதட்டில் புன்னகை உதித்ததில்லை. அதனைக் கூறவந்த இளங்கோ முத்துப் போன்ற ஒளிபொருந்திய நகையை – சிரிப்பை கண்ணகி இழந்தாள் என்று கூறவில்லை; 'தவள வாள் நகை கோவலன் இழப்ப' – என்று கோவலனது இழப்பாகவே அதனைக் கூறுகின்றமை அவதானிக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெய்வம் தொழாக் கண்ணகி

**"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை"**

என்பது வள்ளுவர் கூற்று. *கணவனே கண்கண்ட தெய்வம்* என்பது உலக வழக்கு. இவ்வாறான கருத்து நிலைக்கு அமைவானவளாகவே கண்ணகி சித்திரிக்கப் பெறுகிறாள்.

கண்ணகியைப் பிரிந்த கோவலன் மீண்டும் வந்து சேர்வதற்கு கண்ணகியின் தோழி தேவந்தி ஒரு உபாயம் சொல்கிறாள்.

**"சோமகுண்டம் சூரிய குண்டம் துறைமூழ்கி**
**காமவேள் கோட்டம் தொழுதார், கணவரொடு**
**தாம் இன்புறுவர் உலகத்துத் தையலார்"**

என்ற அந்த உபாயத்தைக் கேட்ட கண்ணகி அதிகம் பேசவில்லை. 'பீடு அன்று' – அது எனக்குப் பெருமையானது அல்ல என்று ஒருவார்த்தையில் மறுத்துரைக்கும் கொள்கைப் பிடிப்புள்ளவளாகவே கண்ணகி சித்திரிக்கப்படுகிறாள்.

## கோவலன் மீண்டு வந்த நிலையில் கண்ணகி

மாதவியோடு விடுதல் அறியா விருப்பினனாகக் கிடந்த கோவலன் சந்தர்ப்பவசத்தால் - புரிந்துணர்வின்மையால் அவளைப் பிரிய வேண்டி நேர்கிறது. பிரிந்தவன் தன் இல்லம் நாடி வந்தான். வந்தவன் நேரே படுக்கையறை சென்றான்.கண்ணகியின் வாடிய மேனியைக் கண்டு வருத்தமுற்றான்.

**"சலம்புணர் கொள்கைச் சலதியொடு ஆடி**
**குலம்தரு வான்பொருட் குன்றம் தொலைத்த**
**இலம்பாடு நாணுத்தரும் எனக்கு"**

என்று கழிவிரக்கப்பட்டான். அந்நிலையில் கண்ணகி தன் வருத்தத்தை வெளிப்படுத்தாதவளாகத் தன் கணவன் மீண்டு வந்ததால் உண்டான மகிழ்ச்சியோடு 'சிலம்பு உள்ளது – எடுத்துக் கொள்ளுங்கள்' என்றாள்.

வந்த கோவலன் தன் குலத்தரு வான்பொருட் குன்றம் தொலைந்தமை பற்றியே அதிகம் கவலை கொண்டான். ஆகவே அதை மீளப்பெறுவதற்கு வியாபாரத்துக்கான முதலாக தன்னிடம் இருந்த சிலம்பை எடுத்துக் கொள்ளும்படி கூறினாள் கண்ணகி. அவள்கணவனின் குறிப்பறிந்து நடந்தாள்.

அவனும்

**"சேயிழை கேள்,**
**இச் சிலம்பு முதலாக சென்ற கலனொடு**
**உலந்த பொருள் ஈட்டுதல் உற்றேன், மலர்ந்தசீர்**
**மாட மதுரையகத்துச் சென்று; என்னோடு இங்கு**
**ஏடலர் கோதாய் எழுக"**

என்றான்; அவளும் எழுந்தாள். இருவரும் விடிவதற்கு முன்பாகவே ஊரைவிட்டுப் புறப்படலாயினர். இங்கும் கோவலன் பேச்சுக்கு மறுப்புரை பேசாதவளாகவே கண்ணகி நடந்து கொள்வதை இளங்கோ காட்டுகிறார்.

## பழிமொழியும் புகழ்மொழியும் தாங்காக் கண்ணகி

ஊரைவிட்டுப் புறப்பட்டு இருவரும் மதுரைநோக்கி நடந்தனர். வழியிலே கவுந்தி என்னும் சமணப் பெண் துறவி அவர்களுக்கு வழித்துணையாக வாய்த்தாள். மூவரும் காட்டுவழியே செல்கையில் பரத்தையொருத்தியும் பயனில்லாதன பேசும் காமுகன் ஒருவனும் எதிர்ப்பட்டனர். அவர்கள் கவுந்தியடிகளிடம் கண்ணகி, கோவலன் இருவரையும் சுட்டி "காமனும் தேவியும் போலும் இவர் ஆர்?"என வினவினர். அதற்கு கவுந்தியடிகள் இயல்பான அன்புணர்வோடு "என் மக்கள் காணீர்"என்றார். அதுகேட்ட அவர்கள் அவர்களைச் சீண்டும் நோக்கோடு "ஒருவயிற்றிலே பிறந்தவர்கள் கணவன் மனைவியாக வாழ்வதும் உண்டோ?"என்று இடக்கு முடக்காகப் பேசினார்கள். *அத்தீமொழி கேட்டுச் செவியகம் புதைத்து காதலன் முன்னர்க் கண்ணகி நடுங்கினாள்* என்று அவளது மெல்லியல்பைக் காட்டுகிறார் இளங்கோ.

பழிமொழி கேட்டுப் பதைப்பது போலவே அதிக புகழ் மொழிக்கும் அவள் நாணுகிறாள். மதுரை செல்லும் வழியிலே ஐயை கோட்டத்திலே மூவரும் இளைப்பாறினர். அங்கே நடந்த சடங்கிலே சாலினி என்பவள் தெய்வமேறிய நிலையிலே, கண்ணகியைச் சுட்டி,

"இவளோ கொங்கச் செல்வி; குடமலையாட்டி;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தென்தமிழ்ப்பாவை செய்தவக் கொழுந்து;**
**ஒருமாமணியாய் உலகுக்கு ஓங்கிய**
**திருமாமணி"**
**என உரைத்தாள். அதைக்கேட்ட கண்ணகி**
**"பேதுறவு மொழிந்தனள் மூதறிவாட்டி"**
என்று சொல்லிக்கொண்டு கணவன் முதுகுக்கு பின் ஒதுங்கி வெட்கம் மேலிடப் புன்னகைத்தாள்.

இவை கண்ணகியின் மெல்லியல்பை உணர்த்துவதற்காக இளங்கோ ஏற்படுத்திக் கொண்ட சந்தர்ப்பங்கள். பிற்காலத்திலே அவளிடத்துத் தோன்றுகின்ற துணிவுக்கும் ஆவேசத்துக்கும் முற்றிலும் முரணான சுபாவம் இது. மதுரை நோக்கிச் சென்ற கண்ணகியும் கோவலனும் கவுந்தி அடிகள் மூலம் மதுரைப் புறஞ்சேரியில் உள்ள ஆயப்பெண்ணாண மாதரியிடம் அடைக்கலம் கொடுக்கப்படுகிறார்கள். ஆயர் சேரியிலே தனியொரு வீட்டிலே அவர்கள் குடியிருத்தப்படுகிறார்கள். சமையற் பண்டங்கள் வழங்கப்பட்டன. கண்ணகி தன் வாழ்நாளில் முதன்முதலிற் சமையலில் ஈடுபடுகிறாள். ஏவலாளர் இன்றிய வாழ்க்கையில் கணவனுக்காகத் தானே சமைக்கிறாள். அவள் சமைக்கும் பாங்கிலும் அவளது மென்மையையே இளங்கோ நுட்பமாகப் புலப்படுத்துகிறார். காய்கறிகளை நறுக்கும்போது அவளது மெல்விரல் சிவந்தது; முகம் வியர்த்தது; கண் சிவந்தது. தன் அறிவுக்கேற்ற அளவில் அவள் சமைத்தாள் என்கிறார் இளங்கோ. சமைத்து முடிந்ததும் பனந்தடுக்கிலே கோவலனை அமர்வித்தாள். அவனுடைய பாதங்களைக் கழுவினாள். நிலத்துக்கும் தண்ணீர் தெளித்தாள். இவை அக்கால வழக்கம் போலும! குமரிவாழைக் குருத்தை விரித்து அமுது படைத்தாள். அவனும் உண்டான். உண்டபின் தாம்பூலம் கொடுத்தாள். அந்நிலையில் கோவலன் தான் விட்ட தவறுகளையும் அவற்றின் விளைவுகளையும் ஒவ்வொன்றாகச் சொல்லிக் கழிவிரக்கப்பட்டான். நான் விட்ட தவறு எதையும் பொருட்படுத்தாது, மதுரை செல்வதற்காக எழுக என்று சொன்னதும் ஒரு பேச்சும் பேசாது எழுந்து வந்தாயே!இது உன்னால் எவ்வாறு முடிந்தது? எனக் கலங்கினான். அப்போதுதான் கண்ணகி கோவலனுடன் பேசுவதை முதன்முதலாகக் காட்டுகிறர் இளங்கோ. இதுவரை அடக்கியிருந்தவற்றையெல்லாம் கொட்டித் தீர்ப்பதுபோல அவள் பேசுகிறாள்.
இல்லறவாழ்விலே இயற்ற வேண்டிய கடமைகளான,
**"அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்**
**துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடலும்"**
என்று இவை எல்லாவற்றையும் நீர் என்னைப் பிரிந்ததால் இழந்தேன். உம்முடைய தாய் தந்தையர் என்னைக் காண வந்த வேளைகளில் உம்மேல் அவர்களுக்கிருந்த கடுங்கோபத்தை மறைத்துக் கொண்டு அன்பு நிறைந்த வார்த்தைகளால் என்னைப் பாராட்டினர். என் உள்ளத்திலே மறைத்து வைத்த வருத்தத்தை அவர்களுக்குக் காட்டி விடுவது போன்ற என் பொய்யான சிரிப்பைக் கண்டு அவர்கள் மனம் வருந்தினார்கள். இவ்வாறெல்லாம் ஆகும்படி நடக்கக்கூடாத முறையிலே நடந்து கொண்டீர். ஆனால் நானோ ஒருகாலத்தும் மாறாத நிலையான அன்பும் கொள்கையும் உடையவளானபடியால் நீர் அழைத்தவுடன் எழுந்து வந்தேன்.
**"போற்றா ஒழுக்கம் புரிந்தீர்; யாவதும்**
**மாற்றா உள்ள வாழ்க்கையேன் ஆதலின்**
**ஏற்றெழுந்தனன் யான்"**
என்கிறாள் கண்ணகி. அதன்பின் தன்னைத் தாழ்த்தியும் அவளைப் புகழ்ந்தும் பேசிய கோவலன் ஒற்றைச் சிலம்புடன் மதுரை அகநகர் சென்று கொலையுண்டான்.

## கணவனை இழந்த நிலையில் கண்ணகி

ஆயர் சேரியிலே நிகழ்ந்த தீநிமித்தங்கள் கண்டு ஆயர் குலப் பெண்கள் குரவைக்கூத்தாடினர். கூத்தின் முடிவிலே, அங்கு நின்ற கண்ணகிக்கு கோவலன் கொலையுண்ட சேதி தெரிய வருகின்றது. கணவனுக்கு உண்டான கள்வன்என்ற பழிச் சொல்லையும் அநீதியான அவனது சாவையும் தாங்கமாட்டாதவளானாள் கண்ணகி. கணவன் இருக்கும் வரையில் அதிகம் பேசா மடந்தையாகத்தான் கண்ணகி இருந்தாள். ஆனால் அவன் இறந்ததும் அவள் பேசவேண்டிய நிலைக்கு ஆளானாள்; பேசினாள். கணவன் இறந்தபின் கைம்மை நோன்பு நோற்றுக்கொண்டு பேசாதிருக்கின்ற சாதாரண பெண்கள் போல நானும் வாழ்ந்து மடிவேனோ என்று ஆவேசம் கொள்கிறாள் அவள்.
**"இன்புறு தங்கணவர் இடர் எரியும் மூழ்கத்**
**துன்புறுவன நோற்றுத் துயருறு மகளிரைப்போல்**
**மன்பதை அலர்தூற்ற மன்னவன் தவறிழைப்ப**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பனை இழந்தேன் நான் அவலம் கொண்டு அழிவலோ"

நடக்கும் அநீதிகளைப் பார்த்துக்கொண்டு பேசாதிருக்கும் சமூகத்தின் நீதி உணர்வு பற்றிக் கேள்வி எழுப்புகிறாள்.

**"பெண்டிரும் உண்டுகொல்? பெண்டிரும் உண்டுகொல்?**
**கொண்ட கொழுநர் உறுகுறை தாங்குறூஉம்**
**பெண்டிரும் உண்டுகொல்? பெண்டிரும் உண்டுகொல்?**
**சான்றோரும் உண்டுகொல்? சான்றோரும் உண்டுகொல்?**
**ஈன்ற குழவி எடுத்து வளர்க்குறூஉம்**
**சான்றோரும் உண்டுகொல்? சான்றோரும் உண்டுகொல்?**

நீதியை நிலைநாட்டுவதற்காக- தன் கணவனதும் குடும்பத்தினதும் நற்பெயரை நிலை நாட்டுவதற்காக-உயர்மட்டம் வரையிலே செல்லத் துணிகிறாள் கண்ணகி. மிக நுட்பமான முறையிலே நீதிபேசி தன் பக்கத்து நியாயத்தை நிரூபிக்கிறாள்.

**"நற்றிறம் படராக் கொற்கை வேந்தே**
**என்காற் பொற்சிலம்பு மணியுடை அரியே என**
**தேமொழி உரைத்தது செவ்வை நன்மொழி;**
**யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே;**
**தருக எனத் தந்து தான் முன்வைப்ப,**
**கண்ணகி அணிமணிக் காற்சிலம்பு உடைப்ப**
**மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே"**

அவளுடைய தோற்றமும், நீதியை நிலை நாட்டும் பேச்சும் மன்னவன் உயிரை எடுத்துவிடுகின்றன.

**"மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்**
**கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் -வையைக்கோன்**
**கண்டளவே தோற்றான்; காரிகைதன் சொல்செவியில்**
**உண்டளவே தோற்றான் உயிர்."**

இறுதியில் கண்ணகி தெய்வமாகினாள் என்று காவியம் முடிகிறது. சிலப்பதிகாரக் கண்ணகி இல்லறத்தில் கணவனோடு வாழும் நிலையில் வீட்டுக்கு அடங்கிய பெண்ணாகவும் கணவனை இழந்த நிலையில் பொறுப்புகள் யாவற்றையும் தானே ஏற்றுக்கொண்டு செயலாற்றி வென்று முடிக்கும் திறம் உள்ளவளாக- சமூக உணர்வுள்ளவளாகவுமேசித்திரிக்கப் பெறுகிறாள்.



**வாசித்தவர்:**
Navaretnam Subaraj
Lecturer (Prob.) in Hindu Civilization
Faculty of Arts & Culture
South Eastern University of Sri Lanka



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுரை II

# "மாதவி, மணிமேகலை ஆகியோரின் வாழ்வியல்"



திருமதி. றூபி வலன்லரீனா பிரான்சிஸ்
முதுநிலை விரிவுரையாளர்,
மொழித்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை,
செங்கலடி.

## அறிமுகம்:

தமிழின் முதலிரு காப்பியங்கள் எனச் சிறப்பிக்கப்படுபவை சிலப்பதிகாரமும் மணிமேகலையுமாகும். இவை முறையே கண்ணகியையும், மணிமேகலையையும் பிரதான கதாபாத்திரங்களாகக் கொண்டவை. கி.பி 450 – 550 இடைப்பட்ட காலத்தில் இயற்றப்பட்டதாகக் கருதப்படும் இவ்விரு காப்பியங்களும் அக் குறிப்பிட்ட காலத்து மக்கள் வாழ்வியலை அவர்கள் வாழ்வியல் நெறிமுறைகளைப் பதிவு செய்து வைத்துள்ளன. சைவம், வைஷ்வணம், சமணம், பௌத்தம் ஆகிய சமயக் கருத்துக்களைப் போலவே அரசர், வணிகர், மலைவாழ் மக்கள், இடையர் குலத்தவர், கணிகையர் முதலான பல்வேறு வகையினரின் வாழ்க்கை நெறி முறைகளை இவற்றிற் காணலாம்.

## நோக்கம்:

கண்ணகியின் கணவனான கோவலனின் 'விடுதலறியா விருப்பிற்குரியவளாக'வும், அவனது குழந்தைக்குத் தாயாகவும் தொடர்புறுகின்ற மாதவி இவ்விரு காப்பியங்களிலும் குறிப்பிடத்தக்க கவனத்திற்குரியவளாகின்றாள். அதைப் போலவே அவளது மகளான மணிமேகலையும் முக்கிய இடம் பெறுகின்றாள். இவர்களது வாழ்வியலின் ஊடாக வெளிப்படுத்தப்படும் கணிகையர் குல மரபுபினையும்,அம் மரபிலிருந்து பல்வேறு சவால்களுக்கும் எதிர்ப்புக்களுக்கும் மத்தியில் இவ்விருவரும் புதியதோர் வாழ்க்கை முறைமைக்குள் தம்மை ஈடுபடுத்தும் வகையினையும், பௌத்த மதத்தில் அவர்களது பங்களிப்பு மற்றும் சவால்கள் பற்றிய விடயங்களையும்வெளிக் கொணருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். சிலப்பதிகாரமும் மணிமேகலை ஆகிய இரு காப்பியங்களும் இங்கு ஆதாரங்களாகக் கொள்ளப்படுகின்றன.

## மாதவியும் மணிமேகலையும்:

சிலப்பதிகாரத்தில் அரங்கேற்று காதையில் மாதவி அறிமுகம் செய்யப்படுகின்றாள். அவளது குலப்பெருமை கூறப்படுவதனூடாக இவ்வறிமுகம் அமைகின்றது. தேவமகளிருள் ஊர்வசியின் மரபினளாக மாதவி குறிப்பிடப்படுகின்றாள்.

**தெய்வமால்வரைத் திருமுனி யருள**
**எய்திய சாபத்து இந்திரச் சிறுவனொடு**
**தலைக்கோல் தானத்துச் சாபம் நீங்கிய**
**மலைப் பெரும் சிறப்பின் வானவர் மகளிர்**
**சிறப்பிற் குன்றாச் செய்கையொடு பொருந்திய**
**பிறப்பிற் குன்றாப் பெருந்தோள் மடந்தை**
**தாதவிழ் புரிகுழல் மாதவி (3: 1 – 7)**

இது அவளது குலப் பெருமைக்குச் சான்றாகும். தேவலோகத்தில் இந்திரனதுஅவையிலே அகத்தியரின் முன்னிலையில் இந்திரனின் மகனான சயந்தனின் பாடலும் அதற்கியைந்த ஊர்வசியின் ஆடலும் இடம்பெற்றபோது சயந்தனும் ஊர்வசியும் ஒருவரையொருவர் காமுற்றமையால் பாடலும் ஆடலும் பிழைபட்டுப் போகின்றன. அதனால் அகத்தியரின் சாபத்திற்கு இவ்விருவரும் ஆளாகின்றனர். ஊர்வசி கணிகையர் குலமரபில் மாதவியாகப் பிறக்கின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதவியின் குலமரபு பற்றிய இக்கதையினைக் கடலாடு காதையிலும் காண முடியும்.

**"நாரதன் வீணை நயந்தெரி பாடலும்**
**தோரிய மடந்தை வாரம் பாடலும்**
**ஆயிரங் கண்ணோன் செவியகம் நிறைய**
**நாடகம் உருப்பசி நல்கா ளாகி**
**மங்கலம் இழப்ப வீணை மண்மிசைத்**
**தங்குக இவளெனச் சாபம் பெற்ற**
**மங்கை மாதவி வழிமுதல் தேன்றிய' (6: 18 – 24)**

ஆடல், பாடல்,அழகு ஆகிய இம்மூன்றிலும் குறைவு படாதவளாகவும் (3: 8-9) ஏழாண்டுப் பயிற்சியின் பின்னர் 12 வயதில் குலமரபிற்கேற்ப மன்னன் முன் அரங்கேற்றம் செய்யப்பெற்றவளாகவும் அம்மன்னனால் தலைக்கோல் பெயர் பெற்றவளாகவும் ஆயிரத்தெண் கழஞ்சு பொன் பரிசு பெற்றவளாகவும் மாதவி குறிப்பிடப்படுகின்றாள். இப்பரிசு நாடகக் கணிகையர்க்கு விதிக்கப்பட்ட பரிசு முறைமை என்பதை நூல்கள் விதித்தமுறை என்பதனூடாக இளங்கோ வலியுறுத்தியுள்ளார்.

**நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்துக்**
**காட்டினள் ஆதலின் காவல் வேந்தன்**
**இலைப் பூங்கோதை இயல்பினின் வழாமைத்**
**தலைக்கோல் எய்தித் தலையரங்கேறி**
**விதிமுறைக் கொள்கையின் ஆயிரத்தெண் கழஞ்சு**
**ஒருமுறையாகப் பெற்றனள் (3: 158 – 163)**
**என்னும் வரிகள் இதனையுணர்த்தும்.**

கணிகையர் குல மரபிற்கேற்ப வாழ்க்கை நெறிமுறைகளைப் பின்பற்றும் மாதவி அக்குலமரபின் இன்னுமோர் அம்சமாக அமையும் 'மாலை வாங்குநர்க்கு மனைவியாகும் நிலையினையும்' எய்துகிறாள்.மாலையை வாங்கும் கோவலன் அவளுக்குத் துணையாகின்றான்.

**"..................................மாலை**
**கோவலன் வாங்கிக் கூனி தன்னொடு**
**மணமனை புக்கு மாதவி தன்னொடு**
**அணைவுறு வைகலின் அயர்ந்தனன் மயங்கி"** (3: 170 – 173)

அதன் பின் கோவலனது நிலையை இளங்கோ வருமாறு கூறுகின்றார்:

**"விடுதலறியா விருப்பினனாயினன்**
**வடுநீங்கு சிறப்பின் தன் மனையகம் மறந்தென்"** (3: 174 – 175)

அதாவது தனது மனைவியாகிய கண்ணகியையும் சிறப்பு மிக்க இல்லத்தையும் மறக்குமளவிற்கு மாதவிமீது காதலுற்றவனாக கோவலன் இருந்தான்.

கோவலனுக்கு ஊடலும் கூடலும் அளித்தல், பொதுமக்கள் முன்னிலையிலும் அரசர் முன்னிலையிலும் அவரவர் முறைமைக்கு விதிக்கப்பட்ட கலைகளை ஆற்றுதல், இசைக்கருவிகளை கையாளுதலில் வல்லமை முதலான அக்குலத்தவர்க்கு விதிக்கப்பட்ட விதிமுறைகளுக்குட்பட்டு அனைத்திலும் மாதவி தேர்ச்சி பெற்றிருந்தாள் எனச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது.

கானல்வரிப்பாடல்களை இருவரும் இசைத்தபோது ஏற்பட்ட தவறான புரிந்துணர்வினால் இருவரும் நிரந்தரமாகப் பிரிந்து விட நேர்கின்றது. இருவரும் ஒருவர் மற்றறையவரது பாடலில் குறிப்புப் பொருள் உண்டென அர்த்தம் கொண்டனர்.

மாதவியின் பாடல்களைக்

**"கானல்வரி யான் பாடத் தானொன்றின்மேல் மனம் வைத்து**
**மாயப் பொய் பல கூட்டும்மாயத்தாள் பாடினாளென"** (7: 53 – 54)

எண்ணும் கோவலன்,

**"உவவுற்ற திங்கள் முகத்தாளைக் கவவுக்கை ஞெகிழ்ந்தனனாய்"** (7:56)

விட்டுச் செல்கின்றான். அவன் 'எழுக'என்றபோது உடன் எழாத மாதவி அவன் சென்ற பின்னர் தனியளாகத் தன் இல்லிடம் சேர்கின்றாள். (7: 57 – 60)

கோவலன் அவளோடு வாழ்ந்தபோது வெளிப்படுத்தப்படாத உணர்வு அவளை வெறுத்துச் சென்றபோது வாய்வார்த்தையாக வெளிப்படுவதைக் காணலாம். அவளது குலத்தையும் வாழ்க்கை நெறிகளையும் காரணமாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளைச் சாடுகின்றான் கோவலன்.

**'மாயப்பொய் பலகூட்டும் மாயத்தாள்'** என்பது வஞ்சனையுடன் கூடிய பொய்கள் பலவற்றைக் கூறும் மாயத்தாள் என்னும் பொருளுடையது.

பிரிந்து சென்ற கோவலனை வருவிக்க வேண்டி மாதவி வசந்தமாலை மூலம் கடிதம் (மாலையில் எழுதப்பட்ட திருமுகம்) ஒன்றினை முதல் தடவை அனுப்பியபோது

அவளது ஆடல், தன்னோடு அவள் கொண்ட காதல் மற்றும் திறமைகளையெல்லாம் 'நடிப்பு' எனக் கூறிப் புறந்தள்ளுகின்றான் கோவலன். சிலப்பதிகாரம் வேனிற்காதை 74 தொடக்கம் 112 வரையிலான வரிகளில் மாதவியை அவன் வெறுத்துரைக்கும் கூற்றுக்களைக் காணலாம். இறுதியாக

**"ஆடல்மகளே ஆதலின் ஆயிழை**
**பாடுபெற்றனவப் பைந்தொடி தனக்கு"** (8: 111 – 112)

எனவும் இகழ்ந்துரைத்து அவளது கடிதத்தை நிராகரிக்கின்றான்.'ஆடன்மகள் ஆதலால் இவ்விதமான நடிப்புக்கள் அவளுக்கு இயல்பானவையே' எனக் கோவலன் கூறுவது அவளது குலத் தொழிலைச் சுட்டிக் காட்டி அவளை நிராகரிக்கும் அவனைப் போன்ற வர்க்கத்தினருக்கு ஆதாரமாக அமைவதாகும்.

மாதவியை விட்டுப் பிரிந்து கண்ணகியிடம் வந்து சேரும் கோவலன், மாதவி குறித்துக் கூறிய கருத்தும் இவ்விடத்தில் நோக்கற்பாலது.

**"சலம்புணர் கொள்கைச் சலதியொடாடி**
**குலந்தரு வான்குன்றம் தொலைத்த**
**இலம்பாடு நாணுத்தரும்"** (9:69-71) என அவன் கூறுகின்றான்.

வஞ்சகம் பொருந்திய கொள்கையையுடையவளும் பொய்யுரையாட்டியுமானவளாக மாதவி இதிற் கோவலனாற் குறிப்பிடப்படுகின்றாள்.

குலத்தொழில் முறைக்கேற்ப பிற ஆடவர்களுடனும் செல்வத்திற்காகத் தொடர்புறும் வாழ்வியல் நெறிமுறையிலிருந்து விடுபட்டு கோவலனை மட்டுமே நினைத்து வாழ்ந்து அவனது பிரிவிற்காக ஏங்கி **'மாலை வாராராயினும் காலை காண்குவம்'**(8: 115 -116) என்று அமைதி பெற்று மீண்டும் இன்னுமோர் திருமடலை எழுதி அனுப்பி வாழ்ந்திருந்த மாதவி அக் குலமரபிலிருந்து விடுபடும் பிரதிநிதியாகச் சித்திரிக்கப்படுகின்றாள். ஆயினும் உயர்குல சமூகத்தின் பார்வையில் இவை யாவும் அர்த்தமற்றுப் போவதற்கு கோவலனின் கூற்றுக்களே சான்றாகின்றன.

கணிகையர் குல மாதவி, வணிகர் குல கோவலனோடு கொண்ட தொடர்பு இவ்வாறு முடிவிற்குக் கொணரப்படுகின்றது.

இத்தகையதோர் நிலையை மணிமேகலை குறித்தும் அவதானிக்க முடிகின்றது.

மணிமேகலை மீது சோழ இளவரசனான உதயகுமரன் காதல் கொள்கின்றான். இங்கும் காமக்கிழத்தியாகவே மணிமேகலையை அவன் நோக்குகிறானேயன்றி திருமணம் செய்யும் நிலை பற்றிய செய்தி இல்லை. இக் குலப் பெண்கள் அரசர்க்கும் உரியவர்களாக வாழும்நிலை அக்காலத்தில் இருந்தமை புலனாகின்றது.

மணிமேகலை மலர்வனம் சென்றபோது அதனையறிந்து உதயகுமரன் அவளைத் தேடிச் செல்கின்றான். மணிமேகலையை உதயகுமரன் விரும்புகின்றான் என்பதை சித்திராபதி மூலம் அறியும் வசந்தமாலை இது பற்றி மாதவிக்குக் கூறிய சந்தர்ப்பத்தில் மணிமேகலை இதனை ஏற்கனவே கேட்டறிந்திருந்தாள்.

**"சித்திராபதியோடு உதயகுமரனுற்று**
**என்மேல்வைத்த உள்ளத்தான் என**
**வயந்தமாலை மாதவிக்கொருநாள்**
**கிளந்த மாற்றம் கேட்டேன்"** (4:79-82) என மணிமேகலை கூறுவது இதனையுணர்ாத்தும்.

அவளைத் தொடரும் உதயகுமரன் பளிக்கறையில் அவள் ஒளிந்து கொண்டபின் மணிமேகலையுடன் வந்த சுதமதியிடம் வினவுகின்றான். எனினும் அவளைக் கண்டுபிடிக்க முடியாமை காரணமாக சித்திராபதியால் மணிமேகலையை அடையலாம் என எண்ணி அவ்விடத்தைவிட்டு நீங்குகின்றான்.

பளிக்கறையிலிருந்து வெளிவரும் மணிமேகலையின் கூற்றாக பின்வரும் செய்திகள் குறிப்பிடப்படுகின்றன.

**"கற்புத்தானிலள் நற்றவ உணர்விலள்**
**வருணக்காப்பிலள் பொருள்விலையாட்டியென்று**
**இகழ்ந்தனனாகி"**(5: 86 –87)

கற்பில்லாதவள், நல்ல தவ உணர்ச்சி இல்லாதவள், மரபிற்கேற்ற காவலற்றவள், பொருள் கொடுப்பார்க்குத் தன்னைக் கொடுப்பவள் என்று உதயகுமரன் குறிப்பிட்டதாக அது கூறப்படுகின்றது. அவ்வாறாயின் அரச மரபினராயினும் அக் காலத்து வழக்கப்படி கணிகையரைக் கணிக்கும் விதம் புலப்படுகின்றது. மாதவி மீது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகர் குலம் வைத்திருந்த கணிப்பும் மணிமேகலை மீது அரசர் குலம் வைத்திருந்த கணிப்பிற்குமிடையே அதிக வேறுபாடு இல்லை. குலமரபின் வாழ்வியல் நெறிமுறை காரணமாக பொதுமகளிராகவே இவர்கள் கருதப்பபட்டனர். மாதவி குல மரபு நெறிமுறையை ஏற்று கோவலனோடு வாழ்ந்து ஒரு குழந்தைக்குத் தாயாகிய பின்னரும் கோவலனுடன் மட்டுமே வாழ விரும்பியவள். மணிமேகலைக்கு அத்தகையதொரு நிலை ஏற்படா விட்டாலும் அவளும் உதயகுமரனை விரும்பியமையை அவள் வாயிலாகவே சாத்தனார் உணர்த்துகின்றார். மேற்குறித்தவாறெல்லாம் தன்னை இகழ்ந்தாலும்

**"புதுவோன் பின்றைப் போனதென் நெஞ்சம்**
**இதுவோ அன்னாய் காமத்தியற்கை"** (5: 89 – 90)

என மணிமேகலை கூறுவது இதனை உணர்த்தும்.

**"உவவன மருங்கில் உன்பால் உள்ளம் தவிர்விலேன்"** (21: 13 – 14) எனவும்
**"வைவாள் விஞ்சையன் மயக்குறு வெகுளியின்**
வெவ்வினையுருப்ப இளிந்தனையோ" (21: 23 – 24) என அவனது இறப்பின் போது அவள் கூறுவதும் அவன் பால் அவள் கொண்டிருந்த அன்பை வெளிப்படுத்தும்.

ஆயினும் தாயின் வழிகாட்டலில் அவள் மேற்கொண்டிருந்த தவ நெறி அவளைப் பிறழ விடாது காத்தது.மணிமேகலை உதயகுமரன் மீது காதல் கொண்டமைக்கு சாத்தனார் முற்பிறப்புத் தொடர்பினைக் காட்டி சமப்படுத்துகின்றார். முற்பிறப்பில் இருவரும் அரச குலத்தில் பிறந்தவர்களாகச் சித்திரிக்கப்படுகின்றனர். அசோதர நகரத்து அரசனாகிய இரவிவன்மனுக்கும் அவன் தேவி அமுதபதிக்கும் மகளாகப் பிறந்தவள் இலக்குமி. அவளது சகோதரிகள் தாரையும், வீரையும். அதே போல அத்திபதி என்னும் அரசனுக்கும் அவன் தேவி நீலபதிக்கும் மகனாப் பிறந்தவன் இராகுலன். இராகுலனும் இலக்குமியும் கணவனும் மனைவியுமாக வாழ்ந்த சந்தர்ப்பத்தில் திட்டிவிடம் என்னும் பாம்பினால் இராகுலன் இறந்துவிட இலக்குமியும் உடன் தீயில் புகுந்து இறந்து விடுகின்றாள். மறுபிறப்பில் இவ்விருவருமே உதயகுமரனாகவும் மணிமேகலையாகவும் பிறக்கின்றனர். (9:38 – 53) தாரையும் வீரையும் முறையே மாதவியாகவும், சுதமதியாகவும் பிறந்தார்கள் எனவும் குறிப்பிடப்படுகின்றது. (7:98 – 105)

இவ்வாறு கணிகையர் குலப் பெண்களான மாதவியையும் மணிமேகலையையும் முற்பிறப்பில் அரச குலத்தில் பிறந்தவர்கள் எனக் கூறுவதன் மூலம் கணிகைக்குல மரபிலிருந்து வேறுபட்ட நிலைக்கு உள்ளாக்குவதற்கான அங்கீகாரத்தை சாத்தனார் அக்கால மரபிற்குகந்ததாக அளித்துள்ளார் போல் தெரிகின்றது.

உதயகுமரன் காஞ்சனன் என்னும் விஞ்சையனால் கொலை செய்யப்பட்டதன் பின்னர் அவளது மனம் விரைந்து தவநெறியில் செல்லத் தொடங்கியதாக சாத்தனார் குறிப்பிடுகின்றார். தன் குல மரபின் வழக்கப்படி வேறு ஆடவரை நினைக்கும் மனமின்றித் தன் தாயைப் போலவே அவளும் வாழ்கிறாள். மாதவி கோவலனுடன் வாழ்ந்து பின் துறவறத்தை மேற்கொண்டவள். மணிமேகலையோ முற்பிறப்புக் கணவனை இப்பிறப்பில் விரும்பியதோடு அவனது இறபர்பு இருவரையும் பிரித்து விடுகின்றது.

## கணிகையர் குல மரபினரின் வாழ்வியல்:

இக் குலத்தவரின் வாழ்வியல்நெறி முறைகள் இக் குலத்தின் பிரதானமாகவும் இக்குல மரபுகளை மிக இறுக்கமாகவும் கடைப்பிடித்த கதாபாத்திரமான சித்திராபதியின் மூலம் விளக்கப்படுகின்றன. சித்திராபதி இக்குலத்தின் அடையாளமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளாள்.

'இந்திர விழாவின்' பொருட்டு தம் குலத்தொழிலுக்கேற்ப பங்கு கொள்ள மாதவியும் மணிமேகலையும் வராமையால் துயருற்ற சித்திராபதி, மாதவியின் தோழியாகிய வசந்தமாலையை அழைத்து ஊர் அலருரைப்பதனை எடுத்துக் கூறி அவர்கள் இருவரையும் அழைத்து வருமாறு பணிக்கின்றாள்.

குலத்திற்குரிய கலைத்திறன்களில் தேர்ச்சி பெற்றிருந்த மாதவி நற்றவம் புரிந்தமை அச்சமூகத்தினரால் ஏற்கப்படவில்லை என்பதை

**"கற்றுத் துறை போகிய**
**பொற்றொடி மங்கை**
**நற்றவம் புரிந்தது நாணுடைத்து"** (2:32–33) என்ற வரிகள் உணர்த்துகின்றன.

அக்குலத்தவரின் ஒட்டுமொத்த எதிர்பார்ப்பாக அமையும் விடயங்கள் வசந்தமாலை மூலம் அறிவிக்கப்படுகின்றன. தவ வாழ்க்கை கணிகையர் குலத்திற்கு உரியதல்ல என்றும் தவத்தினை இவர்கள் மேற்கொள்வது நகைப்பிற்கிடமானதென்றும் கூறப்படுகின்றது. மணிமேகலையை அருந்தவப்படுத்திய மாதவி கொடியவளாகவே ஊரவர்களால் நோக்கப்படுகின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"மணிமேகலைதனை வந்துபுறஞ் சுற்றி**
**அணியமை தோற்றத்து அருந்தவப்படுத்திய**
**தாயோ கொடியள் தகவிலள்"** (3: 148 – 150) என்பது இதனையுணர்த்தும்.

கணவன் இறந்தால் உடன் உயிர் நீத்து அல்லது கைம்மை நோன்பு நோற்று அல்லது எரிபுகுந்து (உடன்கட்டை ஏறுதல்) பத்தினிப் பெண்கள் செயற்படுவர். இத்தகைய பத்தினிப் பெண்களின் வரிசையில் தனது குலமரபு காரணமாக மாதவி சேர முடியாதவள். எனினும்

**"காதலனுற்ற கடுந்துயர் கேட்டுப்**
**போதல் செய்யா உயிரொடு நின்றே**
**........நாணுத்துறந்தேன்"** ( 2: 38 - 39, 41) என மாதவி கூறுவதில் அவளது ஆதங்கம் வெளிப்படுத்தப்படுகின்றது.

கணிகையர் 'பத்தினி' களுக்குஉரிய பண்புகள் எனக் கருதப்பட்டனவற்றுக்கு எவ்வாற்றானும் ஏற்புடையவர்கள் அல்லர் என்பதை அக்குல மரபிற்குள்ளிருந்த குரலொன்றினூடாகவே சாத்தனார் புரிய வைத்துள்ளார். சித்திரதிராபதி அக்குலத்தின் மிகச் சிறந்த பிரதிநிதி. □போதல் செய்யா உயிரொடு நின்ற தன் நிலைக்காக இரங்கும் மாதவிக்குக் கூறப்படும் பதிலாக அமைவது போல சித்திராபதியின் கூற்றுக்கள் வருகின்றன.

**"காதலன் வீயக் கடுந்துயரெய்திப்**
**போதல் செய்யா உயிரொடு புலத்து**
**நளியிரும் பொய்கை ஆடுநர் போல**
**முளியெரிப் புகூஉம் முதுகுடிப் பிறந்த**
**பத்தினிப் பெண்டிர் அல்லேம்** ( 18:11 -15)

கைம்மை நோன்பு நோற்கவும் அல்லது உடன் தீயில் புகவும் முடியாத நிலையை சித்திராபதி விளக்குகின்றாள். மேலும் இக்குலப்பெண்களின் வாழ்வியல் அப்பாத்திரத்தின் ஊடாகவே தொடர்ந்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

**........................பலர்தம்**
**கைத்தூண் வாழ்க்கை கடவியமன்றே**
**பாண்மகன் பட்டுழிப் படுஉம் பான்மையில்**
**யாழினம் போலும் இயல்பினம் அன்றியும்**
**நறுந்தாதுண்டு நயனில் காலை**
**வறும்பூத் துறக்கும் வண்டு போல்குவம்**
**வினையொழி காலைத் திருவின் செல்வி**
**அனையேம் ஆகி ஆடவர்த்துறப்போம்** (18:15 – 22) என அவள் கூறுகின்றாள்.

கணிகையர் குலப் பெண்களின் வாழ்வியல் நெறிமுறைகள் சில இதிற் குறிப்பிடப்பட்டுள்ளன.

1. பலரின் கைப் பொருள் உணவுண்டு வாழும் உரிமையுடையவர்கள்.
2. பாணன் இறக்கும்போது உடனிறக்கும் தன்மையில்லாத அவன் கை யாழ் போன்றவர்கள்.
3. தேன் உள்ளபோது உண்டு அது அற்றபோது பூவைத் துறக்கும் வண்டு போன்றவர்கள்.
4. செல்வம் உள்ளபோது சேர்ந்து அற்றபோது திருமகள் விலகுவதைப்போல (செல்வம் அற்றபோது) ஆடவரைத்துறப்பவர்கள்.

மேலும்

**"நாடவர் காண நல்லரங்கேறி**
**ஆடலும் பாடலும் அழகுங் காட்டிச்**
**சுருப்பு நாண் கருப்புவில் அருப்புக் கணைதூவச்**
**செருக்கயல் நெடுங்கட் கருக்குவலைப் படுத்துக்**
**கண்டோர் நெஞ்சங் கொண்டகம் புக்குப்**
**பண்டேர் மொழியிற் பயன்பல வாங்கி**
**வண்டிற்றுறக்கும் கொண்டி மகளிர்** (18: 103 – 109)

என்பதில் பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படுகின்றன.

1.அரங்குகளில் ஏறி ஆடலையும், பாடலையும் எழிலையும் புலப்படுத்துவோர்.
2. கண்களால் ஆடவரை அகப்படுத்தி அவரை மயக்கி பொன், ஆடை, மணி முதலியவற்றை வாங்கிப் பொருள் வற்றிய பின் அவரைத் துறப்போர்.

இவ்விதமான வரையறுக்கப்பட்ட சூழலில் வாழ்ந்த மாதவியினதும் மணிமேகலையினதும் துறவு நகைப்பிற்கிடமாக அன்று கணிக்கப்பட்டதில் வியப்பேதுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திராபதி மணிமேகலையைத் துறவிலிருந்து திசை திருப்புவதற்ாகாக அவளை விரும்பும் உதயகுமரனை நாடுகின்றாள். இத்தகைய நிலைமைகள் இவ்விருவரதும் 'குலமரபு மீறலைச் சவால்களுக்குள்ளாக்கின.
எவ்வாறாயினும் மணிமேகலையைத் தன் குலமரபிற்கிணங்க வாழ்விக்க முடியாதென்பதை மாதவி திட்டவட்டமாக வசந்தமாலைக்கு உரைப்பதனூடாக சித்திராபதிக்கும் அவள் சார்ந்த சமூகத்திற்கும் உணர்த்தி விடுகின்றாள்.

**"காவலன் பேரூர் கனையெரி ஊட்டிய**
**மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை**
**அருந்தவப் படுத்தல் அல்லது யாவதும்**
**திருந்தாச் செய்கை தீத் தொழிற்படாஅள்** (2: 54 -57)

**'திருந்தாச் செய்கை தீத்தொழிற்படாள்'** என்னும் மாதவியின் கூற்று வாயிலாக பரத்தமை கடிந்தொடியப்படவேண்டிய காலச் சூழலுக்கமைவாக சாத்தனார் இத்தகைய சமூக சீர்திருத்தத்தினைச் செய்ய விழைந்துள்ளாரெனலாம். கண்ணகியைப் பத்தினி எனப் போற்றும் மாதவி, கண்ணகியின் மகளாக மணிமேகலையைக் குறிப்பிடுவதன் மூலம் கணிகையர் குலப் பழக்கவழக்கங்களுக்கு மணிமேகலை உட்பட மாட்டாள் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவிப்பதாகும்.மணிமேகலையைப் பத்தினிக்குரியவளாக்க அக் காலச் சூழல் இடம்தராதென்பதை நன்குணர்ந்திருந்தமையாலேயே உதயகுமரனின் காதலை அறிந்திருந்தும் அவனோடு அவளைச் சேர்த்து வைக்கும் சித்திராபதியின் நோக்கத்திற்கும் அவளால் துணை போக முடியாதிருந்தது. ஏனெனில் சித்திராபதியின் நோக்கம் பொருள் பெறும் குலமரபுவழியைப் பேணுவது ஆகும்.
உதயகுமரனின் இறப்பின் பின் சிறைப்பிடிக்கப்பட்டபோது அவளை மீட்பதற்காக இராசமாதேவியிடம் சென்ற சித்திராபதி மணிமேகலையைக் குறித்துக் கூறும்போது 'அரங்கக் கூத்தி' (24: 21 – 22)என்றும், நாடகக்கணிகை (24:. 76) என்றும் மணிமேகலையைக் குறிப்பிடுவதிலிருந்து இதனை உணர்ந்து கொள்ளலாம்.
தவிரவும் மணிமேகலைக்கு நாமம் சூட்டியவேளை மாதவியின் கனவில் மணிமேகலா தெய்வம் தோன்றி உரைத்த செய்திஅத் தெய்வம் சுதமதிக்கு கூறும் கூற்றாக உணர்த்தப்பட்டுள்ளது.

**"……………….,,க்கொடியிடை தன்னை என்**
**நாமஞ் செய்த நன்னாள் நள்ளிருள்**
**காமன் கையறக் கடுநவை யறுக்கும்**
**மாபெருந் தவக் கொடியீன்றனை யென்றே**
**நனவே போலக் கனவகத்துரைத்தேன்"**
(7: 34 -38)

இதன் மூலம் மணிமேகலையைத் தவநெறிப்படுத்தும் ஆசிரியரின் நோக்கம் புலனாகின்றது.
கணிகைக் குலப் பெண்கள் குடிக்குற்றப்பட்டால் அவர்களுக்கெனச் சில தண்டனைகள் விதிக்கப்பட்டிருந்தமையையும் மணிமேகலைக் காப்பியத்திலிருந்து அறிய முடிகின்றது. உதயகுமரன் மூலம் மணிமேகலையைத் துறவிலிருந்து விலக்கச் சித்திராபதி சூளுரைக்கும் சந்தர்ப்பத்தில் இது குறிப்பிடப்படுகின்றது.

**" சுடுமண் ஏற்றி அரங்குசூழ்போகி**
**வடுவொடு வாழும் மடந்தையர் தம்மோர்**
**அனையேனாகி அரங்கக் கூத்தியர்**
**மனையகம் புகாஅ மரபினன் என்று.."**
(18: 33 – 36)

இதன்படி குலமரபிலிருந்து தவறுவோரின் தலைமீது ஏழு செங்கற்களைச் சுமத்தி அரங்கினைச் சூழ்வித்து புறத்து விடுதல் மரபாக இருந்தது என்பதை அறிய முடிகின்றது. அதன்பின் நாடகக் கணிகையர் இல்லத்துள் நுழைவதற்கு இவர்கள் தகுதியற்றுப் போகின்றார்கள்.
மாதவியும் மணிமேகலையும் தம் குலமரபினை மீறி ஒருவனுக்கு மட்டுமே வாழ்க்கைப்படல் அல்லது ஒருவரை மட்டுமே நெஞ்சில் நினைத்தல், தவ வாழ்வில் இணைதல் என்பன மூலம் செயற்படுகின்றனர்.
பெண்ணாகவும் அதிலும் இளம்பெண்ணாகவும் இருப்பதால் பிறசமயவாதிகள் தம் கொள்கைகளை மணிமேகலைக்கு உரையார் எனப்பட்டதால் வேற்றுருக் கொள்ளும் மந்திரத்தினை மணிமேகலா தெய்வத்திடம் இருந்து பெற்றிருந்த மணிமேகலை அதனைப் பயன்படுத்தி வெவ்வேறு சமயங்களின் உட்பொருளைத் தெளிவுறுகின்றாள்.மணிமேகலை வேற்றுச் சமயத்தினரின் சமயத் திறன்களை அறிய ஆண் வேடம் தாங்கியமையை
இளையோள் வளையோள் என்றுனக்கி யாவரும்
விளைபொருளுரையார் வேற்றுருக் கொள்க (26: 68 – 69) என்பதன் மூலம் உணர்த்தப்படுகின்றது. அவள் நிருவாணப் பேற்றை அடைவதற்கு இனிவரும் பிறப்புக்களில் ஆண்மகனாய் பிறக்கவேண்டியிருந்தமையையும் சாத்தனார் குறிப்பிட்டுள்ளார். (21: 174 -179)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிட்சா பாத்திரத்தைக் கையில் ஏந்தியபடி பிக்குணிக் கோலத்துடன் வெளிவரும் மணிமேகலையைக் கண்ட மக்கள் வியப்புறுகின்றனர்.

மாதவியும் மணிமேகலையும் பௌத்தப் பெண்துறவிகளானாலும் அறம் உபதேசிக்கும் அந்தஸ்து அவர்களுக்குக் கிடைக்கப்பெறவில்லை. பொதுவாக நோக்குமிடத்து மணிமேகலை தனிமனிதர்க்கான உபதேசம் வழங்கியிருப்பினும் மணிமேகலைக் காப்பியத்தில் அறவண அடிகளே பிரதான உபதேசகராகக் குறிப்பிடப்படுகின்றார். மாதவியும் மணிமேகலையும் அவரிடம் உபதேசம் கேட்பவர்களாகவே சித்திரிக்கப்பட்டுள்ளனர்.

அக்கால பௌத்த மதப் பெண்துறவியர் குறித்து ஏ.எல் பசாம் கூறும் கருத்தினை இவ்விடத்தில் நோக்குவது பொருத்தமானது.

"பௌத்த மதத்தின் தாராள விதிகளிலுமே தவப்பெண் ஒருத்தி சமயத் துறையில் எத்துணை முன்னேறியவளாயிருந்த போதும் அவள் சங்கத்தில் புதியராய்ச் சேர்ந்த ஆண்பாலாருள் ஆண்டில் மிக இளையனாய் உள்ளோனுக்குமே எப்போதும் கீழ்ப்பட்டவளாய்க் கருதப்பட்டாள்."

எனவே மணிமேகலை புகழ்பெற்ற பிக்குணியாகக் கருதப்பட்டாலும்கூட பௌத்த சங்கத்தில் அவள் உயர் அந்தஸ்து பெற்றிருக்கவில்லை என்பதே உண்மையாகும்.

பிறப்பு, இறப்பு, நோய், முதுமை முதலானவை பற்றிஉதயகுமரனுக்கு எடுத்துக் கூறும் மணிமேகலை தொடர்ந்து "ஆடவர்க்கு மகளிர் கூறும் பேரறிவும் உண்டோ?"( 18:141) எனக் கேட்கின்றாள். இதன் மூலம் அக்காலத்தில் மகளிர் உபதேசம் கூறுதல் அதிலும் உபதேசம் கூறுதல் தவிர்க்கப்பட்டிருந்தமை புலனாகும். தவிரவும் துறவியான நிலையிலும் கூட இது ஏற்கப்படாமை இதன் மூலம் அறியக்கிடக்கின்றது.

மாதவியும் மணிமேகலையும் தம் குல மரபிலிருந்து விடுபட்டமை சமூகப் புரட்சியாகக் கருதப்பட்டாலும் கூட தம் குலத்தளவில் பல எதிர்ப்புக்களுக்கு மத்தியிலேயே இவர்கள் துறவைத் தொடர்ந்தமையைக் காணலாம். அக்காலத்தில் இக் குலப் பெண்கள் தம் வாழ்வியல் நெறிமுறைகளிலிருந்து மாறும்போது பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தமையையும் இவ்விருவரது வாழ்வியல் நெருக்கடிகள் உணர்த்துகின்றன. இவற்றிற்குத் துறவு ஒன்றே தீர்வாக அமைந்தது. பரத்தமை கடிந்தொடுக்கப்பட்ட காலத்தில் எழுந்த மணிமேகலைக் காப்பியம்பரத்தமையை ஒழிக்கும் பிரதிநிதிகளாக இவ்விரு கதாபாத்திரங்களையும் உருவாக்கக் காரணமாகும்.

இவ்விருவரையும் அவர்தம் குலமரபிலிருந்து விடுவித்துத் துறவிகளாக்கியமை இக் குலப் பெண்களுக்குப் பதிய நிலைமைகளைக் கொடுத்துள்ளதாகக் கருதப்பட்டாலும் ஆழ்ந்து நோக்குமிடத்து கணிகையர் குல வாழ்வியல் மற்றும் துறவறத்தில் முழுமை முதலான விடயங்களில் புறக்கணிக்கப்பட்டவர்களாகவே அவர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள் என்பது தெரிய வரும். கற்புடைய பெண்களுக்குரிய இல்லற நெறிமுறை வாழ்க்கையும் மறுக்கப்பட்ட சூழலில் இல்வாழ்க்கையில் மட்டுமன்றி மத வாழ்க்கையிலும் கூட நிரந்தரத் தன்மையை அவர்கள் பெறவில்லை என்பதே உண்மையாகும்.

எனவே குறித்த காலச் சமூகத்தின் மேலாதிக்க வர்க்கத்தின் ஒட்டுமொத்தமான பிரதிநிதியாகவே பிரக்ஞை பூர்வமாக சாத்தனார் செயற்பட்டிருக்கின்றார் என்பதை அறிய முடியும்.

## உசாத்துணை:



- இளங்கோவடிகள்: 'சிலப்பதிகாரம்': மூலமும் உரையும்: உரை: ந.மு.வேங்கடசாமி நாட்டார்: மூன்றாம் பதிப்பு 2008: ராமையா பதிப்பகம்: சென்னை.
- சீத்தலைச் சாத்தனார்: 'மணிமேகலை': மூலமும் உரையும்: பதவுரையும் விளக்கமும்: ந.மு. வேங்கடசாமி நாட்டார், ஔவை சு. துரைசாமிப்பிள்ளை:1994:
  திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம்: சென்னை.
- பசாம்: ஏ.எல். : 1954: 'வியத்தகு இந்தியா' : தமிழாக்கம்: செ.வேலாயுதபிள்ளை, மகேசுவரி பாலகிருட்டனன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுரை III

# தமிழகத்தில் கண்ணகி வழிபாடு



ஆய்வார்வலர்
நா.நவநாயகமூர்த்தி

சிலம்பு கூறும் பத்தினி என்ற கண்ணகி வழிபாடு கி.பி இரண்டாம் நூற்றாண்டில் சேரமன்னன் செங்குட்டுவன் என்பவனால் தோற்றுவிக்கப்பட்டுத் தமிழகம் முழுவதிலும் பரவிச்செல்வாக்குப் பெற்றது. சேரநாட்டில் **கொடுங்களூர்** என்ற ஊரில் செங்குட்டுவனால் கண்ணகிக்கு பத்தினிக் கோட்டம் அமைத்து விழாவெடுத்த காலத்தில், செங்குட்டுவனது அழைப்பின் பேரில் ஈழமன்னன் கஜபாகுவும், பாண்டிய மன்னன் வெற்றிவேற்செழியன், சோழமன்னன் பெருநற்கிள்ளி என்போரும் சமூகம் கொடுத்தனர். பண்டைத் தமிழகத்தில் கண்ணகிக்கு எழுப்பப்பட்ட முதற் கோயில் இதுவாகும்.

சேரநாட்டைச் செங்குட்டுவன் ஐம்பத்தைந்து ஆண்டுகள் ஆட்சி புரிந்ததாக பதிற்றுப் பத்தின் ஐந்தாம் பதிகம் கூறும். இவன் கனக விஜயரின் தலைமீது கண்ணகிக்குக் கல்லெடுத்து வந்து வஞ்சியில் தங்கியிருந்த போது இவனுக்கு ஆட்சியாண்டு ஐம்பது என்பதனை மாடலன்,

**"வையங் காவல் பூண்டநின் நன்யாண்டு**
**ஐயைந் திரட்டி சென்றதற் பின்னும்"** என உணர்த்துகின்றான். இந்நிலையில் நடைபெற்ற கண்ணகி விழாவிற்கு இலங்கை கஜபாகுவும் வந்திருந்தான்(சிலம்பு,வர.60). மகாவம்சப்படி கஜபாகுவின் காலம் கி.பி 171 – 196 வரையாகும்.

ஆதலால் செங்குட்டுவன் கி.பி 183 வரை ஆட்சி செய்துள்ளான் எனத் தெரிகிறது. கண்ணகி விழாவிற்கு கஜபாகு வந்த காலம் கி.பி 178 என்று கணிக்கலாம்.[1] இக்காலத்தில் பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்து வந்த வெற்றிவேற்செழியன் என்பவன் கோவலனைத் தவறுதலாகக் கொல்லுவித்துக் கண்ணகியின் சீற்றத்துக்கு ஆளானதாகச்சிலப்பதிகாரம் குறிப்பிடும் நெடுஞ்செழியன் மகனாவான். சிலப்பதிகாரக் கதையின் படி கண்ணகி விழாவில் இலங்கை கஜபாகுவுடன் கலந்து கொண்ட பாண்டியன் வெற்றிவேற்செழியன் கி.பி 190 வரை பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்துள்ளான்.[2]

சேரநாட்டில் கண்ணகிக்கு விழாவெடுத்ததைத் தொடர்ந்து, இவ்விழாவில் கலந்து கொண்ட பாண்டியன் வெற்றிவேற்செழியன், சோழமன்னன் பெருநற்கிள்ளி என்போரும் தங்கள் தங்கள் நாடுகளில் கண்ணகிக்கு ஆலயங்கள் நிர்மாணித்து கண்ணகிக்கு விழாவெடுத்தனர். இதனைத் தொடர்ந்து சேர, சோழ, பாண்டிய நாடுகள் உள்ளிட்ட பண்டைத் தமிழகத்தில் கண்ணகி கோயில்களும், வழிபாடுகளும் எழலாயின. ஒரு சமயம் பாண்டிய நாடு மழை குறைந்து பஞ்சம் நிலவியிருந்ததுடன் வெப்பு நோய்களும் ஏற்பட்டிருந்தன. இவ்வேளை பாண்டியன் வெற்றிவேற்செழியன் கண்ணகிக்கு விழாவெடுத்ததைத் தொடர்ந்து, மழை பெய்து, பஞ்சம் நீங்கி நாடு செழிக்க நோயும், துன்பமும் நீங்கியதாகச் சிலப்பதிகார உரைபெறு கட்டுரை வாயிலாக அறியலாம்.[3]

## பௌத்தமும் கண்ணகி வழிபாடும்

கி.பி மூன்றாம் நூற்றாண்டில் தமிழகம் முழுவதிலும் பத்தினி என்ற கண்ணகி வழிபாடு சிறப்புடன் விளங்கியிருந்தது. வணிகர்குலக் கண்ணகியை பத்தினித் தெய்வமாக நகரத்து மக்களும் (வணிகர், செல்வந்தர்) கிராமத்து மக்களும், மலைவாழ் மக்களான குறவர் குடியினரும் கொண்டிருந்தனர்.

**பலர் தொழு பத்தினிக்கு காட்டிக் கொடுத்த**
**நிலையொன்று பாடுதும்யாம்.......(குன்றக் 7-6)**
**பத்தினிப் பெண்டிர் பரவித் தொழுவாளோர்**
**பைத்தர வல்குல் நம் பைம்புனத் துள்ளாளே.....**(குன்றக் 16-17)
**செஞ்சிலம்பு எறிந்து தேவி முன்னர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வஞ்சினம் சாற்றிய மாபெரும் பத்தினி** (காட்சிக்கா 72- 73)

**பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்** (காட்சிக்கா 114)

என்ற சிலப்பதிகார வரிகளுக்கொப்பக் கண்ணகி வழிபாடு தமிழகத்தில் செழிப்புடன் விளங்கியிருந்தது.[4] மேலும் இக்காலத்தில் கண்ணகி வழிபாடு பௌத்த சமயத்துடன் இணைந்திருந்ததையும் உணரமுடிகின்றது. 'மணிமேகலைக்' காப்பியம் எழுதப்பட்ட காலத்தில் இந்தச் சங்கமம் ஏற்பட்டு விட்டது போல் தெரிகின்றது. வஞ்சிமாநகரில் அமைந்திருந்த பத்தினிக் கோட்டம் பற்றி சாத்தனார் வர்ணித்துள்ளார்.

**"அணியிழை யந்தர மாறா வெழுந்து**
**தணியாக் காதற் றாய் கண்ணகியையும்**
**கொடைகெழு தாதை கோவலன் தன்னையும்**
**கடவுளெழுதிய படிமங் காணிய**
**வேட்கை துரப்பக் கோட்டமும் புகுந்து**
**வணங்கி நின்று குணம் பல வேத்தி**
**அற்புக் கடனில்லாது நற்றவம் படராது**
**கற்புக் கடன் பூண்டு நுங்கடன் முடித்த**
**தருளல் வேண்டுமென்றழுது முன்னிற்ப**
**ஒருபெருங் பத்தினிக் கடவுளாங் குரைப்போள்**
**எம்மிறைக்குற்ற விடுக்கண் பெறாது**
**வெம்மையின் மதுரை வெவ்வழற்படுநாள்**

**..................................................**

**நறைகமழ் கூந்த னங்கை நீயும்**
**முறைமையினிந்த மூதூரகத்தே**
**அவ்வவர் சமயத்தறி பொருள் கேட்டு**
**மெய்வனை யின்மை நினக்கே விளங்கிய**
**பின்னர்ப் பெரியோன் பிடக நெறி கடவாய்**
**இன்ன திவ் வியல்பெனத் தாயெடுத்த துரைத்தலும்**[5]

பைந்தொடியான மணிமேகலை ஆறாத்துயருடன் அருமையான அன்புமிக்க தாயாகிய கண்ணகியையும், கொடையில் சிறந்தவனான கோவலனையும் படிமக் கோலத்தில் பார்ப்பதற்கு அவர்க்கென அமைந்த கோயிலினுட் புகுந்தாள். அங்கு பத்தினியை வணங்கிப் பலவாறாகப் போற்றிய வண்ணமாக நின்று உடன் கட்டை ஏறி எரியினுட் புகாதும் துறவறம் மேற்கொள்ளாதும் கற்பு நெறி வழியே நின்று கடன் முடிந்தவாற்றை ((முடித்த வரலாற்றை) சொல்லியருள வேண்டுமென்று வேண்டினாள்.

அதனைக்கேட்ட பத்தினித் தெய்வம், கணவனாகிய கோவலற்குற்ற துன்பம் ஆற்றாதவளாய் மதுரை மாநகரை எரிவாய்ப்படுத்திய விருத்தாத்தங்களை மணிமேகலைக்குச் சொல்லியது. மேலும் தொன்மை சான்ற வஞ்சிமா நகரிலே சமயற் கணக்கரின் வாதங்களைக் கேட்டறிந்து 'போதிமாதவர்' அருளிய திரிபிடகங்களிலே காணப்படும் தரும நெறியே எல்லாவற்றிலும் மேலானது என்றும் அதனால் அதன் வழிப்படுவாய் என்றும் பத்தினித் தெய்வம் மணிமேகலைக்கு அறிவுறை பகன்றது.[6]

இதன் வாயிலாகப் பத்தினித் தெய்வம் தமிழகத்திலே அக்காலத்தில் பௌத்தர்களால் போற்றி வழிபடப்பட்ட தெய்வம் என்பதும், பௌத்தர்களது வழிபாட்டுக்குரிய இடங்களில் பத்தினி என்ற கண்ணகியின் ஆலயமும் ஒன்றாகும் என்பதை அறிய முடிகின்றது. தமிழகத்தில் பௌத்தம் மக்கள் செல்வாக்குப் பெற்று மகோன்னத நிலையிலிருந்த இக்காலத்தில் சேரநாட்டுத் தலைநகரான வஞ்சிமாநகரமும், தொண்டைமண்டல நகரான காஞ்சியும், பாண்டிய நகரான மாட மதுரையும் பௌத்த நகரங்களாக விளங்கியிருந்தன. தவிர காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திர விகாரையும், நாகப்பட்டினத்தில் நாக விகாரையும் இருந்துள்ளன.[7]

## கி.பி மூன்றாம் நூற்றாண்டு - கி.பி ஏழாம் நூற்றாண்டு வரை

இக்காலம் தொடக்கம் கி.பி ஏழாம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் பௌத்தம் செழித்திருந்ததுடன் இதனோடு இணைந்து கண்ணகி வழிபாடும் சிறப்புடன் நிலவி வந்துள்ளது. இக்காலகட்டத்தில் கண்ணகிக்கு ஏராளமான கோயில்களும் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. தமிழகத்தில் வணிகர்கள், செல்வந்தர்கள், அரசகுடும்பத்தவர் எனப் பலர் பௌத்தத்தைப் பேணியிருந்தனர். இவர்கள் கண்ணகி (பத்தினி) வழிபாட்டையும் கைக்கொண்டிருந்தனர். இக்காலத்தில்கண்ணகி வழிபாடு தமிழகமெங்கும் விழாவாகக் கொண்டாடப்பட்டு வந்துள்ளது. மேலும் காளி, கொற்றவை வணக்கங்கள் கண்ணகி வழிபாட்டில் (பத்தினி) அடங்கிய தன்மையினை அறியமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி மூன்றாம் நூற்றாண்டுக்கும், ஐந்தாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழகத்தை ஆட்சி புரிந்த களப்பிர மன்னர்கள் பௌத்த சமயத்தைப் பெரிய அளவில் ஆதரித்தனர். இவர்களது ஆட்சிக்காலத்தில் பௌத்தம் பெரும் புகழுடன் கொடிகட்டிப் பறந்தது. இக்களபிர அரசர்களில் கி.பி நான்காம் நூற்றாண்டில் சோழ நாட்டை ஆட்சி புரிந்த "அச்சுத விகந்தன்" என்ற அரசன் பௌத்தத்தின் சேவைக்காகத் தன் வாழ்நாட்களை அர்ப்பணித்த அரசன் எனப் புகழ்ந்துரைக்கப் படுகின்றான். இக்காலத்தில் இலங்கையிலிருந்து சென்றிருந்த 'புத்தநந்தர்' என்னும் பேராசிரியர் காவிரிப்பூம் பட்டினத்திலுள்ள பள்ளியொன்றில் தங்கியிருந்து " அபிதம்மவதாரம்" என்னும் நூலை எழுதியுள்ளார்.[8]

கி.பி நாலாம் நுற்றாண்டில் (கி.பி 399) சீனாவிலிருந்து புறப்பட்ட சீன பௌத்த யாத்திரிகரான பாகியான் இந்தியாவுக்கு வந்து மதுரைக்குச் சென்றிருந்தார். அக்காலத்தில் (கி.பி 399- 414) மதுரையில் இருபது பௌத்த ஆச்சிரமங்கள் இருந்ததாகவும், மூவாயிரத்திற்கு மேற்பட்ட பௌத்த துறவிகள் இங்கிருந்ததாக பாகியான் தனது குறிப்பில் குறிப்பிடுகின்றார். (டிஸ்கிறிப்சன் ஒப்த புடீஸ்ட் கிங்டம் - மொழி பெயர்ப்பு ரமு சற் பாரிஸ் - 1836)[9] இக்காலத்தில் மதுரையில் மட்டும் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் பௌத்த துறவிகள் இருந்துள்ளனரென்றால் தமிழகத்தில் பிற நகரங்களில் வாழ்ந்திருந்த பௌத்தர்களின் தொகையினை புரிந்து கொள்ளலாம்.

கி.பி நாலாம் ஐந்தாம் நூற்றாண்டுகளில் களப்பிரர் ஆட்சியைத் தொடர்ந்து கி.பி ஏழாம் நூற்றாண்டு வரையுள்ள பல்லவர் காலத்திலும் தமிழகத்தில் பௌத்தம் செழிப்புடன் நிலவி வந்தது. இக்காலத்தில் ஆட்சி புரிந்த பல்லவ மன்னர் பலரும் பௌத்த நெறிகளைப் பின்பற்றுபவர்களாக விருந்துள்ளனர். 'புத்தவர்மன்' என்ற பல்லவன் காஞ்சி புரத்தில் பல ஆச்சிரமங்களை உருவாக்கியதுடன் அவற்றை ஆதரித்தும் வந்துள்ளான். பல்லவன் சிம்மவிஷ்ணுக்கு (கி.பி 556-590)முன்னர் ஆட்சி புரிந்த வீரசவர்ச்சன், ஸ்கந்தசிஷ்யன், குமார விஷ்ணு அவன் மகன் புத்தவர்மன் ஆகிய நான்கு பல்லவ அரசர்களையும் பற்றி வயலூர் கல்வெட்டு குறிப்பிடுகின்றது.[10]

இவ்வாறு, கி.பி ஏழாம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் பௌத்தம் செழிப்புடன் விளங்கியிருந்த அக்காலத்தில் சிலம்பு கூறும் பத்தினி என்ற கண்ணகி வழிபாடு பௌத்த சமயத்துடன் இணைந்திருந்த தன்மையைக் கொண்டிருந்த போதும், இந்து சமய நம்பிக்கைகளைக் கொண்டிருந்த மலைவாழ் மக்கள்உள்ளிட்ட அனைத்து தமிழ் மக்களிடையேயும் செல்வாக்குப் பெற்றிருந்தது.பொதுவாகக் கூறுமிடத்து பழந்தமிழரின் கொற்றவை என்ற தாய்த் தெய்வத்தின் மறுவடிவமாகவே பத்தினித் தெய்வமான கண்ணகியைக் கருதி தமிழகத்து மக்கள் நம்பிக்கையுடன் வழிபட்டு வந்தனர் எனலாம்.

இக்காலகட்டத்தில் அதாவது கிபி ஆறாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தமிழகத்தில் வாழ்ந்த மக்களிடையே சிவலிங்க வழிபாடு, சூரிய வழிபாடு, சிவ, பார்வதி, விஷ்ணு, முருகன் ஆகிய தெய்வங்களின் வழிபாடு வழக்கத்திலிருந்த போதும் இத்தமிழ் மக்களின் அக்காலத்தைய மதம் சைவமதம் என்ற பெயரால் சமகால இலக்கியங்கள் எதிலும் பதிவு செய்யப்படவில்லை. சிவலிங்க வணக்கத்தை மேற் கொண்ட பல தமிழர் பௌத்தமத வழிபாட்டையும் மேற்கொண்டிருந்தனர் என்பதை அகழ்வுகளில் பௌத்தமதச் சின்னங்களுடன் காணப்படும் சிவலிங்கங்களும், தாய்க்கடவுளின் சுடுமண்சிலைகளும் காட்டி நிற்கின்றன.
அக்காலத்தில் சிவலிங்க வணக்கத்தோடு பௌத்தத்தையும் கைக்கொண்டவர்கள் சிவ பௌத்தர்கள் என அழைக்கப்பட்டனர்.[11] ஆதலால் பௌத்தர்கள் மட்டுமன்றித் தமிழகத்தில் வாழ்ந்திருந்த அனைத்துத் தமிழரிடையே யும் அக்காலத்தில் கண்ணகி வழிபாடு நிலவியிருந்தது என்பது தெளிவாகின்றது.

## கி.பி 7ம் நூற் : கி.பி 9ம் நூற்றாண்டு வரை

அடுத்துவரும் காலத்தில் அதாவது கிபி ஏழாம் நூற்றாண்டு தொடக்கம் கிபி ஒன்பதாம் நூற்றாண்டு வரையுள்ள பல்லவர் பாண்டிய மன்னர் காலத்தில் பௌத்தத்தின் புகழ் (சமணமும் கூட) இந்துக்களிடையே பெரும்தாக்கத்தை ஏற்படுத்தியது.இம்மதங்களுக்கெதிராக சைவர்களுக்கிடையே நாயன்மார்களும், வைணவர்களுக்கிடையே ஆழ்வார்களும் தோன்றி ஓர்வலிமை வாய்ந்த இயக்கம் எழுச்சி பெற்றது. பௌத்த சமணர்களுடைய வளர்ச்சியைத் தடுப்பதற்காகவும் எதிர் காலத்தில் அவர்களை ஒடுக்குவதற்காகவும் தோன்றிய இவ்வியக்கம் (பக்தி இயக்கம்) பெருமளவு வெற்றியைப் பெற்றது.[12]

இக்காலத்தில் ஏற்பட்ட இந்து மத மறுமலர்ச்சியின் போது நடாத்தப்பட்ட பெரும் சமயவாதுகளினால் சமணத்தை விட பௌத்தமே கூடியளவு பாதிக்கப்பட்டது எனலாம்.[13]

மேலும் இக்காலத்தில் பௌத்தத்தில் பல பிரிவுகள் இருந்துள்ளன. "அறுவகைத் தேரரும்" என திருஞானசம்பந்தர் தேவாரத்தில் குறிப்பிடுகின்றார். இந்த உட்பிரிவினர் தமக்குத் தாமே தர்க்கங்களில் ஈடுபட்டு ஒருவரோடு ஒருவர் மோதி தங்கள் மதவீழ்ச்சிக்குத் தாமே காரணமாயினர் எனலாம். ஆயினும் கிபி ஏழாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டின் நடுப்பகுதி வரை தமிழகத்தில் பௌத்தம் தனது செல்வாக்கை முற்றாக இழக்கவில்லை எனத் தெரிகின்றது.

சீனப் பயணியான யுவான் - சுவான் கிபி 640ல் காஞ்சிபுரத்திற்கும், மதுரைக்கும் வந்திருந்தார். அவர் தனது பிரயாணக்குறிப்பில் காஞ்சிபுரத்தில் சுமார் நூறு பௌத்த ஆச்சிரமங்கள் இருந்ததையும், மதுரையில் பௌத்த விகாரைகள் இருந்ததையும் குறிப்பிட்டுள்ளார். (புடீஸ்ட் றெக்கோட்ஸ் ஒப்த வெஸ்றேன் வேல்ட் தொகுதி -XI மொழி பெயர்ப்பு ரெவ சாமுவல்பீல் லண்டன் 1871)[14] இதேவேளை மதுரைக்கண்மையில் மகேந்திரரால் கட்டப்பட்ட ஒரு புத்த மடாலயத்தையும், அதற்குக் கிழக்கே அசோகரால் கட்டப்பட்ட ஒரு தூபியையும் தாம் கண்டதாகவும், அவையிரண்டும் இடிந்து சிதைந்து காணப்பட்டதாகவும் யுவான் - சுவாங்கு குறிப்பிடுகின்றார்.[15]

முதலாம் நரசிம்ம பல்லவனின் (கிபி 630 – 668) ஆட்சிக்காலத்திலேயே யுவான் - சுவான் தமிழகத்துக்கு வந்திருந்தார். இவ்வேளை அப்பர், சம்பந்தர் ஆகிய இருவரும் வாழ்ந்திருந்தனர். இக்காலத்திலும், இதற்குப் பிற்பட்ட கிபி எட்டாம் ஒன்பதாம் (மாணிக்கவாசகர் காலம்) நூற்றாண்டு காலங்களிலும் தமிழகத்தில் இடம் பெற்று வந்த பெரும் சமயவாதுகளினால் பௌத்தம் பெரும் பாதிப்புக்குள்ளனதுடன், தமிழக மக்கள் வாழ்க்கையிலே பெற்றிருந்த பெரும் செல்வாக்கினை இழந்தது. இதன் விளைவாக பௌத்தத்துடன் இணைந்து சிறப்புடன் மிளிர்ந்து வந்த சிலம்பு கூறும் பத்தினி என்ற கண்ணகி வழிபாடும் செல்வாக்கினை இழந்தது.

கிபி ஏழாம் நூற்றாண்டில் பல்லவர் காலத்தில் மலர்ந்த பக்தி இயக்கம் காரணமாகத் தமிழகத்தில் தமிழர்களிடையே கண்ணகி வழிபாடு, சக்தி வழிபாடாக மாற்றம் பெற்றது. பல்லவர்காலத்தில் ஏராளமான கண்ணகி ஆலயங்கள் காளி, துர்க்கை, மாரி, பகவதி, நீலி ஆலயங்களாக மாற்றமடைந்ததை அறியமுடிகின்றது. கிபி ஒன்பதாம் நூற்றாண்டு வரை இந்நிலை நீடித்திருந்தது.

## சோழர் பாண்டியர் காலம்

கிபி 10ம், 11ம் நுற்றாண்டுகளில் சோழப்பெருமன்னர் காலத்திலும் அடுத்துப் பாண்டியர் காலத்திலும் பௌத்த மதம் பற்றிய குறிப்புக்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்ற போதும் தமிழகத்தில் சில இடங்களில் கண்ணகி வழிபாடு பௌத்தர்களிடையேயும், இந்துக்களிடையேயும் நிலவி வந்துள்ளது என அறியமுடிகின்றது. சோழர் காலத்தில் சோழநாட்டில் ஒரு பௌத்த சங்கம் இயங்கி வந்துள்ளது. இதற்கு முதலாவது விக்கிரமபாகுவின் பொலநறுவைக் கல்வெட்டு (Epigraphia zeylanica iv பக்க. 71 – 72) சான்று பகருகின்றது. இக்காலப்பகுதியில் ஸ்ரீ விஜயத்திலிருந்து இந்தியாவுக்கு யாத்திரை சென்ற குடிகளின் நன்மை கருதி ஸ்ரீவிஜய இராச்சியத்தின் மன்னன் நாகப்பட்டினத்தில் கட்டிய பெருவிகாரையாகிய சூடாமணி வர்ம விகாரையைப் பற்றி அறியமுடிகின்றது. (Epigraphia indica – Vol. XXII) சோழமன்னர்களாகிய முதலாம் ராஜ ராஜனும், முதலாம் ராஜேந்திரனும் இந்த விகாரைக்கு 'ஆனை மங்கலம்' என்ற முழுக்கிராமத்தையே மானியமாகக் கொடுத்துள்ளனர். மேலும் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் ஸ்ரீ விஜய மன்னன் கேட்டுக் கொண்ட படி ஒரு மானியம் இந்த விகாரைக்கு அளிக்கப்பட்டதையும் அறியமுடிகின்றது.[16]

இதற்குப் பிற்பட்ட பாண்டியர் காலத்திலும் தமிழகத்தில் பௌத்தம் நிலைத்திருந்தது. இதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் உ ள்ளன. ஜாவா மொழியில் எழுதப்பட்டுள்ள நூலொன்றின் படி காஞ்சிபுரத்தில் வாழ்ந்திருந்த 'புத்தாதித்தியர்' என்ற பிக்கு கிபி பதினாலாம் நூற்றாண்டிலேயேஜாவா மன்னனாகிய 'ஹயம் புரூக்'என்பவனைப் புகழ்ந்து சில சுலோகங்களும் பாடியுள்ளார். (க.அ.நீலகண்ட சாஸ்திரி-1968) இவ்வாறு தமிழகத்தில் பௌத்தம் ஓரளவுநிலவியிருந்த சோழர் காலத்திலும் (கிபி 10ம், 11ம், 12ம் நூற்) பாண்டியர் காலத்திலும் (கி.பி 13ம், 14ம் நூற்றாண்டு) பௌத்தத்துடன் இணைந்ததாக சிலம்பு கூறும் கண்ணகி வழிபாடும் நிலவியிருந்தது.

சோழப் பெருமன்னர்கள் பௌத்தத்துடன்கண்ணகி வழிபாட்டையும் ஆதரித்து வந்துள்ளனர். சோழநாட்டுக் குறிப்பொன்று முதலாம் ராஜராஜனால் தமிழகத்தில் நிர்மாணிக்கப்பட்ட கண்ணகி கோயில் பற்றி விபரிக்கின்றது. கிபி பதினோராம் நூற்றாண்டில் தமிழகம் முழுவதையும் ஒருகுடையின் கீழ் ஆட்சி புரிந்த முதலாம் ராஜராஜன் இலங்கையைக் கைப்பற்றி சிங்கள மன்னனாகிய ஐந்தாம் மகிந்தனையும், மனைவியையும் சிறைபிடித்துச் சென்றான். தஞ்சையில் அமைந்திருந்த மாளிகையொன்றில் அவ்விருவரும் மரியாதையுடன் வைத்துக் காவல் செய்யப்பட்டனர்.

சிங்கள மன்னின் மனைவி கண்ணகி வழிபாடு குன்றாதவள் ஆகையால் அவ்வழிபாடு இல்லாது உ யிர் வாழ்வதற்காகப் பெரிதும் வருந்தினாள். பகைவர் மீதும் அருட்கண் செலுத்தும் பண்பு கொண்ட ராஜராஜன் இதனை அறிந்து அவள் விருப்பப்படியே கண்ணகிக் கோயில் ஒன்றை நிர்மாணித்துக் கொடுத்ததோடு, பத்தினி விழாவும் ஒழுங்குபட நடந்து வரச் செய்தான்.[17] தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலுக்குச் சிறிது தூரத்தில் இந்தக் கண்ணகி கோயில் இன்றும் உ ள்ளது. இவ்வாலயம் சிங்கள நாச்சியார் ஆலயம் என்று சோழர் காலத்தில் விளங்கியிருந்ததாக அறிய முடிகிறது.

சேரநாட்டை முதலாம் ராஜராஜன் கைப்பற்றி வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் சேரன் செங்குட்டுவனால் நிர்மாணிக்கப்பட்ட கண்ணகி கோட்டங்களிலொன்றான நெடுங்குன்றத்து மலை (நெடுவேல் குன்றம்) கண்ணகி கோட்டத்தை புனரமைத்துள்ளான். சோழரது ஆட்சிக் காலத்தில் இங்குள்ள அம்மன் பூரணகிரி ஆளுடை நாச்சியார் என்ற பெயரில் அழைக்கப்பட்டமை வரலாற்றுப் பதிவாகும். இன்று நெடுங்குன்றம் கண்ணகி கோட்டத்தில் அவளது தெய்வீக சிலை இல்லாமல் சுமார் இருநூறுசதுர அடியினைக் கொண்ட அழகிய பரந்த பீடமே இங்கு தென் படுகின்றது.

எனினும் ராஜராஜனால் கட்டப்பட்ட கோயிலிலுள்ள சந்தனச் சிற்பத்தில் பதிக்கப்பட்ட வெள்ளியிலான கண்ணகியின் முகத்தை (முகக்களை) பக்தர்கள் இன்று தரிசித்து வருகின்றனர். சிதைந்த நிலையில் இன்று காணப்படும் கண்ணகி கோட்டத்தின் அருகில் காட்சி தரும் முதலாம் ராஜராஜனின் வட்டக்கல் வெட்டு அவனால் கட்டப்பட்டு அழிபாடுற்றுக் கிடக்கின்ற ஆலயமும், வடக்கு மற்றும் தெற்கிலே அமைந்திருந்த மகரதூண்களின் கற்றூண்களும் வரலாற்றுப் பெருமையைத் தெளிவுறுத்தும் சான்றுகளாக மிளிர்கின்றன.[18] இதேவேளை சோழர் இலங்கையைக் கைப்பற்றி ஆட்சி புரிந்த காலத்தில் (கிபி 983 – 1071) பௌத்த சமயத்தையும் ஆதரித்து வந்த சோழமன்னர் கண்ணகி வழிபாட்டையும் ஏற்றுக் கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கதெனலாம்.[19]

கிபி பதிமூன்றாம் நூற்றாண்டின் பின்னர் அதாவது பாண்டியர் ஆட்சிக்குப் பின்னர் பௌத்தம் தமிழகத்திலிருந்து படிப்படியாக மறையத் தொடங்கி (விஜயநகர ஆட்சிக் காலம்) கிபி பதினைந்தாம் நூற்றாண்டளவில் முற்றாகவே மறைந்து போனதுடன் பௌத்தத்துடன் இணைந்து நிலவி வந்த சிலம்பு கூறும் பத்தினி என்ற கண்ணகி வழிபாடும் வழக்கொழிந்து போனது. அக்காலத்தில் கண்ணகியின் கதை பல நாட்டுப் பாடல்களாக மக்களிடையே வழங்கியிருக்க வேண்டும். பிற்காலத்தில் இக்கதை பலவகையாகத் திரிந்து வைசிய புராணத்தில் ஒரு பகுதியாக அமைந்தது.

## தமிழகத்தில் நிலவி வரும் கண்ணகி வழிபாட்டு அம்சங்கள், நம்பிக்கைகள்

சிலம்பு கூறும் பத்தினி என்ற கண்ணகி வழிபாடு தமிழகத்தில் இன்று வழக்கொழிந்து போன போதும் கிபி மூன்றாம் நூற்றாண்டு தொடக்கம் கிபி ஏழாம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் செழிப்புடன் விளங்கியிருந்த கண்ணகி வழிபாடு, இதனைத் தொடர்ந்து கிபி பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை நிலவி வந்த கண்ணகி வழிபாடு ஆகியனவற்றின் தொடர்ச்சியாக இன்று தமிழகத்தில் சிறப்புடன் விளங்கி வரும் சக்தி ஆலயங்கள் சிலவற்றில் சக்தி வழிபாட்டுடன் கண்ணகி வழிபாட்டு அம்சங்களும், நம்பிக்கைகளும் இடம் பெற்று வருவதைக் காணமுடிகின்றது.

இதனை விளங்கக் குறிப்பிடுமிடத்து கிபி மூன்றாம் நூற்றாண்டுக்கும்,கிபி பதின்மூன்றாம் நூற்றாண்டுக்குமிடைப் பட்ட காலத்தில் கண்ணகி ஆலயங்களாக விளங்கி வந்து பிற்காலத்தில் சக்தி ஆலயங்களாக மாற்றமடைந்து இன்றைய காலத்தில் பகவதி, காளி, துர்க்கை, நீலி அம்மன் கோயில்களாக நிலவி வரும் சக்தி ஆலயங்கள் சிலவற்றில் கண்ணகி வழிபாட்டு முறைகளும், நம்பிக்கைகளும் நிலவி வருகின்றன. அத்துடன் தமிழகத்தில் வாழ்ந்து வரும் சில குடியினர் தங்கள் குலதெய்வமாகக் கண்ணகியைப் போற்றி வருவதையும் அறிய முடிகின்றது.

தமிழகத்தில் செங்குட்டுவன் கட்டிய கண்ணகிக் கோயில்களுக்குப் பிறகுபல கோயில்கள் அமைந்திருந்தன. அவை சிதைந்தும், மாறியும் போயின எனலாம். பண்டைத்தமிழகத்தின் சேரநாட்டில் 'கொடுங்கோளூர்' என்னுமிடத்தில் செங்குட்டுவன் கட்டிய கண்ணகிக் கோட்டத்தில் கோயில் கொண்டிருக்கும் 'பகவதியம்மன்' ஒற்றைமுலைச்சி அம்மனாகவே வழிபடப்பட்டு வருகின்றார். இக் கோயில்தான் சேரமன்னன் பத்தினிக் கடவுளுக்கு எடுத்த முதற்கோட்டமாகும்.

கொங்கு நாட்டில் கருவூரில் அமைந்திருக்கும் வஞ்சியம்மன், வலங்கையம்மன்என்ற இரு கோயில்களிலும் வலங்கையம்மன கோயில் வழிபாடும், வரலாறும்கண்ணகி வழிபாட்டை நினைவூட்டுகின்றன. இக்கோயில் சேரன்செங்குட்டுவன் கண்ணகிக்கு எடுத்த முதற் கோயிலாக இருத்தல் வேண்டும் என்று பேராசிரியர் மு.இராகவையங்கார் கருதுகின்றார். (பண்டிதர் விசிகந்தையா – 1964) கேரளத்தில் இன்று கிராமிய மக்களிடையே நிலவி வரும் நீலி வழிபாடு கண்ணகி வழிபாட்டின் தொடர்ச்சியேயாகும்.

சேரநாட்டில் திருவனந்தபுரம் கிழக்கே கோட்டையத்திலிருந்து சுமார் இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது ஆற்றுக்கால் என்னும் ஊராகும். இங்குள்ள பகவதியம்மன் கோயில் பெண்களின் சபரிமலை என அழைக்கப்படுகின்றது. ஆண்டு தோறும் பெப்ரவரி அல்லது மார்ச் மாதத்தில் இக்கோயில் பொங்கல் மஹோற்சவம் இடம் பெறும். மதுரையை எரித்த கண்ணகி கன்னியாகுமாரி வழியாக கேரளத்துக்கு (சேரநாடு) சென்றதாகவும் கொடுங்கல்லூருக்கு இவள் செல்லும் வழியில் ஆற்றுக்காலில் தங்கியதாகவும் எனவே ஆற்றுக்கால் பகவதியம்மன் கண்ணகியின் அவதாரமாகவிருக்கலாம் என்று இங்குள்ளோர் கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்குள்ள கோபுரத்தில் சிலப்பதிகாரக் காட்சிகள் இடம்பெற்றுள்ளன. மேற்குறிப்பிட்ட கூற்றை இவை உறுதி செய்கின்றன. பகவதியம்மனை வழிபட்டு பொங்கலிட்டால் மாங்கல்யபாக்கியம், குழந்தைப் பேறு கிட்டும் என்பது நம்பிக்கை, தீராத வியாதிகளும் தீரும் என்கின்றனர். கண்ணகி வழிபாட்டு அம்சங்கள் நம்பிக்கைகள் என்பவற்றை அவை நினைவூட்டுகின்றன.

கண்ணகி தன்கைவளையல்களை உடைத்த இடம் செட்டிநாட்டிலுள்ள கீழைக் கோட்டையாகும். இங்கே ஒரு காளி கோயில் உள்ளது. இது பழைய ஆலயமாகும். மதுரையில் கண்ணகிக்கு செண்பகச் செல்வி என்ற கோயில் உண்டு. இங்குதான் கண்ணகியை பிடாரியம்மன் என்ற கிழவியிடம் கோவலன் கொலை செய்யப்படுவதற்கு முன் விட்டுச் சென்றான். இங்கிருந்துதான் முந்தைய திருவாங்கூருக்கு கண்ணகி புறப்பட்டுச் சென்றாள் எனச் சிலம்பு கூறுகின்றது. மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்கருகிலே செல்வத்தம்மன் என்றழைக்கப்படும் துர்க்கை கோயிலில் ஒற்றைக்கால் சிலம்புடன் காணப்படும் சிலை கண்ணகியின் படிமமாகவே இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. இவ்வாறு ஒற்றைக்காலில் சிலம்பு பூண்ட சிலையொன்று கங்கை கொண்ட சோழபுரத்து பெருங் கோயிலிலும் காணப்படுகின்றது.

சென்னை நகருக்கு வடபால் உள்ள திருவொற்றியூரில் அமைந்திருக்கும் சிவாலயத்தில் வடக்கு வீதியிலே ஒரு துர்க்கை கோயில் தனியாகவுள்ளது. இதில் உறையும் தேவி பத்தினிக் கண்ணகியின் மறு வடிவம் கொண்டவளாவார். தமிழகத்தில் வழங்கி வரும் கோவலன் கதையில் கூறப்படும் வரலாறும் இதற்குச் சான்று பகருகின்றது. காளி அம்சமாக இருந்த பத்தினித் தேவி (கண்ணகி) திருவொற்றையூருக்கு வந்து 'வட்டபுரியம்மன' ஆகி விழாக்கொண்டிருந்தார் என்பது அந்நூற் கதைக் கூற்றாகும்.

திருவொற்றியூரில் இவ்விழாக்கள் பதினைந்து நாட்கள் நடப்பதும், முடிவில் கண்ணகி மதுரையை எரித்த நினைவாக பொய்ப் பந்தல் ஒன்று அமைத்து அதனை எரியூட்டுவதும் இக்கோயிலைக் கண்ணகிக்கு உரித்தாக்குகின்றது. நீலகிரியைச் சேர்ந்த உதக மண்டலத்து மலைக்குன்றுகளில் வாழ்ந்து வரும் 'தோடர்'களுடைய வரலாற்று மரபினை நோக்குமிடத்து தாம் வணங்கும் துர்க்காபகவதி பாண்டிய நாட்டினை எரித்தவள் என்றும் அம்மக்கள் கூறுவர். (பண்டிதர் வி.சி.கந்தையா-1964) செங்குட்டவன் காலம் தொடக்கம் இம்மக்களிடையே நிலவி வந்த கண்ணகி வழிபாட்டின் மறுவடிவமே 'துர்க்காபகவதி'யாகும் என்பதை இவர்களது மேற்படி கூற்று உணர்த்தும்.

தமிழகத்தில் வாழ்ந்து வரும் நகரத்தார் என்ற சமூகத்தினரிடையே இக்காலத்தில் நிலவி வரும் கண்ணாத்தாள் வழிபாடானது சிலம்பு கூறும் பத்தினி என்ற கண்ணகி வழிபாட்டின் தொடர்ச்சியேயாகும். கண்ணகி கண்ணாத்தாள் என்ற தெய்வமாக நகரத்தார் சமூகத்தினரிடையே காணப்படுகின்றார் என்று கவிஞர் கண்ணதாசன் குறிப்பிடுகின்றார். தங்கள் குலதெய்வமாகவே இவர்கள் வழிபட்டு வருகின்றனர்.

நகரத்தார் என்ற பெயரே காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து வந்தவரைக் குறிக்கும். சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் கோவலன் கண்ணகி திருமணமுறைகள், வாழ்க்கை நெறிகள் என்பன இக்காலத்தில் நகரத்தார் என்ற சமூகத்தினரிடையே வழங்கும் பழக்க வழக்கத்துடன் ஒத்திருப்பதாக கவிஞர் மேலும் குறிப்பிடுகின்றார். சிலம்பில் தனிப்பெரும் பயிற்சியுள்ள சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் அவர்களின் முடிவும் அதுவேயாகும். குடல் வாணிபம், திருமணமுறை, ஆசை நாயகி வைத்துக் கொள்ளுதல் முதலியன அவர் கூறும் காரணங்களாகும்.

கண்ணகியின் வாழ்க்கை தமிழ் பெண்களின் வாழ்விலும், அம்மன் கோயில்களிலும் (சக்தி ஆலயங்கள்) பல மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளது. மதுரையில் கண்ணகி கொதித்தெழுந்து, பாண்டியனிடம் தன் கணவன் கள்வன் அல்ல என்பதை நிறுவி ஊரைத் தீக்கு இரையாக்கிய நாள் (தீப்பெருந்த) வெள்ளிக்கிழமையாகும். இன்று வரையில் தமிழ் நாட்டுப் பெண்களுக்கு வெள்ளிக்கிழமை என்பது மிகப்புனிதமான நாளாக இருந்து வருகின்றது. (டாக்டர் மு.வரதராசன் - 1972)

1967ல் தமிழக அரசு நடாத்திய உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டு விழாவில் ஓர் நிகழ்வாக கற்பின் செல்வியாம் கண்ணகிக்கும் சிலை நிறுவப்பட்டது. தனக்கென வாழாது பிறருக்கென வாழ்ந்து மறைந்த சான்றோர், மானம் காத்த வீரமறவர், தேசவிடுதலை வீரர், அறிஞர், புலவர் என்போர் நினைவாகச் சிலை நிறுவி அவர்களைப் போற்றி வருவது தமிழர் பண்பாட்டு விழுமியங்களில் ஒன்றாகும். இந்த வகையில்

**"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும்**

**திண்மையுண்டாகப் பெறின்"** என்ற வள்ளுவன்குறள் வரிகளுக்கொப்ப பத்தினிப் பெண் கண்ணகிக்கும் சிலை நிறுவிப் போற்றி வருவது பொருத்தமானதாகும்.

ஒட்டு மொத்தமாக நோக்குமிடத்து சேரநாட்டில் செங்குட்டுவனால் கண்ணகி வழிபாடு தோற்றுவிக்கப்பட்டதை தொடர்ந்து தமிழகமெங்கும் கண்ணகி வழிபாடு பரவியிருந்தது. மணிமேகலை இலக்கியம் உருவான காலத்தில் கண்ணகி வழிபாடு பௌத்தத்துடன் இணைந்த தன்மையைக் காண முடிகின்றது. இக்காலம் தொடக்கம் கிபி ஏழாம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் கண்ணகி வழிபாடு செழிப்புடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கியிருந்தது. இக்காலகட்டத்தில் பௌத்தர்கள் மட்டுமன்றி பௌத்தம் சாராத ஏனைய மக்களிடையேயும் கண்ணகி வழிபாடு சிறப்புடன் விளங்கியிருந்தது. கிபி ஐந்தாம் நூற்றாண்டில் பல்லவர் ஆட்சியைத் தொடர்ந்து கிபி ஏழாம் நூற்றாண்டுக்கும், ஓன்பதாம் நூற்றாண்டுக்குமிடைப்பட்ட காலத்தில் எழுச்சிபெற்றிருந்த பக்தி இயக்கத்தின் செயற்பாடுகள் காரணமாகப் பௌத்தம் (சமணமும் கூட) பெரும் பாதிப்பினை அடைந்ததுடன் இதனுடன் இணைந்து சிறப்புடன் மிளிர்ந்து வந்த கண்ணகி வழிபாடும் தனது செல்வாக்கை இழந்தது. ஆயினும் கிபி ஒன்பதாம் நூற்றாண்டு தொடக்கம், பதிமூன்றாம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்திருந்த கணிசமான தொகையினரான பௌத்தர்களிடையேயும், பௌத்தம் சாராத(மலை வாழ் மக்கள் உள்ளிட்ட) சில குடியினரிடையேயும் கண்ணகி வழிபாடு இருந்து வந்தது. இதற்குப் பிற்பட்ட காலத்தில் தமிழகத்திலிருந்து பௌத்தம் படிப்படியாக மறைந்து போனபோதும் கண்ணகி வழிபாடானது சக்தி வழிபாட்டுடன் சங்கமமாகிய நிலையில் தமிழகத்தில் சக்தி ஆலயங்கள் சிலவற்றில்நிலவி வருகின்றன. இதேவேளை ஒருசாரார் கணணகியை தங்கள் குலதெய்வமாகவும் போற்றி வருகின்றனர் என்பதாம். மேலும் இக்கட்டுரையானது குறிப்பாக சேரநாடு உள்ளிட்ட பண்டைத்தமிழக கண்ணகி வழிபாடு பற்றிக்குறிப்பிடுகின்றது.

முற்றும்

## குறிப்புக்கள்

1) செங்குட்டுவனது 35வது ஆட்சியாண்டில்தான் (கிபி163) கோவலன் கண்ணகி திருமணம் நடைபெற்றுள்ளது. இவ்வேளை புகாரில் கரிகால்வளவனும், மதுரையில் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனும் ஆட்சியிலிருந்தனர். கோவலன் கொலையுண்டது செங்குட்டுவனது நற்பத்தேழாவது (கிபி175) ஆண்டிலேயாகும். இதன் பின்னர் செங்குட்டுவன் கண்ணகிக்கு விழாவெடுத்தான்.(ஆரிய திராவிடரும் அழிந்து போன சங்கங்களும் - பக் - 18,89 துரை ஜெகநாதன் - 1982)

2) இலேமூரியா அல்லது குமரிக்கண்டம் }பக்,93 பன்மொழிப்புலவர் கா.அப்பாத்துரையர் மறுபதிப்பு 2004

3) மட்டக்களப்புத் தமிழகம் - பக், 168 பண்டிதர் வி.சி.கந்தையா – 1964

4) கண்ணகியும் மாதவியும் - கட்டுரை மனோன் மணி சண்முகதாஸ் "சிலப்பதிகாரத்தில் பண்பாட்டுக் கோலங்கள் பக், 268,269 – 2003

* கண்ணகியைப் பத்தினி என்பது பழகிய ஓர் இலக்கிய வழக்காகும், கண்ணகியே தன்னைப் பத்தினி என்று குறித்துக் கொள்கின்றாள். (ஈழம் தமிழரின் தாயகம் - பக்-89,90 – அறிஞர் க.ப.அறவாணன் - 2000)

5) மணிமேகலை – வ.வே.சாமிநாதய்யர் பதிப்பு – 1965 வஞ்சிமாநகர் புக்ககாதை வரிகள்,1-12, 62-67, பக்.292-294

* தமிழ்த்துறவிகளே முதலில் பௌத்தத்தை வளர்த்தனர். இந்துசமய நம்பிக்கைகளைக் கொண்டிருந்தவர்கள் பௌத்தர்களாக மாறினர். பௌத்தத்தைத் தழுவியசைவர்கள் தாம் வழிபட்டுப் போற்றிய கண்ணகி வழிபாட்டை பௌத்தத்துக்குள் நுழைத்தனர். இவ்வாறு ஆய்வாளர்கள் சிலர் குறிப்பிடுவதையும் நோக்கலாம்

6) இலங்கையில் இந்து கலாசாரம் பகுதிI :- பக்- 295,296 கலாநிதி சி.பத்மநாதன்

7) தமிழ் நாட்டில் கிமு 5ம் நூற்றாண்டில் அறிமுகமான பௌத்தம் (புத்தரின் போதனைகள்) கிமு 3ம் நூற்றாண்டு முதல் கிபி ஏழாம் நூற்றாண்டு வரை உன்னத நிலையிலிருந்து கிபி 13ம் நூற்றாண்டின் பின்னர் இம்மதம் மறையத் தொடங்கி கிபி 15ம் நூற்றாண்டளவில் முற்றாக மறைந்து போயிற்று (இந்துமத பௌத்தமத உறவுகள் - கட்டுரை. டாக்டர் ச. தியாகராசா. வீரகேசரி வாரமலர். 10.04.2005)

8) தொல்லியல் ஆய்வுகள் :- பக, 32,33 டாக்டர் கே.வி.ராமன் பேராசிரியர்.

* களப்பிரர் மூவேந்தர் நாட்டை கைப்பற்றி ஆட்சி புரிந்த போதும் (கிபி 4ம்,5ம்நூற்)தமிழ் வேந்தர்களுக்குரிய கயல், வில், புலி என்ற அடையாளங்களையே கொண்டிருந்தனர். களப்பினர் தமிழுக்கோ, சைவ, வைணவ மதங்களுக்கோ எவ்வித இடையூறுகளும் அளிக்கவில்லை.(ஆரிய திராவிடர்களும் அழிந்து போன சங்கங்களும் - பக்,13 துரை ஜெகநாதன் 1982)

9) பாகியன் ஒன்பது ஆண்டுகள்(399- 414) இந்தியாவில் சுற்றி வந்தார் (இந்தியா வரலாறு – பக் 319, ஆர்.சத்தியநாதய்யர், டி.பாலசுப்பிரமணியம் - 1959)

10) Epigraphic Indica vol xviii. Page, 45 – 52 (பல்லவன் கண்ட பனைமலைக் கோயில்கள். பக், 65 புலவர் ந.வெங்கடேசன்-1990)

11) இந்துமத பௌத்தமத உறவுகள் :- கட்டுரை ச.தியாகராசா – வீரகேசரி வாரமலர் 10.04.2005

12) தமிழ் நாட்டில் பௌத்தம் :- கட்டுரை க.அ.நீலகண்ட சாஸ்திரி 'சிந்தனை' மலர் -2, இதழ் -2,3 –சஞ்சிகை யூலை, ஒக்டோபர் 1968.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13) கிபி ஏழாம் நூற்றாண்டில் சோழநாட்டில் போதிமங்கலம் நாக விகாரையில் வாழ்ந்த புத்தநந்தி, சாரிபுத்திரர் என்ற இரு பௌத்த குரவர்களுடன் திருஞானசம்பந்தர் விவாதம் புரிந்ததாக பெரியபுராணம் கூறும்.
14) எண்திசை விரவிய ஏழிசை :— கட்டுரைத் தொடர் தினகரன் வாரமலர் 28.03.1993 ம.க.அந்தனிசில்
15) இந்தியக் கலை வரலாறு முதல் பதிப்பு :— பக், 275 பேராசிரியர், புலவர் கே.தங்கபாலு எம்.ஏ — 1976
* முதலாம் நரசிம்ம பல்லவனுக்கு முன்னர் ஆட்சி செய்த முதலாம் மகேந்திர வர்மன்(கிபி 590-630) எழுதிய 'மத்தவிலாச ப்ரஹாசன்' என்ற சமஸ்கிருத நூலில் காஞ்சிபுரத்தில் பல பௌத்த விகாரைகள் இருந்ததையும் அவற்றுள் தலைமை ராஜவிகாரை என வழங்கப்பட்டதையும் அறியமுடிகின்றது. (ம.க.அந்தனிசில் 1993) சமணனாக இருந்த மகேந்திர வர்மனை சைவனாக மாற்றியவர் திருநாவுக்கரசரேயாவார்.
16) தமிழ் நாட்டில் பௌத்தம் :- கட்டுரை க.அ.நீலகண்ட சாஸ்திரி 'சிந்தனை' இதழ் - 1968
17) மட்டக்களப்புத் தமிழகம் :- பக், 161,162 பண்டிதர் வி.சி.கந்தையா — 1964
18) மட்டக்களப்பு மாநிலத்தில் கண்ணகி வழிபாடு :— கடடுரை, வெல்லவூர்க் கோபால் 'தாந்தா மலை மாட்சி' தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய மலைப்பிள்ளையார் கோயில் குடமுழுக்கு மலர் - 2011
19) ஈழத்தில் சோழரது ஆட்சிக் காலத்தில் பெரும் பாலான தமிழ் மக்கள் சைவர்களாகவிருந்த போதும் பௌத்த தமிழர்களும் வாழ்ந்திருந்தனர். இவர்கள் வாழ்ந்த இடங்களில் பௌத்த பள்ளிகளும், வழிபாட்டுத் தலங்களும் நிர்மாணிக்கப்பட்டன. இவ்வேளை வெல்காமம் (வில்காமம்) என்ற இடத்தில் இருந்த பௌத்த பள்ளியை சோழர் திருத்தியமைத்ததுடன் ராஜராஜப்பெரும் பள்ளி என்ற பெயரையும் இட்டனர். (இலங்கையில் திராவிடர் கட்டிடக் கலை — பக்,34 கா.இந்திரபால) இப்பள்ளி பிமு 3ம் நூற்றாண்டில் தேவநம்பியதீசனின் தமிழ் அமைச்சனொருவனால் நிர்மாணிக்கப்பட்டது ஆகும்.
* லண்டன் அரும்பொருள் காட்சியகத்தில் இருக்கும் பத்தினித் தெய்வ வெண்கலச் சிலை கிபி பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இதனை இலங்கையிலிருந்து இங்கிலாந்திற்குக் கொண்டு சென்றனர். அன்பும் அடக்கும் நாணமும் கொண்டதமிழ்ப் பெண்மையின் வற்றாத பேரூற்றின் சின்னமாகப் பொன்றாப் புகழ் பெற்று விளங்குவது இப்பத்தினித் தெய்வமாகிய கண்ணகிசிலையாகும்.(முதலாம் ராசராசசோழன் - பக்,297 க.த.திருநாவுக்கரசு.எம.ஏ — 1975. தமிழ் நாட்டுப்பாட நூல்)மட்டக்களப்புக்கும், திருமலைக்குமிடையில் கிடைத்த இக்கண்ணகி சிலையின் மூலமாக சோழர்காலத்தில் கண்ணகி வழிபாடும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்ததென்பது தெளிவு.
20) தமிழ் இலக்கிய வரலாறு :— பக்,88,89 டாக்டர் மு.வரதராசன் - 1972, பன்னிரண்டாம் பதிப்பு — 1999
* கடந்த காலத்தில் (கிபி 13ம் நூற்றாண்டு வரை) வடக்குக் கிழக்கு பிரதேசங்களில் வாழ்ந்திருந்த பௌத்த தமிழர், தமிழ்ச் சைவர், பௌத்த சிங்களவர் என்போரிடையே செழிப்புடன் மிளிர்ந்து வந்த சிலம்பு கூறும்கண்ணகி வழிபாடானது இக்காலத்தில் அப்பிராந்தியங்களில் தனிப் பெரும்பான்மையினராக வாழ்ந்திருந்த தமிழ்ச் சைவரிடையே கண்ணகையம்மன் வழிபாடாக மலர்ந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.
21) பல்துறை ஆய்வுகள் :- பக், 101, ம.சற்குணம் - 1999
* கருவூருக்கு வஞ்சி என்னும் பெயருண்டு. இதனை 'கருவூராகிய வஞ்சிமாநகர்' என்ற கல்வெட்டுத் தொடர் உறுதிசெய்கின்றது. கருவூருக்கு அருகில் கிடைத்த கல்வெட்டுக்களில் வஞ்சிநகரம் என்று பெயர் குறிக்கப்பட்டுள்ளது. (கல்வெட்டும், கல்வெட்டியலும், பக், 43,44. தா.ம.வெள்ளைவாரணம் - 1983)
22) வெளிநாட்டவரும் கொண்டாடும் விழா :- கட்டுரை தி. செல்லப்பா — 'தினமலர்' வாரமலர் பெப்ரவரி. 23.1997.
23) தொல்லியல் சிந்தனைகள் :- பக், 49, நா.நவநாயகமூர்த்தி — 1995
24) தொல்லியல் சிந்தனைகள் :- பக், 45, நா.நவநாயகமூர்த்தி — 1995
* சிலம்பில் காணப்படும் எந்தச் செய்தியும் வேறுவகை வணிகர்களுக்கு ஒட்டாதெனவும் சிலப்பதிகாரம் உண்மையில் நடந்த சம்பவம் எனவும் கூறியுள்ள கவிஞர் கண்ணதாசன் நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதுவும் குறிப்பிடத்ததக்கது.



**வாசித்தவர்:**
**செல்வி.கவிதா நவநாயகமூர்த்தி**
**அபிவிருத்தி உத்தியோகத்தர்,**
**பிரதேச செயலகம்,**
**இறக்காமம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுரை IV

# கிழக்கிலங்கையில் கண்ணகி வழிபாட்டின் பிரதிபலிப்புகள்



கலாநிதி அனுசூயா சேனாதிராஜா,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
வரலாற்றுப் பிரிவு, சமூகவியல் துறை,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்.

## அறிமுகம்:

கிழக்கிலங்கையில் கண்ணகி வழிபாடு மிகவும் பிரபல்யமானது. அது ஒரு கிராமிய, புராதன வழிபாடாகும். இக்கண்ணகி அம்மன் வழிபாடானது திராவிட நாகரீகத்தில் முக்கியத்துவம் பெற்ற சக்தி வழிபாட்டினையே, கிழக்கிலங்கையில் பிரபல்யம் பெற்ற கண்ணகி அம்மன் வழிபாட்டில் காண்கின்றோம். இங்கு காணப்படும் இக்கிராமிய, புராதன வழிபாட்டின் மூலம் கண்ணகி வழிபாடு பற்றி மக்கள் கொண்டிருக்கும் அதீத நம்பிக்கைகளை இங்கு காண்கின்றோம். இதன்மூலமாகக் கிழக்கிலங்கையில் சமய வழிபாடு பண்பாட்டு அம்சங்களில் பத்தினித் தெய்வமாகிய கண்ணகி அம்மன் பாரிய தாக்கத்தினைச் செலுத்தியுள்ளார். இதனடிப்படையில் கண்ணகி வழிபாடு, எவ்வாறு மக்களிடையே போற்றிப் பேணப்படுகின்றதென்பதை ஆராய முடிகின்றது.

## பத்தினி வழிபாடு : தோற்றம்:

பத்தினித் தெய்வமாகிய கண்ணகி வழிபாடு, தமிழர் மத்தியில் காணப்பட்ட சக்தி வழிபாட்டின் ஓர் பிரதிபலிப்பேயாகும். புராதன எகிப்திய, மொசப்பத்தேமிய நதிக்கரை நாகரீகங்களை நோக்குவோமாயின் அங்கு வாழ்ந்த மக்கள் இயற்கையின் சீற்றத்திலிருந்தும் (மற்றும் கெட்ட ஆவிகளிலிருந்தும்) தம்மைப் பாதுகாப்பதற்காகவே இறை வழிபாட்டை ஆரம்பித்தனர். இயற்கையைக் கட்டுப்படுத்தும் சக்தி எல்லாவற்றிற்கும் மேலாகக் காணப்படுகின்றதை உணர்ந்தனர். இதன் அடிப்படையில் தான் இச்சக்தி வழிபாடு இற்றைக்குக் கிறிஸ்துவிற்கு முன் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளிற்கு முற்பட்ட திராவிட நாகரீகமான சிந்து வெளி நாகரீக காலத்திலிருந்து தமிழர்களின் முக்கிய வழிபாடாக காலா காலமாக இருந்து வந்துள்ளது. இது தமிழர் சமூகத்தின் முக்கிய நம்பிக்கைக்குரிய சமூக சாதனமாக விளங்குகின்றது. எமது சக்தி வழிபாட்டில் அம்மன், காளி, பராசக்தி, சரஸ்வதி, லச்சுமி, துர்க்கை, என்ற பெண் தெய்வங்களின் வரிசையில் கற்புக்கரசியாக எல்லோராலும் போற்றப்பட்ட கண்ணகியை நாம் வழிபட்டு வருகின்றோம். இத்தெய்வங்களுக்குக் கிழக்கிலங்கையில் கோயில்கள் கட்டி திருவிழாக்கள், குளிர்த்தி சடங்கு போன்ற விசேட நிகழ்ச்சிகளைச் செய்து வருகின்றோம். இவ்வாறு பயபக்தியுடன் நடாத்தப்பட்டு வரும் நிகழ்வுகளில் மக்கள் பல்வேறு நம்பிக்கைகளையும் வைத்துள்ளனர்.

பத்தினித் தெய்வமான கண்ணகை சோழ நாடான தஞ்சை மாவட்டத்தின் காவிரிப் பூம்பட்டினத்தில் பிறந்து கோவலனுடன் பாண்டிநாடான மதுரைக்குச் சென்று, கோவலன் கொலையுண்டதால் மணியரிச்சிலம்பைக் கையிலேந்தி தென்னவன் கொற்றத்தையும் மதுரையையும் அழித்தாள். தேராமன்னன் எனப் பாண்டியனைத் தட்டிப் பேசி அரசியல் மாற்றத்தை ஏற்படுத்திப் பத்தினி என்பதை நிரூபித்து மதுரையை எரித்து வைகையாற்றின் தென்கரையை வழியாகக் கொண்டு மேற்கு நோக்கிச் சென்று மங்கல மடந்தை என அழைக்கப்பட கண்ணகி சேரநாட்டிலே தெய்மாகின்றாள்.

## கிழக்கிலங்கையில் கண்ணகி வழிபாடு:

**தெய்வந் தொழாள் கொழுநற் றெழுவாளை**
**தெய்வந் தோழுந் தகைமை திண்ணிதால் - தெய்வமாய்**
**மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விண்ணக மாதர்க்கு விருந்து**

சேரன் செங்குட்டுவன் கி.பி. 123 – 135 ஆண்டளவில் மண்ணகத்திலிருந்து விண்ணக மாந்தர்க்கு விருந்தாகச் சோதியுட் கலந்த பத்தினி அம்மனிற்கு திருச்செங்கோட்டையில் கோட்டம் அமைத்துப் பிரதிஸ்டை செய்யும்போது இலங்கை வேந்தன் கஜபாகுவிற்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. செங்குட்டுவன் பத்தினிக் கடவுளுக்கு நித்திய பூசை செய்யும்படி கட்டளையிட்டான். கோயிலை மும்முறை வலம் வந்து வணங்கி நின்றான். அப்போது அங்கு வந்த கஜவாகு மன்னன் அப்பத்தினியை நோக்கி இச்செங்குட்டுவனைப் போல் எங்கள் நாட்டில் நாங்கள் செய்யும் பூசையில் நீ எழுந்தருளி அருள்செய்ய வேண்டும் என்று பிரார்த்தித்தான். அப்போது நீ விரும்பியபடியே வரம் தந்தேன் என்று ஓர் அசரீரி ஒலி உண்டாயிற்று. கஜவாகு மன்னன் வேண்டிக் கொண்டதற்கு இணங்க சந்தண மரத்தால் செய்த கண்ணகி உருவமும் ஒரு சிலம்பும் சந்தண மரப்பலகையால் செய்து பேளையில் வைத்த கஜவாகு மன்னனிற்குச் செங்குட்டுவன் கொடுத்தான். அதைப் பாண்டிய அரசன் வெற்றிவேற் செழியன் யானைமேல் சந்தண மரப்பலகையால் செய்த பெட்டியையும் அரசனையும் ஏற்றி வந்து வேதாரணியத்தில் விட்டான். அங்கிருந்து கப்பலில் ஏறி, காரைநகரிற்கும் கீரிமலைக்கும் இடையிலுள்ள திருவடி நிலையில் இறங்கினார்கள். யானைப் பவனிக்கென்று அலங்கரிக்கப்பட்ட யானைகள் அங்கிருந்தன. திருவடி நிலையிலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகி மாகியப்பிட்டி வழியாய் அங்கரைமைக் கடவைக்கு வந்து ஆராதனை நடத்தப்பட்டு வேலம்பறை என்றுமிடத்திற்கு வைகாசிப் பூரணையன்று வந்து சேர்ந்தது. அங்கிருந்து கரம்பகம் கோவிற்குளம் நாகர்கோவில் வன்னிப்புட்டுக்குளம் விழாங்குளம் முள்ளியளை பற்றாப்பளை சாம்பல்தீவு திருகோணமலை தம்பலகாமம் பாலம்போட்டாறு நீலாப்பளை வரையும் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து தாவளமாட்டின் மூலமாக (மாட்டுவண்டி) கோராவெளி கொக்கட்டிமூலை தாண்டவன்வெளி வந்தாறுமூலை ஈச்சந்தீவு கொக்கட்டிச்சோலை முதலைக்குடா மகிழடித்தீவு மண்முனை புகுக்குடியிருப்பு செட்டிபாளையும் எருவில் மகிழூர் கல்லாறு கல்முனை ஊர்முனை காரைதீவு பட்டிமேடு தம்பிலுவில் பாணமை கதிர்காமம் கண்டிவரை கொண்டு செல்லப்பட்டது. கண்டியில் ஓர் கோவில் கட்டி சந்தனப் பலகையால் செய்த பெட்டியும் அம்மனும் சேமிக்கப்பட்டது. கண்டி தலதா மாளிகையில் உள்ள பத்தினிக் கோவில் சந்தன மரத்தால் செய்யப்பட்ட அம்மனும் சந்தனப் பெட்டியும் வைக்கப்பட்டுள்ளது. பத்தினித்தேவி தாயொருத்தியின்றி மாங்கனியின் நின்றும் உற்பத்தியானாள் என்றும் கொள்கை சிங்கள மக்களுள் வழங்குவதுபோல மட்டக்களப்பு தமிழரும் அதே கொள்கையுடையவர்களாக இருக்கின்றனர்.

இவ்வாறு ஊர்வலமாகக் கொண்டுவரப்பட்ட வேளையில் அம்மனின் விருப்பு இருக்கை பட்டிமேடு அமைந்தது என காணக்கிடக்கின்றது. பட்டிமேடு அம்மன் ஆலயத்தில் எழுந்தருளி இருக்கின்ற அம்மன் ஐம்பொன்னாலான கன்னக் கொண்டையுடன் அமைந்திருப்பது பெரும்பேறாகும். இலங்கை நாட்டில் அமைக்கப்பட்டிருக்கும் அம்மன் ஆலயங்களுக்குத் தனித்தனியாகக் காவியங்கள் பாடப்பட்டுள்ளதுடன் பத்ததி முறையிலான பூசை வழிபாடுகள் நடாத்தப்படுவது மரபு ஆக உள்ளது. பட்டிமேடு அம்மன் ஆலயத்தில் எழுந்தருளி இருக்கும் அம்மன் பட்டிமேட்டுக் காவியம் பொற்புறாக்காவியம், மழைக்காவியம் என முக்காவியப் புகழ் பூத்த புராந்ததி என அழைக்கப்படுகின்றது. பெருமைக்குரியதாகும். இவ்வாலயம் அமைந்துள்ள இடம் அப்போது காடும் காடு சார்ந்த இடமும் மலையும் மலை சார்ந்த நிலமும் வயலும் வயல் சார்ந்த இடமுமாகக் காட்சியளிப்பது மட்டுமல்லாமல் நீர் நிலைகளைக் கொண்ட ஆறுகளும் ஓடைகளும் இவ்வாலயத்துக்குப் பக்கத்தில் மெருகூட்டுகின்றது ஓர் சிறப்பம்சமாகும். இவ்வாலயத்தில் நடைபெறும் சடங்கு பத்தாதி முறையில் நடாத்தப்படுவது மரபு முறையாகும். இங்கு பூசை செய்யும் குருவானவரை கப்புகனார் என அழைக்கப்படுவர். சீரணியும் மழுவரசராசன் வகுத்துவார் செல்வனென வாழும் மங்கலப் போடிதானும் ஆரமுலையே நமக்கான பூசை புரிவன் அங்கவனை இங்களைப் பேனென உரைக்க என்ற பாடல் அடிகளின் மூலம் இவ்வாலய முதலாவது கப்புகனாக மங்கலப்போடி என்பவர் கடமை புரிந்துள்ளார். இவ்வாலயத்தில் எழுந்தருயிருக்கும் அம்மனுடைய பேருளைக் கூறுமிடத்து அப்போது இலங்கையை ஆட்சி செய்த பிரிட்டிஷ் அரச அதிகாரி இவ்வாலயத்துக்கு வருகைதந்து காலமில்லா அம்மன் கதவைத் திறக்குமாறு வற்புறுத்தி கப்புகனாரால் கதவு திறக்கப்பட்டதும் அம்மன் பொற்புறாவாக வடிவெடுத்து வெள்ளையரின் (அதிகாரியின்) கண்களைக் கொத்தி குருடாக்கியதாகவும் அதிகாரி தவறையுணர்ந்து வேண்டிக் கொண்டதற் கிணங்க கப்புகனார் அம்மனிடம் மன்றாட்டம் கேட்டு மீறவும் கண் சரி வந்ததாகவும் அதன் பயனாகப் பொற்புறாக் காவியம் புத்துயிர் பெற்றது மட்டுமல்லாம் ஆலயத்தைப் பராமரிப்பதற்குரிய வயல் விளைநிலங்கள் வெள்ளையரினால் அம்மனுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது என்று கூறப்படுகின்றது.

**வாழ்வுபெறு கலியுத மூவாயிர முந்நூறில்**
**வழமைபெற வன்னியர்கள் ஆண்டுவருநாளில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தாள்வற விளங்குசிற்றரசர்கள் இருவருந்**
**தன்னிலங்காபுரி தனைப்புரந்திடுநாள்**
**காழமுகில் தவளகர மாடமணி வாசலுறு**
**கமலமலர் வாவியிற் கனகமதருந்தி**
**ஏழுலகமுந்துதி செய் நாமங்கலையம்மன்**
**எழில்கொள் பொற்புறாவாயொழுந்து வந்தனனே**

என்னும் பாடல் மூலம் பட்டிமேட்டு கண்ணகி அம்மன் பொற்புறாவாக தோன்றிகாட்சி கொடுத்ததாக இருக்கின்றது. இவ்வாலயத்தில் வருடம் ஒருமுறை வரும் வைகாசிப் பூரணயில் சடங்குநடந்து வந்துள்ளது.

அத்தோடு இங்கு நடைபெறும் பூசைவேளைகளில் பட்டிமேட்டுக் காவியம், பொற்புறாக் காவியம், மழைக்காவியம், அம்மன் வழக்குரைக் காவியம், ஊர்சுற்றுக் காவியம் என்று அழைக்கப்படுகின்ற உடுக்குச் சிந்து, அம்மன் பிரார்த்தனை, மன்றாட்டு கும்மி, தாலாட்டு என்பன கப்புகனரால் இசையோடு பாடப்படும். முக்கியமாக அம்மன் சடங்கு வேளைகளிலே அம்மனுக்கு விருப்பமான இசையாகிய பறைமேளம், உடுக்குச் சத்தம், மணி ஓசை, சிலம்பு ஓசை, அம்மானை ஓசை என்பன இசைக்கப்படும். இவ்விழாக்காலங்களில் பக்தர்கள் ஆசார சீலர்களாக ஆலயத்திற்கு வருகைதந்து அம்மன் அருள்பெற்றுச் செல்வர்.

## கோளாவிற் கிராமத்தில் கண்ணகி அம்மன் வழிபாடும் பிரதிபலிப்புகளும்:

கண்ணகி அம்மன் ஆலயத்தின் சடங்கு காலங்களில் பலவிதமான வேண்டுதல்களை மக்களை வைத்து நேர்த்திக் கடன்களை மக்கள் நிறைவேற்றுவர். அவற்றில் கொம்பு விளையாட்டு கற்பூரச்சட்டி ஏந்தல், தீச்சட்டி ஏந்தல், மடிப்பிச்சை எடுத்தல், காவடி எடுத்தல், அங்கப்பிரதட்சணம் செய்தல், பிள்ளை விற்றல், அடையாளம் கொடுத்தல் எனப் பலவிதமாய் அமையும்.

பிரதிபலிப்புகளை மேலும் நோக்குமிடத்து கிராமிய வழிபாடான இச்சக்தி வழிபாட்டில் ஆழமான நம்பிக்கை வைத்து பத்தினி வழிபாடு செய்துவரும் திரு. சு. பூபாலபிள்ளை எனப்படும் குணம் கப்புகனார், கோளாவில் கண்ணகை அம்மன் கோவிலிற்கும் பட்டிமேட்டு கண்ணகி அம்மன் கோவிலிற்கும் 35, 40 வருடங்களாகப் பூசை செய்து வருபவர். அவரிடமிருந்து கண்ணகி அம்மனின் பல்வேறு அற்புதங்களை அறியக் கூடியதாக இருந்தது. ஆரம்பத்தில் மக்கள் காட்டுப்பேய் என்று அஞ்சினராம்.

- ❖ இவர் பூசை செய்ய ஆரம்பித்த காலங்களில் முதல் இரு நாட்களும் மன அமைதி இருக்கவில்லை. பின்பு மடை வைத்துப் பூசை செய்யும்போது சந்தோசமும் திருப்தியும் ஏற்பட்டது. அடுத்த நாள் மூலஸ்தானத்தில் ஒரு தோடம்பழம் இருக்கக் கண்டு அதிசயித்தார்.
- ❖ ஒரு தடவை குருக்கள் ஒருவர் அம்மனிற்குரிய சட்டையைக் கொடுத்து அணிவித்தார். ஆனால், அடுத்த நாள் அச்சட்டை கீழே விழுந்ததுடன், அம்மனில் புதிதாக அழகாகப் உடை உடுத்தப்பட்டு இருந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்தார்.
- ❖ இவருக்கு ஆண் மகன் வேண்டி குளிர்த்தி பாடி இறுதிப் பூப் போட்டுவிட்டு வந்தார். உனது விருப்பம் நிறைவேறும் என்று பத்தினி அம்மன் அவர் கனவில் தோன்றி வாக்களித்தார். அதன்படியே அவருக்கும் ஆண் மகவு கிடைத்தது.

1990 இனக் கலவரத்தில் இங்குள்ள மக்கள் அனைவரும் இடம்பெயர்ந்து சென்றபோது இவர் மட்டும் ஊரில் பாதுகாப்பாக இருந்தார். ஒரு தடவை மழை இல்லாமல் நெற்பயிர் குடலை வரும் தறுவாயில் வாடிச் செத்துக் கொண்டிருந்தன. அத்தருணத்தில் மக்கள் மழை வேண்டி வருந்திக் கொண்டிருந்தனர். அப்பொழுது பட்டிமேட்டம் மன்கோயிலின் மதிய பூசையின்போது மழைக்காவியம் குணம் கப்புகனாரினால் பாடப்பட்டது. உடனே மழை பெய்தது. ஆனால், கப்புகனாரிற்கு வெளியில் மழை பெய்தது தெரியாது. வெளியில் வந்து மழை பெய்ததா என்று கேட்டார். அவரின் உறவு முறையான அடியார் அவரின் காலில் விழுந்து அழுது வணங்கினார்.

இக்கிராமியக் கலை மற்றக் கலைகளிலிருந்தும் வேறுபட்டது. கோளாவிலில் ஒரு சமயம் இலுப்பை மரத்தின் கீழ் வெள்ளைச் சேலை உடுத்திய வயதான பெண் இருந்தார். அங்கு சிறுவர்கள் மகிழ்ச்சியுடன் விளையாடிக் கொண்டிருந்தனர். இவ்விடத்தில் பிள்ளைகளின் சத்தம் கேட்டபடியால் அப்பெண் விலகிச் சென்று அமைதியான காட்டுப் பகுதியான பட்டிமேடு என்ற இடத்தில் அமர்ந்தார். அங்கு கோயில் எழுப்பப்பட்டது என்பது பூர்வீக வரலாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் கடைசித் தங்கை நான்கு வயதாக இருக்கும்போது நோய்வாய்ப்பட்டு இறந்ததாக எண்ணி கால்மாடு, தலைமாடுகளில் குத்து விளக்கேற்றி சாவீடு நடந்தது. ஆனால், அவரின் பெரியப்பா முறையானவர் வாழைக்குலை வாங்கி வீட்டு அம்மனுக்கு நேர்ந்து வைத்ததன் பின்பு அச்சிறுமியின் கைவிரல்கள் அசையத் தொடங்கியது. பின்பு அச்சிறுமி எழுந்து சிரித்து விளையாடும் சத்தம் கேட்டது. இதுவே கண்ணகி அம்பாளின் முக்கிய நம்பிக்கைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

குணம் ஐயாவிற்குக் கடுமையான வருத்தம் மட்டக்களப்பு G.V. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவரைப் பார்க்கச் சென்ற நண்பர் ஒருவர், நீர் கண்ணகி அம்பாளின் கோயிலின் கதவு திறக்கவும் நீர் சுகமாகி வந்துவிடுவீர் எனக் கூறினார். அவரும் அப்படியே சுகமாகி வீடு வந்து சேர்ந்தார். இந்நிகழ்ச்சியும் முக்கிய நம்பிக்கையாகக் கருதப்படுகின்றது. காரைதீவுக் கண்ணகி அம்மன் கோவில், பட்டிமேடு அம்மன் கோயிலடியிற்கு வெள்ளிக் கிழமைகளில் மாலை 5 – 6 மணிக்கு கோயிலடிக்குப் போக இயலாது.
இன்னோர் சம்பவம், அம்பாளிற்கு மடை வைத்துவிட்டு வந்த பின்பு அதை ஒருவர் எடுத்துச் சாப்பிட்டுள்ளார். அதன் பின்பு கோயிற் பூசை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது பலத்த சத்தத்துடன் இவர் நிலத்தில் வீழ்ந்து விட்டார். காரணம் அம்பாளின் மடையில் ஆசைப்பட்டதுதான்.

❖ இங்கு மரபுவழி நம்பிக்கைகள் அதிகம். ஒருவருக்கு நோய் கண்டால் அவ்வீட்டு மண்ணெடுத்து கண்ணகி அம்மனில் நேர்ந்து எறிவார்கள். அந்நோய் குணமடைந்து விடும்.

❖ பெண்களுக்குப் பெயர் வைக்கும்போதே கண்ணகி அம்மன் என்றே வைக்கின்றார்கள்.

❖ பெண் பிள்ளைகள் பிறந்தவுடனே கண்ணகி அம்மன் பெயரில் ஆரார்த்தி எடுப்பார்கள்.

❖ வெப்பத்தைப் போக்குவதற்கு மஞ்சள் பூசிக்கொள்வார்கள்.

❖ திருப்பரந்துறை கண்ணகி அம்மன் கோயிலில் நான்கு ஊர் மக்களும் கூடி விழா நடாத்துவார்கள். பெரிய மடை வைத்து வேப்பிலை கட்டி விடுவார்கள். இங்கு நடைபெறும் அம்மன் ஊர்வலம் சாதி முறை ஒழிப்பதற்கான ஒரு வழிபாட்டு முறையாகக் காணப்படும். இங்கு நடைபெறும் குளிர்த்தி விழா எல்லா மக்களும் ஒன்றிணைந்து விமர்சையாகக் கொண்டாடப்படும்.

❖ கண்ணகி அம்பாள் நல்ல பாம்பு அவதாரமாக வருவதாக ஐதீகம். சடங்கு முறைகள் அம்மனிற்கு ஒழுங்காகவும் பக்தியோடும் செய்யப்படுகின்றது. இவ்வழிபாட்டில் மிகவும் முக்கியமானது நம்பிக்கைதான்.

## தம்பிலுவிலில் கண்ணகி அம்மன் வழிபாடு:

கிழக்கிலங்கையின் தென்பகுதியில் பழமை வாய்ந்த கிராமமாகத் தம்பிலுவில் விளங்குகின்றது. இம்மக்கள் நெடுங்காலமாக தமிழ்ச் சைவர்களாகவே வாழ்ந்து வருகின்றனர். இவ்வூர் மக்கள் வீரப் பெண்ணை, கற்புக்கரசியான கண்ணகியைப் பத்தினித் தெய்வமாக "தாயார்" என்று உள்ளம் உருக வழிபட்டு வருகின்றனர். இவர்கள் வாழ்க்கையில் கண்ணகி வழிபாடு பின்னிப்பிணைந்து காணப்படுகின்றது.

வருடாந்த உற்சவம் வைகாசிப் பௌர்ணமியை முன்னிட்டு ஏழு நாட்கள் தொடரும். இங்கு "கண்ணகி வழக்குனர்", "கல்யாணக்கால் நடுதல்" போன்ற சிறப்புச் சடங்குகள் நடைபெறும்.

## கொம்பு விளையாட்டு:

கண்ணகி வழிபாட்டில் தம்பிலுவில் மக்களிடையே கொம்பு விளையாட்டு நெடுங் காலந்தொட்டுக் காணப்படும் ஒன்றாகும். கோடை காலத்தில் வரட்சியின் காரணமாக மக்கள் பல்வேறு நோய்களினால் துன்பப்படும் வேளையில் கண்ணகி அம்மனை வேண்டி கொம்பு நேர்ந்துவைப்பர். பின்பு மழை பெய்து நோய்கள் தீர்ந்தபின் கொம்பு விளையாட்டு நடைபெறும்.

கண்ணகி வழிபாட்டின் ஒரு அங்கமாகச் சிறப்புடன் விளங்கி வந்த கொம்பு விளையாடலானது இவ்வூரில் நெடுங்காலம் தொட்டு இருந்து வருகின்றதென்பதைச் செவிவழிச் செய்திகள் குறிப்பிடுகின்றன. கண்டி மன்னர் காலத்தில் இவ்வூரில் கொம்பு விளையாட்டு உன்னத நிலையில் இருந்துள்ளது. கொம்பு விளையாடலின் போது படிக்கப்படும் 'கண்ணகை அம்மன் பள்ளு' இதனை உறுதி செய்கின்றது. இதனை தம்பிலுவில் புலவர் ஒருவர் இயற்றியுள்ளார். கண்டி மன்னனான ஸ்ரீ வீரநரேந்திர சிங்கன் (1706 – 1739) காலத்தில் தோன்றிய இக்கிராமிய இலக்கியம் இருமன்னனையும் புகழ்ந்துரைக்கின்றது.

இதனை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பார்வாழி தென்திருக்கோயில் குமரன் வாழி
கண்டிபார்த்தீபன் நரேந்திர சிங்க மூர்த்தியும் வாழி
ஊர்வாழி தம்பிலுவில் ஊர்வாழ்க வரந்தரும்
பத்தினி கண்ணகை நீடூழி வாழ்கவே!
என்ற பாடல் வரிகள் (பாடல்: 24, வரி: 1 – 4) தெளிவுறுத்துகின்றன.

அக்காலம் தொடக்கம் இக்கிராமிய இலக்கியம் கொம்பு விளையாட்டு நடக்கும் வேளையில் படிக்கப்பட்டு வருவதாகச் செவிவழிச் செய்திகள் உண்டு. இதனை இவ்வூரில் வாழ்ந்துவரும் முதியவர்கள் சிலரும் குறிப்பிடுகின்றனர். (தகவல்: திரு. அ. கணபதிப்பிள்ளை (வயது 82) இளைப்பாறிய தலைமை ஆசிரியர்) இப்பள்ளுப் பாடல்கள் குறிப்பாக ஆலயத்திலிருந்து ஏடகம் புறப்படும் சமயத்திலும் ஏடகங்கள் இரண்டும் கொம்புச் சந்தியில் சந்திக்கும் வேளைகளிலும் ஊர்வலம் தொடங்கிய ஏடகம் குறிப்பிட்ட இடத்தைச் சென்றடைந்து திரும்பும் வேளைகளிலும் பாடப்பட்டு வந்தன. அத்துடன் ஏடகம் ஆலயத்தை வந்தடைந்த வேளையிலும் இப்பாடல்களைப் பாடுவதுண்டு.

இப்பள்ளுப் பாடல்களைப் பாடும்போது ஏடகத்தின் முன்னால் தென்னை ஓலையால் கட்டப்பட்டு நெருப்புப் பந்தம் ஒன்றைப் போட்டு அதனைப் பலர் ஒன்று சேர்ந்து சுற்றி வந்து பாடி ஆடுவது மரபாகும். இது இன்றும் நிலவி வருகின்றது. வைகாசிப் பொங்கல் உற்சவ காலங்களில் அழகிய சித்திரத் தேர்மீது (சிறிய ஏடகம்) கண்ணகை அம்மன் ஊர்வலம் வரும் வேளையில் இப்பள்ளுப் பாடல்களும் பாடப்பட்டு வருகின்றன என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

## அம்மன் அருளால் மழை பொழியச் செய்த கண்ணப்பர்:

இவைபோன்று நமது முன்னோர்கள் தமிழ்ப் பாடல்கள் மூலமாகச் செய்த அற்புதங்கள் ஏராளம் எனலாம். இவ்வாறு அற்புதங்கள் புரிந்தவர்களில் இவ்வூரைச் சேர்ந்த கண்ணப்பன் என்பவரும் ஒருவராவர். இவ்வூரிலுள்ள கண்ணகை அம்மன் ஆலயத்தில் கற்புகனாராகக் கடமை புரிந்து வந்த இவர் கண்ணகை அம்மன் மீது அளவற்ற பக்தியையும் நம்பிக்கையையும் கொண்டிருந்தார். அக்காலத்தில் ஒரு சமயம் இவ்வூரில் கொடிய வரட்சி நிலவியிருந்த வேளையில் அம்மன் அருளினால் பதினாலு தமிழ்ப் பாடல்களைப் பாடி இவர் மழை பொழியச் செய்துள்ளார். இச்சம்பவம் சுமார் இருநூறு வருடங்களுக்கு முன்னர் இவ்வூரில் நடந்ததென்பதை அறியமுடிகின்றது.

கண்டி மன்னர் காலத்தில் நடந்த இச்சம்பவம் பற்றி நோக்குமிடத்து பல வரலாற்று உண்மைகளையும் அறிய முடிகின்றது. கண்டியை இரண்டாம் இராசசிங்கன் (கி.பி. 1635 – 1687) என்ற மன்னர் ஆட்சி புரிந்த காலத்தில் மட்டக்களப்புத் தமிழகம் கண்டி மன்னரின் மேலாதிக்கத்தை ஏற்றியிருந்தது. ஆயினும் மட்டக்களப்பை ஆட்சிபுரிந்து வந்த தமிழ்ச் சிற்றரசர்கள் சுதந்திரமுள்ள சிற்றரசர்களாகவே இப்பிரதேசத்தில் செயற்பட்டு வந்தனர். நீர் வளமும் நில வளமும் பொருந்திய மட்டக்களப்புத் தமிழகத்தில் கண்ணகி வழிபாடு சிறந்திருந்தது. அக்காலத்தில் வேண்டிய வரமளிக்கும் பெண் தெய்வமாகக் கண்ணகை அம்மன் விளங்கி வந்தார்.

அக்காலத்தில் ஒரு சமயம் மட்டக்களப்புத் தமிழகத்தில் மாரி மழை குறைந்து கடும் வரட்சி நிலவியது. இதன் பயனாக நெற்செய்கையானது முற்றாகப் பாதிக்கப்படுமளவுக்கு நெற்பயிர்கள் கருகத் தொடங்கின. இவ்வாறு நெற்செய்கை பாதிக்கப்படுமேயானால் கொடிய பஞ்சம் ஏற்படலாம் என்பதைக் கருத்தில் கொண்ட மட்டக்களப்புச் சிற்றரசர்கள் கண்டி மன்னனான இராசசிங்கனுக்கு இந்நிலைபற்றி அறிவித்தனர். இதனைக் கேள்வியுற்ற கண்டி மன்னன் கண்ணகை அம்மன் ஆலயங்களில் விசேட பூசைகள் செய்து மழை வேண்டி அம்மனை வழிபாடு செய்யுமாறு ஆலோசனை கூறினான். கண்டி மன்னனது ஆலோசனைப்படி மட்டக்களப்பிலுள்ள எல்லாக் கண்ணகை அம்மன் ஆலயங்களிலும் விசேட பூசைகளும் வழிபாடுகளும் நடைபெற்று வந்தன.

இதேபோன்று இவ்வூரிலுள்ள கண்ணகையம்மன் ஆலயத்திலும் விசேட பூசைகள் இடம் பெற்றுவந்தன. ஆயினும் மழை பொழியவில்லை. இதேவேளை இவ்வூர் மக்களின் பூர்வீக சொத்தாகியிருந்து வந்த 'ஊரக்கை வெளி' என்னும் நெல்வயலில் நிறைந்திருந்த நெற்பயிர்கள் வரட்சி காரணமாகப் பூவுடன் வாடிக் கொண்டிருந்தன. இக்காணியில் விளைந்து வந்த நெல்லே இவ்வூரின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து வந்ததெனலாம். நல்ல விளைச்சலைத் தருகின்ற இவ்வயலில் நிறைந்திருந்த நெற்பயிர்கள் வரட்சியினால் முற்றாகப் பாதிக்கப்படின் ஊரில் உணவுப்பஞ்சம் ஏற்படும் என்பதை உணர்ந்த மக்கள் பெரிதும் கலங்கினர்.
இதற்கு முந்திய காலத்தில் இவ்வாறு மழையின்றி நெற்பயிர்கள் வாடிய போதெல்லாம் வயலின் ஓரிடத்திலுள்ள மருதமர நிழலில் அம்மனைப் பிரதிஸ்டை செய்து வேண்டுதல் செய்தால் மழை பொழியும் வழக்கம் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தது. இதனைக் கருத்தில் கொண்ட இவ்வூர் மக்கள் இம்முறையும் ஒன்று கூடி அம்மனை எடுத்துச் சென்று ஊரக்கை ஆற்றுக்கு அருகாமையில் வயலில் நின்றிருந்த மருதமரத்து நிழலில் அம்மனைப் பிரதிஸ்டை செய்து வேண்டுதல் செய்தனர். இவ்வாறு செய்தபோதும் மழை பெய்யவில்லை. இதனால் ஊர் மக்கள் மனதில் பெருங்கவலை குடிகொண்டது. இதனையுணர்ந்த அம்மன் ஆலயக் கப்புகனாரான கண்ணப்பரும் மனம் வருந்தினார்.

இவ்வூரில் வாழ்ந்து வருபவரும் தமிழ்ப்பற்று மிகுந்தவருமான இவர் தம்பிலுவில் மக்களின் துயரினைப் போக்க நினைத்தார். ஒரு நாள் பூசையின்போது ஊரக்கை வெளியில் குறிப்பிட்டதொரு இடத்திலிருந்து பச்சைக் களிமண்ணை இவர் எடுத்து வந்து ஒரு பானை செய்து அதில் பொங்கலிட்டு அம்மனுக்குப் படைத்தார். பின்பு கண்களை மூடிக்கொண்டு (அம்மனைத் தியானித்துக் கொண்டு) பாட ஆரம்பித்தார். பதினாலு பாடல்கள் பாடிமுடிந்ததும் சற்றும் எதிர்பாராத வகையல் வானம் இருண்டு மழை பொழியத் தொடங்கியது. இவ்வதிசயத்தைக் கண்டவர்கள் கண்களிலிருந்து கண்ணீர் பெருக் கெடுத்தோராய் கப்புகனாரைத் தொழுது பாராட்டினார். ஊரக்கை ஆற்றுக்கு அருகாக இருந்த மருதமரத்தடியில் அன்று கண்ணப்பரால் பாடப்பட்ட பாடல்களே இன்று 'தம்பிலுவில் மழைக்காவியம்' என்ற இலக்கிய வடிவமாக விளங்குகின்றது.

இக்காவியத்திலுள்ள ஒரு பாடலில் கப்புகனாரான கண்ணப்பர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். பத்தினித்தெய்வமே உன்னருள் கிடைப்பின் நட்ட நடுக்கடலில் தத்தளிக்கும் கப்பல் கூட கூரையை வந்து சேரும். பிணம் கூட உயிர்பெறும். உப்பு நிலத்தில் நெல்விளையும். பிறவியிலேயே ஊமையானவனும் பேசமுடியும். குருடன் பார்வை பெறுவான். கடலில் விளையும் முத்துக்கள் நதியிலும் விளையும் இவ்வகையான வல்லமையினைப் பெற்ற கண்ணகைத் தாயே இவ்வூரில் வாழ்ந்து வரும் ஏழைகளின் இதயங்களைக் குளிரச் செய்ய மழையைப் பொழியச் செய்வாய் என்று இறைஞ்சுகின்றார்.

மேலும் இவர் தனது காவியத்தில் கண்டி மன்னனான இரண்டாம் இராசசிங்கனையும் புகழ்ந்துரைக்கத் தவறவில்லை. 'நீதி செறி கண்டி மகாராசசிங்கன் வாழி' என்று கண்டி மன்னனை இவர் குறிப்பிடுகின்றார்.

## முடிவுரை:

கிழக்கிலங்கையில் கண்ணகி வழிபாட்டின் மூலம் மக்களின் சமய, சமூக, பண்பாட்டு இயல்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன. குறிப்பாக, கணவன் - மனைவி எவ்வாறு ஒற்றுமையாகவும் புரிந்துணர்வுடனும் வாழ வேண்டும் என்பதைச் சுட்டி நிற்கின்றது. மனைவி கணவனுக்கு மந்திரியாகவும் அறிவுரை கூறும் ஆலோசகராகவும் சிறப்பான முறையில் செயற்படுத்துவதற்கு வழிவகுக்கின்றது. குடும்பத்தில் சமூகத்திலும் சகல வயது மக்களுடனும் புரிந்துணர்வை ஏற்படுத்த வழிவகுக்கின்றது. எனவே, கிராம மக்களின் வாழ்க்கையில் இவ்வழிபாடு பின்னிப்பிணைந்த ஒன்றாகக் காணப்படுகிறது.

## உசாத்துணை நூல்கள்:

01. நவநாயக மூர்த்தி, நா., (1999), **தம்பிலுவில் கண்ணகி வழிபாடு,** வானதி வெளியீடு, அக்கரைப்பற்று.

02. கலாபூசணம், க. மகேஸ்வரலிங்கம் கட்டுரைகள், தொகுப்பு க. இரகுபரன், (2008), **மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும்,** கொழும்பு தமிழ்ச்சங்கம், கொழும்பு.

03. தங்கேஸ்வரி, க., (2008), **கிழக்கிலங்கை வழிபாட்டுப் பாரம்பரியங்கள்,** மணிமேகலைப் பிரசுரம், சென்னை.

04. கண்ணகி கலை இலக்கிய விழா மலர், 2012; பரல் – 1, கண்ணகி கலை இலக்கியக் கூடல், மட்டக்களப்பு.

05. கணபதிப்பிள்ளை, சி., (1971), **மகாமாரித்தேவி திவ்யகரணி,** விவேகானந்த அச்சகம், யாழ்ப்பாணம்.

06. கதையா, V.C., (1968), **கண்ணகி வழக்குரை,** காரைதீவு இந்து சமய விருத்திச் சங்கம், மட்டக்களப்பு.

07. பூபாலபிள்ளை, தி., கப்புகனார் நேர்காணல் 03.06.2013

08. நவநாயக மூர்த்தி, நா., நேர்காணல் 04.06.2013

09. நன்றிகள் – பி. புவனேந்திரன், தொழில்நுட்பவியலாளர், கோளாவில், அக்கரைப்பற்று.

கற்புக்கரசியென எல்லோராலும் போற்றி வணங்கப்படும் கண்ணகி பிறந்தது காவிரிப் பூம்பட்டினம் தஞ்சை மாவட்டத்தில் கடற்கரையைச் சார்ந்துள்ள தரங்கம்பாடியென்னும் சிறூரின் கிழக்கெல்லையாகும். மாசிலாமணி அம்மன் கோவிலிலிருந்து வடக்கே பத்து மைல் அளவிலுள்ள காவிரிப் பூம்பட்டினத்தைக் கடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவிட்டது. முகத்துவாரத்தையும் மணற்கரையையுமன்றி வேறொன்றையும் காணமுடியாது. கண்ணகியும் கோவலரும் காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து தஞ்சாவூர் கும்பகோணம் ஸ்ரீரங்கம் கள்ளநகர் கோவில் வழியாக மதுரைக்குச் சென்றனர், சிலம்பு விற்கப் போன இடத்தில் கோவலர் கொலையுண்டார் மணியரிச்சிலம்பொன்றை கையிலேந்திய கண்ணகி தென்னவன் கொற்றத்தையும் மதுரையையும் பழித்தாள். தேரா மன்னா என்று அவை நடுவே சுட்டிப் போசினாள் நான் ஒரு பத்தினியானால் (பத்தினி என்பது உண்மையானால்) பாண்டியனாட்சியையும் மதுரையையும் ஒழிப்பேன் என்றாள் மணியரிச் சிலம்பை உடைத்தாள் மன்னன் இறந்தான். மதுரை எரிந்தது. பத்தினித் தெய்வமாங்கண்ணகைக்கு முன்பு காவல் செய்வமாம் மதுரை மாதெய்வம் நிற்க அஞ்சி மதுரையை விட்டு வெளியேறியது. கண்ணகைக்கு பின்புறம் நின்று ஊழ்வலியைப் புகன்றது. கண்ணகி வைகையாற்றின் தென்கரையை வழியாகக் கொண்டு மேடென்றும் கிடங்கென்றும் பாராமல் மேற்றிசை நோக்கிச் சென்றாள் நெடுவேள் குன்றத்தில் அடிவைத்து ஏறி சேரநாட்டு எல்லையுள் ஒரு வேங்கை மரநிழலில் நின்றாள் 6200 அடி உயரமாதலால் ஒன்றும் தெரியாமல் மேகம் மூடிக்கொண்டது. பதினாறுதான் அன்ன ஆகாரம் எதுவுமின்றிச் சுருளிமலை உச்சியிலிருந்து வரும் நீர்வீழ்ச்சியைப் பார்த்து நின்றாள். கண்ணகை தவம் செய்த இடம் மதுரைக்குத் தென்மேற்காக இருக்கிறது. வைகைக் கரையின் வடபுறத்தில் ஆரம்பாளையம், கோச்சடை மாத்தூர், கோடி மங்களம், தென்கரையூர், மண்ணடி மங்கலம், மேட்டுப்பட்டி ஆகிய சிற்றூர்களைச் சார்ந்து செல்கிறது. 7000 அடி உயரமான சுருளி மலையிருந்து உற்பத்தியாகிவரும் சுருளி ஆற்றோடு மேற்கிலிருந்து கிழக்காக ஓடிவரும் முல்லையாறு கலந்து சிறிது தூரம் வடக்கே யோடிவைகை என்று பெயர் பெறுகிறது. நெடுவேள் குன்றத்திலேற வேண்டுமானால் சுருளியாற்றைக் கடக்கவேண்டம் மாரணவு நீர் ஓடுகிறது அதைக் கடந்து மக்கள் தேவி மலையில் அடிவைத்து ஏறினாள். இளங்கோவடிகள் கண்ணகியை மங்கல மடந்தையெனச் சுட்டிக் கூறுகிறார் பத்தினிக் கோட்டத்தில் மங்கலதேவி அம்மன் பூசைக்கு விடப்பட்ட நிலக்கல் வெட்டு இதற்குச் சான்று கூறுகின்றது என அறியக் கிடக்கிறது. மலைத் தொடரின் தென்கிழக்குத் திருப்பமாகிய இடம் காடும் கரம்புமாக உள்ளது. ஒரு மைல் தூரம் வரை தரை உயர்ந்தே செல்கிறது. அங்கு 10 அடிக்கு மேல் உயரமாகப் போதைப்புல் வளர்ந்திருக்கிறது. இப்பகுதியில் ஓர் எல்லைக்குள் உள்ளது பல நூற்றாண்டுகளுக்கு முன் திருவிதாங்கூர் அரசாங்கம் அமைந்த சேரநாட்டு எல்லைக்கல் ஆகும். மலையின் மேற்குப் பகுதியில் சேரநாட்டு எல்லைக்குள் 3 மைல் சென்றால் வெறுத்த நிலையில் கண்ணகியின் மண்மகனறியாப் பாதங்கள் புண்ணாக அடிவைத்து ஏறிய இடம் இருக்கிறது. அவ்விடத்தில் நின்று சுவாமியைக் கூப்பிட தொலைவிலிருந்து எதிரொலியொன்று கேட்கும் அந்த எதிரொலி தோன்றிய இடமே மங்களாதேவி கோட்டம் அருகில் சென்றால் தோரணவாயில் சிதைந்து கிடப்பதைக் காணலாம். துலாக்கல் வில்லின் முகப்பில் நடுவே யாழத்தின் தலையும் தலைக்கு இரு புறமும் இரண்டு இளமகளிர் சாமரை வீசும் பாங்கும் செதுக்கப்பட்டிருக்கின்றது. அதுதான் தோரணைவாயில் அதனாலேதான் கண்ணகி ஏறினாள். அதைத் தவிர அங்கேபோக வேறு வழியில்லை அங்கு. கண்ணகியின் உருவம் மண்ணுள் புதைந்து இருந்தது அதே கண்ணகியின் படம்தான் தோரண வாயிலோடு சேர்க்கப்பட்டிருந்தது. பீடக்கல் 3½, 1½, நான்கு பெண்பூதம் தாங்குவது போல சிற்பம் இருந்தத அம்மனுக்கும் கோவலருக்கும் கொடும்பூரில் கோவில் அமைந்திருந்தது இதுதான் செங்குட்டுவனால் அமைக்கப்பட்ட கோவில்.

என்னும் பாடல் மூலம் செங்குட்வனுக்கும் இளங்கோவடிகளுக்கும் குறவர் சொன்னார்கள். இவ்வாறு இருக்கையில் திருச்செங்கோட்டையில் பத்தினிக் கோட்டம் சமைத்து பிரதிஸ்டை செய்யுங் காலத்தில் செங்குட்டுவனது அழைப்பின் பேரில் கயவாகு வேந்தனும் கி.பி. 123 – 135 பாண்டிய அரசன் வெற்றிவேற் செழியனும் சோழ அரசன் பெருநற்கிள்ளியும் கொங்குதேச அரசகுமாரன் இளங்கோவடிகளும் மகததேச மன்னரும் வட இந்திய அரசர் கனகவிசயரும் சமூகம் கொடுத்தனர்.

சிலப்பதிகாரத்திலே: **மாகவான் நிகர் மாநாய்கன்குலக் கொம்பர் - பெருங்குணத்து**
**காதலாள் பெயர் மன்றுங் கண்ணகி யென்பாள் மன்னோ**
என்று கூறப்பட்டுள்ளது.

கண்ணகி கோட்டத்தில் வந்தி காவற் பெண்டு அடித்தோழி ஐயை அரற்றிய பின் ஆகாயத்தில் பெருஞ்சோதி தெரிந்தது செங்குட்டுவனும் அவைளச் சூழ்ந்தோரும் வியந்தனர் சிலப்பதிகார வாழ்த்துக் காதையில்,

**என்னேயிஃ. தென்னேயிஃ. தென்னேயிஃ. தென்னேகொல்**
**பொன்னஞ்சிலம்பின் புனைமேகலை வளைக்கை**
**நல்வயிரப் பொன் தோட்டு நாவலம் பொன்இழைசேர்**
**மின்னுங்கொடி யொன்று மீள் விசும்பில் தோன்றுமால்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறப்பட்டுள்ளது.

செங்குட்டுவன் பத்தினிக் கடவுள்கு நித்திய பூசை செய்யும்படி சொன்னாள் கோவிலை மும்முறை வலம் வந்து வணங்கி நின்றான். அப்போது அங்குவந்த கயவாகு மன்னன் அப்பத்தினியை நோக்கி இச்செங்குட்டுவனைப் போல் எங்கள் நாட்டில் நாங்கள் செய்யும் பூசையில் நீ எழுந்தருளி அருள் செய்ய வேண்டும் என்று பிரார்த்தித்தான் அப்போது நீ விரும்பியபடியே வரம் தந்தேன் என்று ஓர் அசரீதி ஒலி உண்டாயிற்று.

வலமுறை மும்முறை வந்தனன் வணங்கி உலகமன்னன் நின்றோன் முன்னர்
அரஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும் பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும்
குடகக் கொங்கரும் மாளுவவேந்தரும் கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தரும்
எந்நாட்டு ஆங்கண் இமயவரம்பரின் நந்தநாள் செய்த நாளணி வேள்வியில்
வந்தீக என்றே வணங்கினர் வேண்ட தந்தேன் வரமென்று எழுந்தது ஓர்குரல்.
என்று வரந்தருகாதை: 155 – 165.

கஜவாகு மன்னன் வேண்டிக் கொண்டதற்கு இணங்க சந்தன மரத்தால் செய்த கண்ணகி உருவமும் ஒரு சிலம்பும் சந்தன மரப்பலகையால் செய்த பேளையில் வைத்து கயவாகு மன்னனுக்குச் செங்குட்டுவன் கொடுத்தான். அதைப் பாண்டிய அரசன் வெற்றிவேற் ழெியன் யானை மேல் சந்தன மரப் பலகையால் செய்த பெட்டியையும் அரசனையும் ஏற்றி வந்து வேதாரணியத்தில் விட்டான். அங்கிருந்து கப்பலில் ஏறி காரை நகருக்கும் கீரி மலைக்குமிடையிலுள்ள திருவடி நிலையில் இறங்கினார்கள். யானைப் பவனிக்கு என அலங்கரிக்கப்பட்ட யானைகள் அங்கே நின்றன. திருவடி நிலையில் இருந்து ஊர்வலம்.

ஆழமுறு கடலிநீர் வானமது வருஷித்து
அகலமுறும் ஆறுகுளம் நிறைய மழைபொழியக்
கோளதுகு ணக்கிடப ராசியது மேவியுங்
கொடியவெயி லல்லாது மழையில்லை யம்மா
நாளது தெரிந்துமறை வேதியர்க ளோதவே
நாங்கள்படு துயர்கண்டு தாங்கரிய வெள்ளம்
தாழமுறு குளமதுகள் நிறையவே யுன்கிருபை
தந்துதவு தம்பிலுவில் தங்குமா தாவே.

**- தம்பிலுவில் மழைக் காவியத்திலிருந்து -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுரை V

# வட இலங்கையில் பத்தினி வழிபாடு



திருமதி.சா.கேசவன்
இணைப்பாளர்,சிரேஸ்ட விரிவுரையாளர்
இந்துநாகரிக கற்கைகள் புலம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

## 1.1 அறிமுகம்:

கண்ணகி வழிபாடு பற்றி நாம் முழுமையாக அறிந்து கொள்ளவுதவும் மிக முக்கியமானதும் மிகப் பழமை பொருந்தியதுமான ஆதாரம் சிலப்பதிகாரமாகயிருப்பினும் இளங்கோவடிகள் கண்ணகி வரலாற்றிற்குக் காவிய வடிவம் கொடுப்பதற்கு முன்பே பண்டைக்கால மக்களிடையே இக்கண்ணகிக் கதை மரபுகள் வழங்கி வந்துள்ளன என்பதற்குச் சான்றுகள் உள்ளன. இவ் வகையில் கண்ணகி, திருமாவுண்ணி, பத்தினி என்று பல பெயர்களில் சிலம்புக்கு முன்னரே ஒரு பெண் தொன்மம் இருந்துள்ளது என்பதனை நற்றிணை, புறநானூறு, பதிற்றுப்பத்து முதலியவற்றை வாசிக்கையில் சிலம்பின் கதை எற்கனவே வழக்கில் இருந்தது புரிகிறது.

வேங்கை மலரும் காலமே திருமண நிகழ்வை அறிவிக்குங் காலம் எனக்கொள்வது பண்டைய மரபு. அவ்வேளை அதன்கண் தெய்வம் உறைவதாகக் கருதி அதனைப் பூசிப்பதும் வழக்கம் இதுபற்றியே தன் உறவுக்கு அத்தெய்வத்தைச் சான்றாக்கிய திருமாவுண்ணி, பின்னர்க் காதலனாற் கைவிடப்பெற்ற போதிலே சான்றோர்பால் வழக்குரைத்த காலத்து, அத்தெய்வம் சான்று கூறாதிருக்கத்தன் ஒரு முலையை அறுத்தெறிந்து தன் கற்பை நிலைநாட்டியபோது, தெய்வமும் தோன்றிச் சான்று கூறிற்று என்பதும் இ கண்ணகியின் இறப்பு பற்றி இளநாகனார் கூறுகையிலே ஊருக்கு அருகாமையிலுள்ள குன்றின் மேலேறி வேங்கை மரமொன்றின் கீழ் நின்று இடது மார்பை அறுத்து உடற்குருதி சோர அவள் உயிர் இழந்தாள் எனக் திருமாவுண்ணியின் கதையினைக் குறிப்பிட்டுள்ளார்.

**"எரிமருள் வேங்கைக் கடவுள் காக்கும்**
**குருகார் துழனியின் இதணத்து ஆங்கண்**
**ரதிலாளன் கவலை கவற்ற**
**ஒரு முலை அறுத்த திருமாவுண்ணி"**[1]

என வரும் அடியிலே கண்ணகியை திருமாவுண்ணி என அழைக்கப்பட்டமையினை காணக்கூடியதாகவுள்ளது. கி.மு. 2 அல்லது 3ஆம் நூற்றாண்டளவில் தோன்றிய இப்பாடலுக்கு **(Footnotes)**

முன்னரே திருமாவுண்ணியின் கதை தமிழ் மக்களிடையே பழங்கதையாக இருந்திருக்க வேண்டும் இதே போன்ற அடியினையே இளங்கோவடிகளாரும் தமது சிலப்பதிகாரத்திலே கையாண்டுள்ளார். எனினும் சிறு மாற்றத்தினை ஏற்படுத்தி " ஒரு முலையிழந்தாளோர் திருமா பத்தினி " என கூறியுள்ளார்.[2]

மயிலுக்கு போர்வை ஈந்த பேகன், ஆவியர் குடியில் பிறந்து வையாவிக்கோ எனச் சிறப்பிக்கப்பட்டவன். இவன் ஆண்ட காரணத்தினால் அந்நாடு வையாவிநாடு, வயநாடு எனப் பெயர் பெற்றது. இவன் கடையெழு வள்ளல்களில் ஒருவன் என்று இடைக்கழி நாட்டு நல்லூர் நந்ததனார் கூறுவார். பேகனின் நண்பர்களாக கபிலர் பரணர் பெருங்கன்றூர்க்கிழார் அரிசில் கிழார் போன்றோர் திகழ்கின்றனர். பேகனின் மனைவி கண்ணகியாவாள். பேகன் தன் மனைவி கண்ணகியை விடுத்து நல்லூரிலேயுள்ள பரத்தையுடன் வாழ்ந்தான். பல புலவர்கள் அவனிடம் கண்ணகியின் நிலையைக் கூறி அவளிடம் செல்லும் படியாகக் கேட்கின்றனர். புறநானூற்றிலே ஐந்து பாடல்களிலே இச்செய்தி கூறப்படுகிறது.

[1] நற்:216 [2] சிலம்பு:5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"......எம்போல் ஒருத்தி நலன்நயந்து என்றும்**
**வருஉம் என்ப வயங்குபுகழ்ப் பேகன்**
**ஒல்லென ஒலிக்கும் தேரோடு**
**முல்லை வேலி நல்லூ ரானே"**[3] எனப் பரணர் பாடுகின்றார்.

இங்கு குறிப்பிடப்படும் பேகன் கோவலனாகவும், பரத்தை மாதவியாகவும் சிலப்பதிகாரக் காவியத்திலே பின்னர் வடிக்கப்பட்டனர். கண்ணகி பற்றிய பல செய்திகளை பழந் தமிழ் இலக்கியங்களில் காணமுடிகின்றது. இவள் கற்பில் சிறந்தவள். புலவர் பெருங்குன்றூரக் கிழார் இவளை "மா அரிவை" (புறம்:147) என்கின்றார். பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்தில் இடம் பெறும் பதிகம் கடவுட் பத்தினிக்காக மன்னன் ஆரிய அண்ணலை வென்று கல்கொணர்ந்த செய்தியைப் பேசும்.

**"கடவுட் பத்தினிக் கற்கோள் வேண்டி**
**கான் நவில் கானம் கணையின் போகி**
**ஆரிய அண்ணலை வீட்டி, யேரிசை**
**இன்பல் அருவிக் கங்கை மண்ணி......"**[4]

"மீனொடு புரையும் கற்பின் வாணுதல் அரிவை" எனப் பதிற்றுப்பத்தில் கண்ணகியை அருந்ததியோடு ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது. இளங்கோவடிகளாரும் கண்ணகியை அருந்ததியோடு ஒப்பிட்டுக் கூறியுள்ளமை ஈண்டு நோக்கற்பாலது. சிலப்பதிகாரத்தின் "தீதிலா வடமீனின் திறம் இவள் திறம்"[5] எனும் அடியிலும் இதனைக் காணக்கூடியதாகவுள்ளது. இளங்கோவடிகள் வாழ்ந்த காலத்தில் கண்ணகி ஸ்ரீ குறும்பை – சீர்ம்பை எனும் பெயரில் மக்களிடையே வழங்கப்பட்டாள் என்பதுஞ் சுட்டிக் காட்டத்தக்கது.

எனவே கண்ணகி கதையின் தொன்மம் சிலப்பதிகாரத்திற்கு முற்பட்டதாகும். வாய் மொழி வழக்கிலிருந்த ஒரு முலையிழந்த சாதாரண ஒரு பெண்ணின் கதை புறநானூறு, நற்றிணை, பதிற்றுப்பத்தில் எழுத்துருக் கொண்டு சிலப்பதிகாரமாக அரும்பி அதையொட்டி பல்வேறு காவியங்கள் மலர்ந்திருக்கும் ஒரு பெரும் வரலாறு இக் கண்ணகி தொன்மத்துக்கு உண்டு என்பது பெறப்படுகிறது.

## 1.2 இலங்கையில் கண்ணகி வழிபாடு

தமிழகத்திலே தோற்றம் பெற்ற பத்தினி வழிபாடானது இலங்கை மக்களது வாழ்வோடு கலந்திருப்பது என்பது பண்பாட்டு வரலாற்றிலே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஓர் அம்சமாக உள்ளது. இந்தியாவிலே தோற்றம் பெற்ற பண்பாட்டுக் கருவூலங்களுள் சில அங்கு முற்றாகவே மறைந்தொழிந்த நிலையில் இலங்கையிலே அவை இன்று வரையிலும் பேணப்பட்டு வருகின்றது. இவ்வழிபாடு இன்று தமிழ் நாட்டிலும் கேரளாவிலும் அருகி விட்ட நிலையில் இலங்கையில் தமிழ், சிங்கள மக்களிடையே புத்துயிர்ப்புடன் வழங்கி வருவதனைக் காணமுடிகின்றது. இந்தியாவிலே தோற்றம் பெற்ற பௌத்த மதங் கூட காலவோட்டத்தில் தன்னிலையிழந்தமையைப் போன்று கண்ணகை வழிபாட்டு மரபும் அங்கு தன்னிலையிழந்து இலங்கையில் செல்வாக்குப் பெற்றிருக்கின்றது.

இலங்கையில் பத்தினி வழிபாட்டு மரபுகள் பற்றிய வரலாற்றுச் சிக்கல்கள் இன்னமும் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. சிங்கள பத்தினி வழிபாட்டு மரபு பற்றிய ஆய்வு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பேராசிரியர் கணநாத் ஒபயசேகராவால் மேற்கொள்ளப்பட்ட "The Cult of the goddess pattini" எனும் ஆய்வு குறிப்பிடத்தக்கது. மானிடவியலாளரான இவர் தமது ஆய்விலே பத்தினியை பௌத்த மதப் பரிவாரத் செய்திகளுடன் தமிழ்ப் பத்தினி வழிபாட்டு மரபு பற்றியும் இவர் ஆராய்ந்துள்ளார்.

தமிழ் மரபு பற்றிய இவரது கருத்துக்கள் மட்டக்களப்பு மரபுகளை ஆதாரமாகக் கொண்டுள்ளன. இருப்பினும் பத்தினி வழிபாடு சிங்கள பௌத்த மக்களுக்கே அதிகம் உரித்தானதாக கணநாத் ஒபயசேகரா காண்பதாகத் தெரிகிறது. "பத்தினி ஒரு சிங்கள பௌத்த தெய்வம், சடங்கு இங்குதான் நடக்க வேண்டும். ஏனெனில் பௌத்தம் இந்தியாவில் செத்து விட்டது" என சிங்கள கப்புறாளை ஒருவர் கணநாத் ஒபயசேகரவுடனான பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.[6] இது கணநாத் ஒபயசேகரவின் கண்ணகி மீதான பௌத்த சிங்கள சார்பான பார்வையை வெளிப்படுத்தி நிற்கின்றது. ஏனைய தமிழ் பகுதிகளில் பத்தினி வழிபாட்டின் தனித் தன்மைகளையும் இணைத்து நோக்குகின்ற போதே இலங்கையின் இவ்வழிபாட்டின் பரவலாக்கம் பற்றி பூரணமாகக் கூறமுடியும். இவ்வடிப்படையில் வடஇலங்கையில் பத்தினி வழிபாடு பற்றி ஆராய்வது அவசியமானதொன்றாகும்.

## 1.2 வடஇலங்கையில் பத்தினி வழிபாடு

வடஇலங்கையில் கண்ணகி வழிபாடு பற்றிய ஆய்வுகள் சொற்பளவிலேயே இடம் பெற்றுள்ளன. இலங்கையில்

[3]புறம்:144 [4]பதிற்று:5 [5]சிலம்பு:மங்கல வாழ்த்துப் பாடல்:27
[6]சண்முகலிங்கன்,என்., பக்தவத்சலபாரதி, 2004, இலங்கை - இந்திய பண்பாட்டு மானிடவியல், பக்.17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகி வழிபாடு பற்றி ஆழமாக ஆராய்ந்த கணநாத் ஒபயசேசகர கிழக்கிலங்கையையே மிகஅதிகமாக ஆய்வுக்குட்படுத்தியிருந்தார்.[7] எனவே வடஇலங்கை கண்ணகி வழிபாடு பற்றி ஆராய்வது முக்கியமாதொன்றாகும். பத்தினி அல்லது கண்ணகி வழிபாட்டின் தொன்மை வடஇலங்கையில் இருந்து கூறப்பட வேணடுமென்பது பெரும்பாலான ஆய்வாளர்களின் கருத்தாகும். இதற்கு பல நியாயங்கள் முன்வைக்கப்படுகின்றன. அவற்றை முதலில் சுட்டிக்காட்டுதல் அவசியமானது.

கண்ணகியம்மன் வழிபாடு கி.பி 171 முதல் கி.பி 193 வரை அநூராதபுரத்திலிருந்து ஆட்சி புரிந்த கஜபாகு என்ற அரசனால் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இக்கருத்து பெரும்பாலானோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இச்செய்தி ராஜாவலிய என்ற சிங்கள இலக்கியத்தில் கூறப்பட்டுள்ளது. கஜபாகு ஆட்சிக் காலத்தில் சேர மன்னன் செங்குட்டுவன் தனது தலைநகராகிய வஞ்சியில் இமயமலையிலிருந்து கொண்டு வந்து கல்லில் கண்ணகிக்கு சிலை செய்து கோயில் அமைத்துப் பெருவிழா எடுத்தான். கி.பி 178இல் நடந்த அவ் விழாவிற்கு செங்குட்டுவனின் அழைப்பை ஏற்று அவன் நண்பனாகிய கஜபாகு விழாவில் கலந்து கொண்டான். இவ் விழாவில் பாண்டிய மன்னன் வெற்றிவேற் செழியனும், சோழரசன் பெருநற்கிள்ளியும், கொங்குதேச அரசன் இளங்கோ அடிகளும், மகத தேச மன்னனும் கலந்து கொண்டனர்.

இதனை பேராசிரியர் சு. வித்தியானந்தன் தனது கட்டுரையொன்றில், "The pattini cult based on the Tamil classic Cilapptikaram, and which falls outside the fold of orthodox Hinduism, has been popular among the Sinhalese until recent times. The Tamil epic claims that the cult was originally instituted by Cenkuttuvan, the Cera Monarch, at a festival specially organized for the purpose. The Cera Monarch is said to have invited Several king including Kayavaku ( Gajabahu I AD 174-196) of the sea – girt Ilankai. Tradition claims that the Sinhalese Monarch brought an image of Pattini on his return to the Island and instituted the Pattini cult by constructing….."[8]எனக் குறிப்பிட்டுள்ளார்.

சிலப்பதிகாரம் இச்செய்தியினை தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கின்றது. சிலப்பதிகாரத்தின் 30ஆம் காதையில் 155 – 164 வரிகள் இதனை உறுதிப்படுத்துகின்றன. இலங்கைப் பல்கலைக்கழகத்து பேராசிரியரான கலாநிதி க. கணபதிப்பிள்ளை அவர்களும், யாழ்ப்பாண சரித்திரத்தில் முதலியார் செ. இராசநாயகம் அவர்களும் சிலப்பதிகாரச் செய்தியை அடிப்படையாகக் கொண்டு கண்ணகி வழிபாடு கி.பி.இரண்டாம் நூற்றாண்டில்தான் ஈழத்துக்கு வந்தது எனக் கூறுகின்றனர்.

ஆனந்த குமாரசுவாமி அவர்களும் கி.பி. 2ஆம் நூற்றாண்டளவிலேயே கண்ணகி வழிபாடு ஈழத்திற்கு வந்ததாகக் கூறுகின்றார்.

"In another services of images (figs,42,43,171,184) We have remains of the cult of pattini. According to the Sinhalese Rajavaliya and current traditional, Gaja Bahu ( 2nd century A.D) in the course of his successful invasion of southern Indian, brought away the sacred anklets from madura and established the worship of the goddess in Ceylon.The identification of the image here illustrated, as well as of the beautiful wooden figure of the nikavev cave appears to rest only on tradition."[9]

இவ்வாறு கி.பி. 2ஆம் நூற்றாண்டில் கண்ணகி வழிபாடு இலங்கைக்கு கொண்டுவரப்பட்டதற்கான ஆதாரங்களை முன்வைக்கின்ற போதிலும் அதற்கு முரணான கருத்துக்களும் ஆய்வாளர்கள் மத்தியில் உள்ளமை சுட்டிக்காட்டப்படவேண்டியவை.

அதாவது கண்ணகிக்கு கி.பி. பன்னிரெண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் கோயில் எடுத்திருக்க முடியும் எனுங் கருத்தும் நிலவுகின்றது. ஏனெனில் இலங்கையில் உபயோகப்படுத்தாது கிடந்த நிகவேவா குகைக்குள் ஒன்றிலிருந்து கண்டெடுக்கப்பட்ட கோவலன் கண்ணகி ஆகியோரது உருவம் செதுக்கப்பட்ட மரப்படிமம் கி.பி பன்னிரெண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. எனவேதான் கி.பி. பன்னிரெண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் இலங்கையில் கண்ணகி வழிபாடு தொடங்கியது எனச் சில ஆய்வாளர்கள் சுட்டுகின்றனர். அதற்கு வலுச் சேர்க்கும் வகையில் கி.பி பதினேழாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட 'இராஜாவலிய' என்னும் இலங்கை வரலாற்று நூலில் இச்செய்தியும் காணப்படுகின்றது.[10]

இக்கருத்தினை கண்ணகி வழிபாடு பற்றி ஆராய்ந்த இலங்கையறிஞர் கணநாத் ஒபய சேகரா என்பாரும் தனது நூலிலே கூறியுள்ளார். அவர் கண்ணகி கதை பற்றிய அறிவு இலங்கையில் கி.பி. 10 - 12 நூற்றாண்டுகளில்தான் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பார்.[11] இவர்களின் கருத்துப்படி பிற்காலத்தில் வாழ்ந்த

[7] Gananath Obeysekere ,1987, The cult of the goddess Pattini, p.5, p.553

[8] வித்தியானந்தன்.சு., 1979, தமிழியற் சிந்தனை, பக்.17

[9] Ananda Coomaraswamy, 1914, Series A. No 1 Bronzes from ceylon chiefly in the Colombo museum.

[10] வையாபுரிப்பிள்ளை.எஸ்., காவியகாலம், பக்.125

[11] Gananath Obeysekere ,1970, Gajabhahu and gajabhahu symchronism



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றுமொரு கஜபாகுவே இலங்கைக்கு கண்ணகி வழிபாட்டைக் கொண்டு வந்தான் எனக் கூறப்படுகின்றது.

இவற்றை ஆராய்ந்த திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தின் பதிப்பாக வெளிவந்த சிலப்பதிகார மூலத்திற்கு நாவலர் பண்டித ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்கள் தனது முகவுரையில் இளங்கோவடிகள் வரலாறு எனும் பகுதியில், "செங்குட்டுவன் பத்தினிக் கோட்டம் இயற்றிக் கண்ணகிக்கு விழாக்கொண்டாடிய காலத்து இலங்கையரசனாகிய கஜபாகு என்பவன் உடனிருந்தானென்று வரந்தரு காதையாலும். அக்கயவாகுவும் இலங்கையிற் கண்ணகிக்கு கோயில் கட்டுவித்து விழாக் கொண்டாடினென்று இந்நூலின் உரைபெறு கட்டுரையாலும் தெரிதலானும் இலங்கையில் கயவாகு என்னும் மன்னன் கி.பி 2ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்தானென இலங்கைச் சரித்திரத்தாலும் அறியப்படுதலானும் அதனையடுத்த காலமே இளங்கோவடிகள் இவ் நூலை இயற்றிய காலமாகும். இலங்கை வரலாற்றில் மற்றொரு கயவாகு கூடிப்படினும் அவன் மிகவும் பிற்காலத்தியனாதலின் கண்ணகிக்கு விழாக் கொண்டாடியவன் முதற் கயவாகுவேயாகும்" என்று குறிப்பிடுகின்றார்.[12]

இதேவேளை கஜபாகு மன்னன் ஈழத்திற்கு வருவதற்கு முன்பே கண்ணகி கதை ஈழத்தில் அறிமுகமாயிருக்க வேண்டும்[13] என வாதிடும் ஆய்வாளர்களும் உண்டு. எனவே நாம் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்,

01. கஜபாகு என்ற மன்னனால் கண்ணகி வழிபாடு இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது
02. கஜபாகுவிற்கு முன்னரே கண்ணகி கதை ஈழத்தில் நிலைபெற்றுவிட்டது

என்பவையாகும். உண்மையில் கண்ணகி வழிபாட்டிற்கும் கஜபாகுவிற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. அம்மன்னன் தென்னிந்தியாவிலிருந்து கண்ணகி சிலையுடன் வந்திறங்கிய இடம் யாழ்ப்பாணம் மாதகலுக்கு அண்மையிலுள்ள "அங்கணாமைக்கடவை" என்ற இடமாகும். இங்குதான் கஜபாகு மன்னனால் முதலாவது கண்ணகி கோயில் தாபிக்கப்பட்டது. அங்கணா என்பது அம்மனைக் குறிக்கும். மட்டக்களப்பில் எழுந்த ஊர் சுற்றுக் காவியத்தில் இவ்வரலாற்றுச் செய்தியைக் காணலாம்.

**அங்கணாமைக்கடவை காரேறு நகர்எருவில்**
**ஆனதம் பிலுவிலொடு வீரமுனை தன்னிலும்**
**பங்குசேர் பட்டிமேடு உயர்செட்டி பாளையம்**
**வந்தாறு மூலையொடு மற்றுமுள பதியும்**
**திங்கள்நேர் ஒத்துநுதல் எங்குமீ திற்பெரிய**
**தெய்வீக மென்னவிளை யாடியெப் பொழுதும்**
**எங்குமாய் நிற்குமொரு பங்கமா தின்பெருமை**
**எந்தனா விற்கனவில் என்றுமக லாதே**

**பத்தியொடு தொழுவோர்கள் இடரகல வருள்கொண்டு**
**பண்டுசெறி தம்பிலுவில் பட்டிமா நகரம்**
**மொய்த்தபுகழ் வீரமுனை கல்முனைகல் லாறு**
**மகிழூர்செட்டி பாளையம் எருவில்மண் முனையூரும்**
**வைத்தமகி ழுடிச்சோலை முதலக் குடா**
**வளமைவரு புதுக்குடி நகரஅமாடு வந்தாறுமூலை**
**இத்தனை தலங்கிளிலும் அங்கணா மைக்கடவை**
**எனவந்து காரைநகர் இனிதிருந் தவளே**[14]

கயவாகு இலங்கைக்கு மீண்டகாலை "சம்புகோளா" எனப்படும் சம்புத்துறைமுகம் வழியாக வந்தனன் என்பது வரலாறு. இத்துறை யாழ்ப்பாணத்தில் மாதகலுக்கு அண்மையிலுள்ள 'திருவடிநிலை' என்பதேயாகும் என்றும், அரசன் தான் இறங்கிய இடத்துக்கு அருகில் இருந்த அங்கணாமைக்கடவை என்னும் இடத்திலே ஒரு கண்ணகி கோயிலை முதலில் கட்டினான் என்றும் பத்தினி வழிபாடு பற்றி ஈழத்திலே எழுந்த பழமையான இதுவேயாகும் என்று வீ.சீ கந்தையா குறிப்பிட்டது போல இலங்கைப் பல்கலைக்கழகத்து பேராசிரியரான கலாநிதி க. கணபதிப்பிள்ளை அவர்களும் கூறுகின்றனர். அங்கணாக்கடவையிலிருந்து அநுராதபுரத்திற்கு பூநகரி வழியாக செல்லும் பாதைகளில் உள்ள ஊர்களில் கண்ணகிக்கு ஆலயங்கள் அமைத்தான் என

[12] ஈழத்துப் பூராடனார், 2005, மட்டக்களப்பு மாநிலத்தின் பண்டைய அடிச்சுவடுகள், பக்.2கக
[13] சிற்றம்பலம்,சி.க., 1996, ஈழத்து இந்து சமயவரலாறு, பக்.261-262
[14] கயிலையாயப்பிள்ளை,வ., 1939, ஊர்சுற்றுக்காவியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியார் செ. இராசநாயகம் குறிப்பிட்டுள்ளார்.

> "A colossal stature of a king is said to have been standing opposite to the temple of kannaki at Anganamai kadavai (Angana=A goddess) near kantarodai and broken by an elephant about a century ago. The feet and head of such a statue were found by Dr.P.E.pieris in the premises of the temple and now placed in the Jaffna museum.This statue was perhaps that of Gajabahu who after consecrating the temple for the worshipofkannakai placed his statue infront it"[15]

இது நியாயமானது என்கிறார் சி.க.சிற்றம்பலம்.[16] ஆனால் இங்கு நாம் ஒரு விடயத்தை கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கின்றது. கஜபாகுவால் கண்ணகி வழிபாடு இலங்கைக்கு கொண்டு வரப்பட்டபோது யாழ்ப்பாணத்தின் அங்கணாமைக்கடவையில் முதற்கோயில் அமைக்கப்பட்டது என்பது உண்மையே. ஆனால் கஜபாகுவிற்கு முன்பே கண்ணகி வழிபாடு இலங்கையில் நிலவியுள்ளது என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. அச்சான்றுகள் மூலம் வடஇலங்கையில்தான் முதன்முதலில் கண்ணகி வழிபாடு உருவாகியது என்பதில் முரண்பாடுகள் இருப்பதை அறிய முடிகின்றது. ஈழத்தின் வட பிரதேசத்தில் காணப்படும் கண்ணகி தொடர்பான ஐதீகக் கதைகள் கஜபாகுவிற்கு முன்பே கண்ணகி வழிபாடு இங்கு நிலை பெற்றுவிட்டது என்பதனை எடுத்துக்காட்டுகின்றன.

1. நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தினைக் கட்டியவனாகக் கண்ணகியின் தந்தை மாநாய்கன் ஐதீகங்களில் குறிப்பிடப்படுகின்றான்.[17]
2. மலையாளப் பகுதியில் அம்மனை உருவத்தில் நாடோடிப் பாடல்களாக சிலப்பதிகாரத்திற்கு முன்பே காணப்பட்டதாகப் கூறப்படுகிறது.[18]
3. கண்ணகிக்கு சிலை எடுத்தது நடுகல் வழிபாட்டின் ஓரம்சமே எனக் கூறும் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் ''ஈழத்தில் கண்ணகி வழிபாடு கஜபாகு காலத்திலோ அன்றி அதற்கு முன்னரோ புகுத்தப்பட்டிருக்கலாம் எனக் கொள்வதில் தவறில்லை என்றும் தமிழக, ஈழத்தின் வளர்ச்சி பெற்றிருக்கும் பெருங்கற்காலக் கலாசாரப் பண்புகள் இதனை உறுதி செய்கின்றன'' என்கிறார்.
4. கண்ணகி தன்னை ஐந்து தலை நாகமாக மாற்றி மதுரை மாநகரம் துறந்து தெற்கு நோக்கி ஊர்ந்து நயினை தீவை வந்தடைந்தாள். பின் வட்டுக் கோட்டையிலுள்ள சுருட்டுப் பனை வழியாக சீராவி, அங்கணம்மைக் கடவை, அளவெட்டி, சுருவில் முதலிய இடங்களில் தங்கினாள்.

வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சி.பத்மநாதன் "சிலப்பதிகாரம் எழுதப்பட்ட போது பத்தினி வழிபாடு வழமையாகிவிட்டது என்பது அந்நூல் வாயிலாகத் தெரிகின்றது. பத்தினியைத் தெய்வம் எனக் குறிப்பிடும் இளங்கோ பத்தினிக்கு படிமம் அமைத்தமை பற்றியும், அதற்குக் கோட்டஞ் சமைத்து பெரு விழா எடுத்தமை பற்றியும் பாடியுள்ளார். எனவே பத்தினி வழிபாடு இளங்கோவடிகள் காலத்திற்கு மிக முற்பட்ட காலத்தில் உருப்பெற்ற ஒன்றாகலாம்'' எனக் கூறியுள்ளமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.[19] வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சிற்றம்பலம் ''ஈழத்தின் கிழக்குப் பகுதி பண்டைய தமிழகத்துடன் தொடர்பு கொண்டிருந்த வர்த்தகத் தொடர்பால் கண்ணகியம்மன் வழிபாடு நேரடியாக மட்டக்களப்பிற்கு வந்திருக்கலாம்"[20] என்கிறார்.

"ஈழத்துணவும், காழகத்து ஆக்கமும்"[21] எனும் பட்டினப்பாலைச் செய்யுள் மூலம் ஈழத்துடன் தமிழ்நாடு கொண்ட தொடர்பு வெளிப்படுகின்றது. இதுபற்றி பேராசிரியர் கா.சுப்பிரமணியம் கூறும் போது "இவை ஆகக்குறைந்தது மூவாயிரம் ஆண்டுகள் தொன்மை வாய்ந்தன என்றும் இலங்கையில் விஜயன் கால் வைக்க முன்னர் இத்தொடர்பு இருந்துள்ளது'' என்றும் நிரூபிக்கின்றார். மேலும் இங்கு காணப்பட்ட மிகை உற்பத்தி கந்தபாணத்துறை (மட்டக்களப்பிலுள்ள திருக்கோயில்துறைமுகம்) யிலிருந்து கடல் வழியாக காவிரிப்பூம்பட்டணத்திற்கு சென்றதாகவும் இச்செய்யுள் குறிப்படுகின்றது என்றும் குறிப்பிடுகின்றார்.

முதலாம் கஜபாகு (கி.பி. 136 - 183) கண்ணகி சிலையைக் கொண்டு வருவதற்கு முன்பே ஈழத்தில் கண்ணகி வழிபாடு பிரபல்யம் பெற்று விட்டதென்றும் மட்டக்களப்பிற்கு கண்ணகி வழிபாட்டை கொண்டு வந்த கேரள நாட்டனரே வனிப்பகுதிக்கும் கண்ணகி வழ்பாட்டை அறிமுகப்படுத்தியிருக்கலாம்[22] பாலசுந்தரம் போன்ற அறிஞர்கள் கருதுகின்றனர்.

மட்டக்களப்புத் தேசத்திலே கிடைக்கப்பெறும் பிற ஆவணங்கள் பலவும் கஜபாகுவிற்கு முன்பே கண்ணகி வழிபாடு இலங்கையில் பரவிவிட்டது என்பதனை எடுத்துக்காட்டுகின்றன.

[15] Rasanayagam.c, 1984, Ancient Jaffna Asian Educational Services
[16] சிற்றம்பலம்,சி.க., 1996, ஈழத்து இந்து சமயவரலாறு, பக்.261-262
[17] சிற்றம்பலம்,சி.க., 1996, ஈழத்து இந்து சமயவரலாறு, பக்.105
[18] சற்குணம்.எம் 1976.113, சிலப்பதிகார வழக்குரை காதை, வரி 36-40
[19] பத்மநாதன்,சி., இலங்கையில் இந்து சமயம், பக்.343
[20] சிற்றம்பலம்,க., ஈழத்து இந்து சமய வரலாறு, பக்.265
[21] பட்டினப்பாலை:191
[22] பாலசுந்தரம்,இ., தமிழோசை ,பக்.10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.3 வடஇலங்கையிலுள்ள முக்கிய கண்ணகி கோயில்கள்

வடஇலங்கையில் கண்ணகியம்மன் வழிபாடு 19ஆம் நூற்றாண்டில் தளர்வைக் கண்டது. கண்ணகியை ஜைனப் பெண்ணாக சுட்டும் தன்மை ஏற்பட்டதனால் கண்ணகியம்மனை இராஜராஜேஸ்வரி அம்மனாக மாற்றுகின்ற போக்கை சைவத்தைப் பரப்பும் சிலர் கடைப்பிடித்தனர். இவர்களுள் ஆறுமுகநாவலர் முக்கியமானவர். இலங்கை அரசாங்கத்துப் பழைய மந்திரியும் தமிழறிஞருமான திரு.க.நடேசப்பிள்ளை அவர்களும் இதுபற்றியே தமது ஆராய்ச்சியில் கூறுகின்றனர்.[23] இதனால் பல கண்ணகியம்மன் ஆலயங்கள் பிற அம்மன் ஆலயங்களாக மாற்றமடைந்தன. கண்ணகைக்கு கோயில்களில் நாமார்ச்சனை செய்யும் போது பராசாக்தியின் திருநாமங்களும் சேர்த்துக் கூறப்படுகின்றன.[24] இருப்பினும் கண்ணகியம்மன் எனும் பெயருடனேயே இன்று வடஇலங்கையில் பல ஆலயங்கள் காணப்படுகின்றன.

வடஇலங்கை எனும் போது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய பெருநிலங்கள் உள்ளடங்குகின்றன. கோவைகிழார் க. இ. குமாரசாமி என்பவர் இங்குள்ள 31 கண்ணகி அம்மன் கோயில்களை அடையாளப்படுத்தியுள்ளார்.[25] அவற்றுள் முக்கியமான ஆலயங்களாவன:

1. காரைநகர் கண்ணகியம்மன் கோயில்
2. மண்டைதீவு கண்ணகியம்மன் கோயில்
3. ஏழாலை கண்ணகியம்மன் கோயில்
4. பூநகரி கண்ணகியம்மன் கோயில்
5. காங்கேசன்துறை கண்ணகியம்மன் கோயில்
6. வீரமாணிக்கதேவன்துறை கண்ணகியம்மன் கோயில்
7. நாகர்கோயில் கண்ணகியம்மன் கோயில்
8. கோயிற்குளம் கண்ணகியம்மன் கோயில்
9. பருத்தித்துறை கண்ணகியம்மன் கோயில்
10. புத்தூர் கண்ணகியம்மன் கோயில்
11. கோப்பாய் வடக்கு கண்ணகியம்மன் கோயில்
12. நீர்வேலி கண்ணகியம்மன் கோயில்,
13. கைத்தடி கண்ணகியம்மன் கோயில்
14. வற்றாப்பளை கண்ணகியம்மன் கோயில்
15. அங்கணாமைக்கடவை கண்ணகி கோயில்

### (அ) காரைநகர் கண்ணகி அம்மன் கோயில்

1725இல் தாபிக்கப்பட்ட பழம் பெருமை வாய்ந்த கோயிலாகும். இங்கு சந்தன மரத்திலான கண்ணகியம்மனும், வைரவருமுண்டு. வருடா வருடம் சித்திரை வருடப்பிறப்பை அடுத்து வரும் முதல் வெள்ளிக்கிழமை கும்பம் வைத்து ஒன்பது நாட்களுக்கு திருவிழா நடைபெறுகின்றது.

### (ஆ) மண்டைத்தீவு கண்ணியம்மன் கோயில்

யாழ்மாவட்டத்தின் மண்டைத்தீவில் அமைந்துள்ள இவ்வாலயம் 1942இல் அமைக்கப்பட்டது. விழாவின் போது கண்ணகியம்மனுக்குரிய தோத்திரப் பாடல்கள் சிறப்பாக படிக்கப்படுகின்றது. மக்களின் வாழ்வியலோடு இணைந்ததொரு கோயிலாகும்.

### (இ) ஏழாலை கண்ணகியம்மன் கோயில்

இவ்வாலயத்தில் இன்று தினமும் இருவேளை பூசைகள் நடைபெறுகின்றன. பங்குனி மாதக்கடைசித் திங்களில் குளிர்த்தி நடைபெறும் வகையில் வருடாந்த விழா கொண்டாடப்படுகின்றது.

### (ஈ) பூநகரி கண்ணகியம்மன் கோயில்

வடஇலங்கையின் மிகப்பழமையான கண்ணகியம்மன் ஆலயங்களுள் இதுவும் ஒன்று. இங்கு தற்போது நித்திய பூசை இடம் பெற்றுவருகின்றது. வைகாசிப் பூரணைப் பொங்கல், சிவராத்திரி, சித்திரை மாத மணவாளக் கோலத்திருவிழா ஆகியனவும் இங்கு இடம் பெறுகின்றன.

[23] கந்தையா,வி.சீ, 2002, மட்டக்களப்புத் தமிழகம், பக்.159

[24] நடராசா,ஆ., 2008, பன்றித் தலைச்சியில் கண்ணகி வழிபாட்டுக் கோலங்கள், பக்32

[25] இலங்கையில் கற்புடைய மாதர் வழிபாடு கோப்பாய், 2005, பக்.04-05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (ஊ) காங்கேசன்துறை கண்ணகியம்மன் கோயில்

இவ்வாலயம் 16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கீசரால் இடித்தழிக்கப்பட்டது. இருந்த போதும் மீள அமைக்கப்பட்ட இவ்வாலயத்தில் தற்போது நித்திய பூசை தினமும் ஒருவேளை இடம் பெற்றுவருகின்றது. நவராத்திரி, சிவராத்திரி, திருவெம்பாவை, ஆகிய தினங்களில் விசேட பூசைகள் இங்கு இடம் பெறுகின்றன.

## (ஊ) மயிலிட்டி வீரமாணிக்கதேவன்துறை கண்ணகியம்மன் கோயில்

இவ்வாலயத்தில் சிற்ப வடிவில் கண்ணகியம்மன் எழுந்தருளியுள்ளாள். இவ்வாலயத்தின் மூலமூர்த்தி பல்லவர் காலத்தைச் சேர்ந்ததெனக் கூறப்படுகின்றது. இன்று தினமும் மூன்று வேளைப்பூசைகள் இங்கு இடம் பெறுகின்றன. மயில்வாகன ஐயரால் ஊஞ்சல் கவிதைகள் இவ்வாலயத்தின் மீது பாடப்பட்டது.

## (எ) நாகர்கோயில் கண்ணகியம்மன் கோயில்

இவ்வாலயத்திக் கண்ணகி கோவலன் ஏடு ஒன்று உள்ளது. 1978இல் இவ்வாலயம் அமைக்கப்பட்டுள்ளது. பங்குனித்திங்களில் நடைபெறும் அன்னதானமும், வருடந்தோறும் வைகாசியில் இடம் பெறும் விழாவும் விசேடமானவை.

## (ஏ) பருத்தித்துறை கண்ணகியம்மன் கோயில்

இவ்வாலயத்தில் இன்று மூன்று வேளைப் பூசைகள் இடம் பெறுகின்றன. தைமாதத்தில் உத்தர நட்சத்திரத்தில் ஆரம்பித்து 14 நாட்களுக்கு அலங்கார உற்சவம் நடைபெறுகின்றது.

## (ஐ) வற்றாப்பளை கண்ணகியம்மன் கோயில்

முல்லைத்தீவில் உள்ள வற்றாப்பளை கண்ணகையம்மன் கோயிலும் சிறப்பு வாய்ந்தது. இலங்கையின் வட பால் முல்லையும் மருதமும் நெய்தலும் ஒருங்கே சூழப்பெற்ற முல்லைத்தீவு மாவட்டத்தில்(பத்தாம்பளை) வற்றாப்பளை பதியில் வீற்றிருந்து அருளாட்சி புரியும் தாய்த் தெய்வமான கண்ணகியம்மனிற்கு வைகாசி விசாகத்திலே பொங்கல் விழா நடைபெறுகிறது. "அன்னை அவள் முற்றம் ஏறி, அவள் பிள்ளைகள் ஒன்று கூடி பொங்கலிட்டு அன்னைக்கும் அமுது செய்து தாமும் அருள்பெற்று வீடு திரும்பும் புனித நன்னாள் இது". "வைகாசி பௌர்ணமியில் கடல் நீரில் விளக்கெரியும்" வரலாற்று புதுமை மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மனின் வருடாந்த பொங்கல் விழா பாக்குதண்டல் என்ற பாரம்பரிய நிகழ்வுடன் ஆரம்பமாகும்.

வைகாசிப் பொங்கல் விழாவுக்கு ஒரு வாரத்துக்கு முன்பதாகவே பொங்கல் நாளில் கண்ணகி அம்மனுக்கு விளக்கு ஏற்றுவதற்கான கடல் நீரை எடுத்து வருவதற்கான சடங்குகள் ஆரம்பித்துவிடும். வைகாசி மாதத்து இரண்டாவது திங்கட்கிழமை தீர்த்தம் எடுத்தல் என்னும் புனிதமான நிகழ்வு இடம்பெறும். வற்றாப்பளை கண்ணகியை வழி வழியாக வைத்து வழிபட்டு தொண்டு செய்பவர்களே முழு நாளும் உபவாசமிருந்து விளக்கு ஏற்றுவதற்கான கடல் நீரை எடுக்கும் புனித கருமத்தை செய்வர். விளக்கு ஏற்றுவதற்கான கடல் நீரை 'தீர்த்தம்' என்றே பக்தர்கள் அழைக்கின்றனர்.

## (ஒ) அங்கணாமைக்கடவை கண்ணகி கோயில்

இங்குள்ள கண்ணகியம்மன் சிலம்போடு இணைந்தவாறு அமைக்கப்பட்டுள்ளாள். இங்கு கஜபாகு கெண்டு வந்த பாதச்சிலம்புகளும் கண்ணகியம்மனின் மிதிவடிக்கட்டையும் இருந்தன.[26] தற்போது அவற்றில் ஒருசோடி சிலம்பு மட்டுமே இங்குள்ளது.[27] கயவாகு மன்னன் நாடெங்கும் கண்ணகிக்கு கோயில்களமைத்து வழிபாடு செய்ய வேண்டும் எனக் கட்டளையிட்டதைத் தொடர்ந்து வரோதைய சிங்கையாரியன் காலத்தில் யாழ்ப்பாணப் பகுதிகளிற் கண்ணகிக்கு ஆலயங்கள் தோன்றின என்று சி.கணேசையரும் வேல்பரையிலுள்ள கண்ணகி கோயில் அக்காலத்தில் முதலில் அமைக்கப்பட்டதென்றும் அதன் பின்பு கட்டப்பட்டவையே களையோடை, அங்கணான்கடவை முதலிய இடங்களில் உள்ளவை என்று ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையும் கூறியுள்ளனர்.[28] பல காலமாக இங்கு பூசாரிகளே கிரியைகளை நிகழ்த்தி வந்தனர். இரண்டு வருடங்களாகவே பிராமணர்களால் இங்கு பூசை நிகழ்த்தப்படுகின்றது.[29]

## (ஓ) கோப்பாய் வடக்கு கண்ணகியம்மன் கோயில்

இவ்வாலயம் கஜபாகுவால் அமைக்கப்பட்டதெனக் கூறப்படுகின்றது. சிலப்பதிகாரக்கதைகள் சிற்பங்களாக இவ்வாலயத்தில் வடிக்கப்பட்டுள்ளன. இலங்கையின் வடபகுதியிலுள்ள சில கண்ணகி கோவில்களில் விழாக்

[26] ஆய்வாளர் அவதானம்
[27] தகவல்: கிருபா,நா.
[28] திருக்கேதீச்சரம் திருக்குடத் திருமஞ்சன மலர், 1976 , பக்.115
[29] தகவல்: சிவசுப்பிரமணியம் குமாரசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்களிற் கண்ணகி கதை புராணமாகப் படிக்கப்பட்டுப் பொருள் சொல்லப்படுவது வழக்கமாயுள்ளது. கோப்பாய் எனும் ஊரில் உள்ள பலானைக் கண்ணகாம்பிகைக்கு ஆறுமுகநாவலரின் ஆசிரியராகிய இருபாலைச் சேனாதிராயர் சிறப்பாக ஊஞ்சல் பாட்டுக்களைப் பாடியுள்ளார்.[30]

## (ஓள) மடுமாதா ஆலயம்

மடுமாதா ஆலயமும் ஆரம்பத்தில் கண்ணகிகோயிலாக இருந்தது என்பது பல அறிஞரது கருத்தாக உள்ளது. "The madu catholic church in vanni is also believed by some to have been aPattini devale at one time though it is now dedicated to virgin in mary or madu matta called by the tamils mari-amma. This may happened during the Portuguese rule of tha coastal belt in srilanka after the 15th century"[31]

## 1.4 வட இலங்கை கண்ணகியம்மன் தொடர்பான இலக்கியங்கள்

வட இலங்கையில கோவலனார் கதை, மந்திகைக் கண்ணகி அம்மன் அந்தாதி, மட்டுவில் பன்றித்தலைச்சியம்மன ஊஞ்சல், வற்றாப்பளையில் சிலம்பு கூறல், வற்றாப்பளை கண்ணயம்மன் வசந்தன்பாடல், மழைக்காவியம், பனிச்சை பாடிய பாடற்சிந்து மற்றும் அம்மானைப் பாடல்களும் முக்கியம் வாய்ந்தவை

## 1.5 முடிவுரை

இலங்கையின் வடக்குப் பகுதி இந்துப் பாண்பாடு செழிப்பாகவுள்ள பிரதேசம். இத்தன்மை கண்ணகி வழிபாட்டை சாதகமானதும் பாதகமானதுமான மாற்றங்களுக்குள் உட்படுத்தியுள்ளது. கஜபாகுவின் வருகையால் கண்ணகியம்மன் வழிபாடு இப்பிரதேசத்தில் சிறப்படைந்திருக்க வேண்டும். கிழக்கிலங்கையின் தாய்வழிமுறை கண்ணகியம்மனை மிக வேகமாக உள் இழுத்துள்ளமை போன்று வடபகுதியில் இல்லையென்றே கூறமுடியும். கண்ணகியம்மன் ஜைனத் தொடர்புடையவள் என அவள் பிற அம்மனாக வடபகுதியில் மாற்றப்பட்டாளாயினும் கிழக்குப்பகுயில் செல்வாக்குப் பெற்றுள்ள அவள் ஜைனத் தொடர்பு எனும் பாதக விளைவை சமூகத்தில் ஏற்படுத்தவில்லை. இருப்பினும் வடபகுதியில் கண்ணகியம்மன் எனும் பெயருடன் இன்றுங் காணப்படும் ஆலயங்கள் கண்ணகி வழிபாடு அங்கு பெற்றிருக்கும் சிறப்புக்கு ஆதாரங்களாகும். இலங்கையில் கண்ணகி வழிபாடு பற்றி ஆராயும் ஒரு ஆராய்ச்சியாளனுக்கு வடக்கில் கண்ணகி வழிபாடு பற்றிய ஆராய்வு இல்லாமல் அவ்வாய்வு பூரணமாகாது.

---

[30] பத்மநாதன்,சி., இந்துக் கலைக்களஞ்சியம் பகுதி-iii, பக்.67

[31] Anuratha Senaviratna, 2003, Manifestication opf goddess Pattini in SriLanka Society

வில்லிடப மலவனொடு கோள்கும்ப ராசிகளில்
மேவியுற வாய்வெள்ளி மேவுநா ளதனில்
நல்லமதில் யனையகே சரியோக முற்று
நன்மைபெறு குருசந்ர னானதின் பின்பு
சொல்லரிய இடமுற்ற நேரமதில் முகில்கள்
சொரிகின்ற சோனை மழை யெனவேபொ ழிந்து
நெல்விளைவு பெறவுனது திருமனமி ரங்கி
நிமிஷத்தில் மழையுதவு மலருமுக மயிலே.


**- தம்பிலுவில் மழைக் காவியத்திலிருந்து -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மதிப்பீட்டுக் குறிப்பு – 01
பேராசிரியர் **வ. மகேஸ்வரன்**
(தலைவர். தமிழ்த்துறை.
பேராதனை பல்கலைக்கழகம்)



மதிப்பீட்டுக் குறிப்பு – 02
கலாநிதி **செ. யோகராசா**
(முதுநிலை விரிவுரையாளர்
கிழக்குப்பல்கலைக்கழகம்)




தொகுப்பு
ஆய்வரங்குத் தலைவர்
**செல்வி. க. தங்கேஸ்வரி**



**பிரான்சிஸ்**



**அ.ச. பாய்வா**
ஐயம் தெளிதல்



**விக்னேஸ்வர பிரமின்**
**(சக்திதாசன்)**

மலரழக மதுகுலைய வளருமிள முலைகுழைய
வடிவுறுமுன் இடைதுவள மதிநுதலி லேவேர்வை
திலதமெழு தியதழிய வெயிலின்மிசை புழுகொழுகு
திருமேனி கருகவெளி வரவேணு மோதான்
உலகமுழு தும்பெற்ற தாயல்லோ மழைவெள்ள
மொருநாழி கைப்பொழுதி லுதவவொண் ணாதோ
குலதிலக வணிகர்குல வனிதையே தம்பிலுவிக்
குடிகொண்ட பத்தினிக் கோதைமா தாவே.

**- தம்பிலுவில் மழைக் காவியத்திலிருந்து -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதிப்பீட்டுக் குறிப்பு



பேராசிரியர் செ.யோகராசா
(முதுநிலை விரிவுரையாளர்,
கிழக்குப்பல்கலைக்கழகம்)

சென்ற வருடம் நடைபெற்ற நிகழ்வுடன் ஒப்படும் போது இவ்வருட ஆய்வரங்கில் தலைப்புகள் தொடர்பான திட்டமிடல் சிறப்பாக அமைந்துள்ளது பற்றி முதலில் பாராட்டு விரும்புகிறேன்.

இன்றைய முதல் ஆய்வுக்கட்டுரை 'சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் இல்லறம்' என்பதாகும். ஆய்வாளர் இரகுபரன் வராத சூழலில் அவரது பிரதி வாசிக்கப்பட்டது. இந்த ஆய்வை பொறுத்தவரையில் சிலப்பதிகார இலக்கியத்தின் உள்நின்றே ஆய்வாளர் தனது கருத்துக்களை முன்வைத்திருந்தார். இவ்விதத்தில் ஆய்வு வெகுநேர்த்தியாக அமைந்திருந்தது. எனினும் வெளியில் ஓரளவாவது எட்டிப்பார்த்திருத்தல் வேண்டும். ஏனெனில் கண்ணகி - கோவலன் இல்லறம் தொடர்பாக வெளி ஆய்வுகளில் அனேககேள்விகளுக்கு இடமுள்ளது. இதனைத்தவிர்க்கும் நோக்கில் முன் குறிப்பிட்ட வகையில் இவ்வாய்வுரை திருப்திகரமாகவே அமைந்திருக்கின்றது.

2வது ஆய்வுக்கட்டுரை 'மாதவி - மணிமேகலை ஆகியோரின் வாழ்வியல்' பற்றியது இவ்வாய்வுரைக்குரியவர் ரூபி பிரான்சிஸ் அவர்கள். இவ்வுரையில் முன்பு குறிப்பிட்ட உரையைப்போன்று சிலப்பதிகாரத்தின் உள்நின்றுதான் ஆய்வு நிகழ்த்தப்பட்டிருந்தது. அவ்விதத்தில் அது நிறைவுரையாகினும் சற்று வெளிவந்திருந்தால் மாதவி மணிமேகலை தொடர்பான புரட்சிகரமான பார்வைகளை வெளிப்படுத்தியிருக்கமுடியும்.

அடுத்த உரை திரு. நவநாயகமூர்த்தி என்பவரது 'தமிழகத்தில் கண்ணகி வழிபாடு' தலைப்பிலானது பல்கலைக்கழகத்தோடு தொடர்பு படாத வெளியிலுள்ள முக்கியமான ஆய்வாளர்களுள் நவநாயகமூர்த்தி குறிப்பிடத்தக்கவர். எனினும் இன்றைய அவரது உரை தடம் மாறிச்சென்று தமிழகத்தில் கண்ணகி வழிபாடு தொடர்பாக எடுத்துரைத்ததை விட பௌத்தத்தின் பரம்பல் பற்றி பேசியது விரிவாக அமைந்து விட்டது.

கலாநிதி அனுசுயாவின் ஆய்வு கிழக்கிலங்கையில் கண்ணகி வழிபாட்டின் பிரதிபலிப்பென்பதாகும். இது பரந்து விரிந்து செல்கின்றதொரு விடயம். கள ஆய்வுக்குரியதும் ஆகும். எனினும் குறிப்பிட்ட சில விடயங்களைப்பற்றி மட்டுமே அவர்கவனம் செலுத்தியிருக்கிறார்.

'வடஇலங்கையில் கண்ணகி வழிபாடு' பற்றி ஆய்வுரை நிகழ்த்தியவர் திருமதி.காந்திகேசவன். தேடல் மிகுந்ததாக அவரது உரை அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கதுவும், பாராட்டத்தக்கதுவுமாகும்.

எது எவ்வாறாயினும் இலக்கிய ஆர்வர்களினதும், ஆய்வாளர்களுடையதும் சிந்தனைக்குரிய பல விதைகளை இன்றைய ஆய்வரங்கு விதைத்துள்ளதென்பதில் தவறில்லை.

விதைகள் முளைத்து மரமாகி ஏதோ ஒருகாலத்திலாவது தோப்பாகட்டும்.

செப்பினுள் அலைகடலின் மீதுமுன் னிருந்தாய்
இட்டமா யாயரிட சேரியில்வ ளர்ந்தாய்
கொப்புமா வின்கனிய தாகமுன்னி ருந்தாய்
கோகனக தம்பிலுவில் கோயிலி லமர்ந்தாய்
இப்பவூ ரக்கவெளி யாற்றிடை யிருந்தாய்
யெப்பம்மா மழைதருவ தென்றினிதி ருந்தாய்
தப்பினா லுலகமுறு வார்கள் துயர் கண்டாய்
தற்பரா பரனுதவு சக்திகண் ணகையே.

**- தம்பிலுவில் மழைக் காவியத்திலிருந்து -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வரங்கத் தொகுப்புரை



செல்வி.க.தங்கேஸ்வரி -
தொல்லியல் சிறப்பு

சிலப்பதிகாரக் கண்ணகியின் இல்லறம் புகட்டுவது கற்பு, தெய்வத்தன்மை சிறந்த இல்லறம், இல்லத்தில் அறம் செய்தல் போன்ற சகல பண்பும் மணிமேகலை, மாதவி வாழ்வியல் காட்டுவது குலமரபில் இருந்து மீறும் ஒருத்தியாகவும், பொது மகளாக இருந்தவள் ஒரு மகளை ஈன்ற பின்பும் பொதுமகளே என்ற மரபும், தவ வாழ்க்கை கணிகையர்க்கு உகந்ததல்ல எனினும் துறவு பூணுகிறாள். கணிகையின் மகளான மணிமேகலை வஞ்சியில் கண்ணகியின் மகளாக அறிமுகமாகிறாள். அறம் உபதேசிக்கும் பௌத்த துறவியுமாகிறாள் என்ற செய்தி கிடைக்கிறது.

தமிழகத்தில் கண்ணகி வழிபாடு இருந்த இடமெல்லாம் பல்வேறு பெண் தெய்வ வழிபாட்டு இடங்களாக மாறிவிட்டன. கேரளத்தில் 33 ஆலயங்களும், தமிழகத்தில் 11 கண்ணகி அம்மன் ஆலயங்களும் இருந்து வேறு தெய்வங்களாக மாறிவிட்டன என்ற செய்தியும் வட இலங்கையில் அங்கணால் கடமை மூலம் வந்த கண்ணகி வழிபாடு இன்று ராஜராஜேஸ்வரி, மாரியம்மன் என்றவேறு பெயர்களில் மாறிவிட்டது எனவும் 31 கண்ணகி கோயில்கள் வடக்கே உள்ளன என்று இனங்காட்டப்பட்ட செய்தியும் கிடைக்கிறது. சுருக்கமாகச் சொன்னால் கண்ணகி ஓர் முன் உதாரணம், அடிபட்டு புதிய நிலைக்கு மீண்டும் வரவேண்டும் என்ற உத்வேதத்துடன் மதுரைக்குப் போகிறாள். அங்கு எதிர்பாராத எழுச்சி கிடைக்கவில்லை. கோவலன் அநியாயமாகக் கொல்லப்பட்டதும் ஆவேசம் அடைகிறாள். மதுரையை எரித்து அழிக்கிறாள். இது இக்காலப் பெண்களுக்கு ஓர் உதாரணமாகும். மதுரையில் பரவிய தீ போல் நமது சமூகத்தில் பெண்கள் எழுச்சி பெறவேண்டும் என்பதே இவ் ஆய்வரங்கு தெரிவிக்கும் தொனிப்பொருளாகும் என்பதை மேற்படி ஐந்து கட்டுரையாளர்களின் கருத்துக்களின் மூலம் புலனாகிறது.

மேலும் ஒரு செய்தியையும் இங்கு நாம் தெரிவிப்பது சகலருக்கும் பயனுள்ளதாக அமையும் என நினைக்கிறேன். கண்ணகி வழிபாடு கி.பி 2ம் நூற்றாண்டில் நிலவியபோது ஆரியர் புகுந்ததனால் தமிழ் மக்களின் வழிபாட்டு முறைகளில் மாற்றங்கள் பல ஏற்பட்டன. கண்ணகியை இந்துக்கள் வழிபடக் கூடாது என வெவ்வேறு சாதிகளின் வடிவங்களில் மாற்றியமைக்கச் செய்தனர். கேரளத்தில் 33 கண்ணகி ஆலயங்களும் தமிழ் நாட்டில் 11 கண்ணகி அம்மன் ஆலயங்களும் இருந்தன. அவை எல்லாம் பகவதி, துர்க்கா, காளி, மாரி, ராஜராஜேஸ்வரி, செய்காளத்தி, செல்லத்தம்மாள், வஞ்சியம்மன், வலங்கை அம்மன், வட்டிபுரி அம்மன் எனப் பலவிதமாக மாற்றம் பெற்றுள்ளன. எனது தொகுப்பில் அவற்றை இங்கு குறிப்பிடுதல் பொருத்தமானது.

கேரளத்தில் குமுளியில் நெடுவேற்குன்றம். இது சிலப்பதிகாரம் குறிப்பிடும் வின்னேற்று மலையிலுள்ள மங்கலதேவி கோட்டம். இது கண்ணகி கோட்டமாகும். சித்திரைப் பௌர்ணமி வழிபாடு கொடுங்கோளூர் பகவதி - ஆகமவிதி இல்லாத ஒற்றை முலைச்சி அம்மன் ஆலயம் தலைப்பலி கொடுக்கப்படும் இடம். கண்ணகி ஆலயமாகும்.

திருவனந்தபுரம் - மாவட்டம் ஆட்டுக்கல் பகவதி ஆலயம் பிரமாண்டமான கண்ணகி ஆலயம். பொங்கல் இடம் பெறும் இடமாகும்.

கொல்லம் மாவட்டம் வடக்கனடையில் பகவதி ஆலயம். இங்கு காவரிப்பூம் பட்டிணத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட கண்ணகி சிலை உள்ளது.

சிலப்பதிகாரத்தில் செங்குன்றம் எனக் குறிப்பிடும் ஆலப்புளா மாவட்ட செய்யனூர் பகவதி. மதுரையை எரித்து விட்டுப் போகும்போது மர நிழலில் கண்ணகி நின்ற இடம்.

ஏர்னாக்குனம் சோட்டனிக்கரா பகவதி - கண்ணகி ஆலயமாகும்.

பாலக்காடு மாவட்டம் மூத்தாந்தலை பகவதி - கண்ணகி ஆலயமாகும்.

பாலக்காடு மாவட்டம் குடவையூர் - ஆத்தி மரத்தோடு குன்னம்புரம் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்சியில் - திருக்காளத்தூர் - முக்கொலம்கல் (வேம்பின்கோடு) பகவதி ஆலயம்.
தமிழ் நாட்டில் சென்னையில் வடபால் திருவாரூர் மாவட்ட திருவொற்றியூர் கண்ணகி துர்க்கை அம்மன் ஆலயம் உள்ளது.
கருவூரில் வஞ்சியம்மன், வலங்கையம்மன் ஆலயங்கள் கண்ணகி தொடர்புடையன.
வடமதுரையில் சிம்மக்கல் என்னுமிடத்தில் செல்லத்தம்மாள் - கண்ணகியம்மன்
கோயம்புத்தூர் பொல்லாச்சியில் - முதுவன் ஆதிவாசிகள்கோயில் - கண்ணகியம்மன்
நீலகிரிகோடர் இன மக்கள் - துர்க்கா, பகவதி கண்ணகியம்மன்
பெரும்பலூர் திருவாச்சியூரில் மதுரகாளியாக உருக்கொண்ட செல்வி அம்மன் கண்ணகியம்மன்
மதுரை புறநகர் பகுதியில் பழங்காந்தாரம் அருகில் - கோவலன் பொட்டல்
பிரகதீஸ்வரம் - சோழர்கால கண்ணகி ஆலயம் - கண்ணகிகோட்டம் நீலி, பகவதி என வருவது எல்லாம் கண்ணகி ஆலயமாகும்.

# உரைகள்



**பேராசிரியர் சி. சிவசேகரம்**
**(முதன்மை அதிதி)**

''......... இவ்வாய்வரங்கில் இரண்டு விடயங்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. கண்ணகி வழிபாடு இது முழுக்க முழுக்க நம்பிக்கை சார்ந்த விடயம். இதன்போது மக்களுடைய நம்பிக்கைகளை மதிப்பதற்கு நாம் பழகவேண்டும். இதன் மூலம் மனிதரை மதிக்கின்றோம். அவன் சார்ந்த சமூகத்தை மதிக்கின்றோம். கண்ணகி வழிபாடு குறிப்பிடப்பட்ட சில காலப்பகுதியிலே அழிக்கப்பட்டிருப்பது வருந்தத்தக்கவிடயம். ஆனால் திரும்பவும் கண்ணகி வழிபாட்டை யாழ்ப்பாணத்தில் கொண்டு போகமுடியும் என்ற நம்பிக்கை எனக்குக் கிடையாது. ஆனாலும் கண்ணகியைப்பற்றிய சில தவறான கருத்துக்களை நீக்குவதற்குரிய சில முயற்சிகளை நாங்கள் எடுக்கலாம். இது நம்பிக்கைக்கு அப்பால் வரலாற்று ஆய்வாளர்கள் செய்யக்கூடிய காரியங்கள்.''



**திரு. வே. கனகரத்தினம்**
பிரதம உள்ளக கணக்காய்வாளர், கச்சேரி, அம்பாறை.
**(சிறப்பு அதிதி)**

''.............. உண்மையில் இந்த ஆய்வரங்கானது அறியாத பல விடயங்களை எமக்குத் தந்திருக்கின்றது. இத்தகைய ஆய்வரங்குகளில் தெளிவு பெறுவது ஒருவருடைய மனம் இரண்டாவது தெய்வீகம் மூன்றாவது மாயை இவை மூன்றும் இங்கு பின்னிப்பிணைக்கப்பட்டிருக்கின்றது. அதாவது ஒரு மனிதனுடைய வாழ்வில் அவன் எவ்வாறு வாழவேண்டும் என்பதை விளக்குவதற்கு மனம் தான் முக்கியமான காரணம். அம்மனதில் இருவிதமான எண்ணங்கள் உருவாகின்றது. ஒன்று தீய எண்ணம் - அடுத்தது தூய்மையான எண்ணங்கள். இவை இரண்டிலுமிருந்து ஒரு மனிதன் உயர்கின்றான் அல்லது இழிவான நிலைக்கு செல்கின்றான்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திரு. மா. கிருபைராஜா

அதிபர், ஸ்ரீ இராமகிருஸ்ண தேசிய பாடசாலை, அக்கரைப்பற்று

**(சிறப்பு அதிதி)**

"........... இந்த விழாவின் உச்சக்கட்ட நிகழ்வாகவே இந்த ஆய்வரங்கத்தை நான் நினைக்கின்றேன். இதன் மூலம் நாங்கள் மக்களுக்கு எதனைச் செய்கின்றோம் என்ற விடயத்தினை இவ் ஆய்வாளர்கள் மிகவும் சிறப்பான முறையிலே முன்னெடுத்தார்கள். இடையே பல்வேறு மதங்கள் தோன்றியிருக்கின்றன. அவற்றில் சில குழுவினை அடிப்படையாகக்கொண்டு வளர்ந்திருக்கின்றன. கண்ணகி காவியம் என்பது இளங்கோவடிகளால் இயற்றப்பட்ட ஒன்று. அதற்கு முன்னதாகவே அது நிகழ்ந்திருக்கின்றது என ஆய்வில் கூறப்பட்டது. ஆனாலும் முடிவுரைகளில் நாங்கள் கவனம் செலுத்தவேண்டும். ஏனென்றால் இந்து சமயத்தோடு இணைவுற்ற இந்த கண்ணகி அம்மன் வழிபாட்டினை நாங்கள் எந்தவகையிலும் இழிவுபடுத்தும் வகையில் முடிவுறுத்தக்கூடாது என்பது எனது தாழ்மையான வேண்டுகோள்."



## திரு. கி. குணநாயகம்

கலாசார உத்தியோகத்தர், அம்பாறை

**(சிறப்பு அதிதி)**

"............. உண்மையில் கிழக்கிழங்கை மக்களின் வரலாற்றுப்புத்தகத்தில் பதியப்படவேண்டிய ஒரு நிகழ்வு இந்தக் கண்ணகி கலை இலக்கியவிழா. கண்ணகியின் பன்முகப்படுத்தப்பட்ட வரலாற்றுப்பார்வை, அதனுடைய தாற்பாரியங்களை நாங்கள் அறியக்கூடியதாக இருக்கின்றது. பெண்மை என்பது மென்மை என்று கூறுவார்கள் இருப்பினும் கண்ணகி ஆரம்பத்திலே பேசாமடந்தையாகத்தான் இருந்தார். தன்னுடைய நியாயத்தை, உரிமையை கோரும்போது பெண்மை அங்கே ஒரு நாடே எரியக்கூடிய நிலையை அடைகிறது. அந்நிலை பெண்கள் மத்தியிலே தொடரவேண்டும்......"



நன்றியுரை

**க. சுதர்சன்**

(செயற்குழு உறுப்பினர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16, ஜூன் 2013 ஞாயிற்றுக்கிழமை,
## இரண்டாம் நாள் மாலை அமர்வு.


## "கலையரங்கும் நிறைவு விழாவும்"

**அரங்கு** : **"மாதவி அரங்கு."**

**காலம்** : **16.06.2013** ஞாயிற்றுக்கிழமை மாலை **06.00 -** பி.ப **09.15**

**இடம்** : ஆலையடிவேம்பு பிரதேச சபை கலாசார மண்டபம். அக்கரைப்பற்று.

**தலைமை** : கலாநிதி. **க.பிறேமகுமார்.**
(பணிப்பாளர், சுவாமி விபுலாநந்த அழகியல் கற்கைகள் நிறுவகம்)



**கலாநிதி கிட்ணன் கோவிந்தராஜ்**
(உபவேந்தர் கிழக்குப்பல்கலைக்கழகம் - முதன்மை அதிதி)



**கலாநிதி. செ. குணபாலன்**
(முதுநிலை விரிவுரையாளர், தலைவர், முகாமைத்துவபீடம் தென்கிழக்குப்பல்கலைக்கழகம் - சிறப்பு அதிதி)

## மங்கல விளக்கேற்றல்



அறிமுகவுரை
**ப. கிருஸ்ணபிள்ளை**
(அதிபர், கோளாவில் விநாயகர் வித்தியாலயம்)




தலைமையுரை
**கலாநிதி க. பிறேமகுமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புஸ்பாஞ்சலி
அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஸ்ண தேசிய பாடசாலை மாணவிகள்
நெறியாள்கை : **திருமதி. சு. விஜயசாந்தன்** (நடனஆசிரியை)



கண்ணகி வசந்தன்
நெறியாள்கை, அண்ணாவியார்: கலாபூஷணம் **தேனூரான்**



கண்ணகி காவடிப் பாடல்கள்
**செல்வன் தே. லோகவியாசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிராமிய நடனம் - அக்கரைப்பற்று சுவாமி விபுலானந்த இல்ல மாணவிகள்



சாஸ்திரிய நடனம் - "ஜதீஸ்வரம்"
அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஸ்ண தேசிய பாடசாலை மாணவிகள்
நெறியாள்கை : திருமதி. **சு. விஜயசாந்தன்** (நடனஆசிரியை)



கண்ணகி குளிர்த்திப் பாடல்கள்
**திரு. மா. கிருபைராஜா**
அதிபர், ஸ்ரீ இராமகிருஸ்ண தேசிய பாடசாலை, அக்கரைப்பற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நாட்டிய நாடகம்
மட்டக்களப்பு நர்த்தனபவனம் நாட்டியப்பள்ளி மாணவர்கள்)
நெறியாள்கை : **திருமதி. ஷா. பிரபாகரன்** (நடனஆசிரியை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கூத்து – "மனுநீதிகண்டசோழன்"

நெறியாள்கை : **திருமதி. ந. ராஜ்குமார்** (தகவல்தொழில்நுட்ப ஆசிரியை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரைகள்



## கலாநிதி கிட்ணன் கோவிந்தராஜ்
## முதன்மை அதிதி

"........இது போன்ற இலக்கிய விழாக்கள் எமது பாரம்பரிய கலை கலாசாரம் தொடர்பான ஆராய்ச்சிகளையும் மாணவர்களின் திறமைகளையும் வெளிக்கொண்டு வருவதால் கண்டிப்பாக இதுபோன்ற திறமைகள் ஊக்குவிக்கப்படவேண்டிய ஒன்றாகும் என்பதால் எந்தவிதமான மாறுபட்ட கருத்துக்கும் இடமிருக்க முடியாது ..."



## கலாநிதி செ. குணாபாலன்
## சிறப்பு அதிதி

"...இன்று சினிமாவிலும் நாடகத்திலும் எமது கலை மழுங்கி தமிழ் அழிந்துவிடும் என்ற சூழலில் இங்கே நடந்து கொண்டிருக்கும் நிகழ்வுகளைப் பார்க்கின்றபொழுது தமிழரின் வாழ்வும் மரபும் பண்பாடும் எப்பொழுதும் அழிந்து விடமுடியாது; அது உயிர்த்தெழும் என்பதற்கு ஒரு சான்றினை நான் பார்க்கின்றேன்."



## சிறப்புரை:
## (15. 06. 2014 - மாலை அமர்வு)

**"சிலப்பதிகாரம் உணர்த்தும் வாழ்க்கைத் துணைநலம்"**

**செஞ்சொற் செல்வர். ஆறு திருமுருகன்**
தலைவர், தெல்லிப்பளை துர்க்கையம்மன் தேவஸ்தானம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# "கண்ணகி கலை இலக்கிய விழா ~2014"

கண்ணகி இலக்கிய விழாவின் கன்னி விழாவான "கண்ணகி இலக்கிய விழா - 2011" இன் தொடக்க விழாவில் 18.06.2011 அன்று பிரகடனப்படுத்தப்பெற்ற கண்ணகி இலக்கிய விழாப் பட்டயத்திற்கு அமைவாக, வருடம் தோறும் எடுக்கப்பட்டு வரும் இவ்விழாவின் இவ் வருட மூன்றாவது விழாவான "கண்ணகி கலை இலக்கிய விழா - 2013, ஜுன் 15,16 ஆகிய தினங்களில் அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று, ஆலையடி வேம்பு பிரதேச சபை கலாசார மண்டபத்தில் மிக விமரிசையாக நடைபெற்றது. இவ் விழாவின் வெற்றிக்குப் பங்களித்த அக்கரைப்பற்று, ஆலையடி வேம்பு பிரதேச மக்களைச் சங்கை செய்யு முகமாக இந் நினைவுச் சின்னம் "கண்ணகி கலை இலக்கியக் கூடல்" இனால், இவ் விழாவின் நிறைவு நாளான 16 ஜுன் 2013 அன்று வழங்கப்படுகின்றது.

"கண்ணகி கலை
இலக்கியக்கூடல்
மட்டக்களப்பு
16.06.2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்மானங்கள்



திரு. அ. அன்பழகன் குருஸ்
செயலாளர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்.

தமிழர் சமூகம் பல்தரப்பட்ட ஈர்ப்புக்களினால் எண்திசையிலும் இழுப்புறும் நிலையில், கீழைக்கரை மக்களின் பொதுநிலையான பண்பாட்டுதளம் ஒன்றை அடையாளம் காணத் தேடியபோது, அதுவே இந்த கண்ணகிகலை இலக்கியக் கூடலானது. இன்றுஅந்தத் தளத்தில் அனைவரும் இணைந்து செயற்படத்தக்க வகையில் நாம் உருப்பெற்றுள்ளோம்.

கலை, இலக்கியப்பண்பாட்டுத்தளத்தில் தனித்துவமான எமது அடிப்படைகளை ஒரு உயரமான இடத்தில் வைத்து சீர்தூக்கிப் பார்க்கும் போதுதான், அதன் கனபரிமாணங்களை எம்மால் உணர்ந்து கொள்ள முடியும். அவைபற்றிய தேடல்களையும், ஈடுபாடுகளையும் முடுக்கி விடமுடியும். இவ்வாறான நன்நோக்கில் நாம் தொடங்கிய இந்தவிழா இன்று மூன்றாண்டுகண்டு, தேசியம் கடந்து சர்வதேசம் வரை தமிழர்களிடையே தாக்கம் செலுத்தியுள்ளமையினை எம்மால் அறியமுடியும்.

இந்நிலையில் எமது கூடலின் அடுத்தஆண்டுச் செற்பாடுகள் பற்றியதீர்மானமாகப் பின்வரும் விடயங்களை இவ்வரங்கில் முன்வைக்கின்றேன்.

1. கடந்த மூன்றுஆண்டுகளில் பேராளர்களாகப் பதிவு செய்துகொள்ளப்பெற்ற 700க்கு மேற்பட்டபேராளர்களை இணைத்துக் கொண்டு அடுத்த ஆண்டின் முதற்காலாண்டில் பேராளர்மாநாடு நடாத்தி கூடலின் செயற்பாடுகளை விரிவாக்குதல்.

2. கிழக்குப் பல்கலைக் கழகத்தினதும், அதன் கீழியங்கும் சுவாமி விபுலாந்த அழகியற் கற்கை நிறுவத்தினதும் கற்கைநெறிகளுக்கான பாடவிதானத்தில் கண்ணகிகலை இலக்கியங்களை இணைத்துக் கொள்வதற்கான முடியற்சிகளில் ஈடுபடல்.

3. தமிழறிஞர் குழு ஒன்றின் மூலம் **கண்ணகி வழக்குரை காவியத்துக்கு** உரையெழுதிப் பதிப்பித்து அதனை மக்களிடையே பரவலாக்குதல்.

4. ஏட்டுவடிவிலுள்ள இதுவரைஅச்சில் பதிப்பிக்கப்படாதகண்ணகி இலக்கியங்களைபதிப்பித்துவெளியிடல்.

5. ஏற்கனவேபதிப்பிக்கப்பெற்றகண்ணகி இலக்கியங்களைமீள் பதிப்புச் செய்தல்.

6. கண்ணகிகலை இலக்கியச் செயற்பாடுகளுக்கு அப்பால் எமதுசமூகம் அவாவிநிற்கும் கல்வி, சமூகமற்றும் வாழ்வாதரச் செயற்பாடுகளைத் திட்டமிட்டுமேற்கொள்ளல்.

7. அடுத்த வருடத்தில் நடைபெறவுள்ள நான்காவது கண்ணகி இலக்கியவிழாவானகண்ணகிகலை இலக்கியவிழா 2014 ஐ தம்பிலுவிலில் நடாத்தவேண்டும் என்றஅவ் ஊர் மக்களின் வேண்டுகோளைப் பரிசீலனைக் கெடுத்தல்.

8. பொருத்தமான இடத்தில் கண்ணகிகலை இலக்கியக் கூடலின் தலைமையகத்தை நிரந்தரமாக நிறுவி, நிறுவனப்படுத்தப்பட்ட அமைப்பாகப் பணியாற்ற ஏதுவான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

இந்தத் தீர்மானங்கள் தங்களால்தான் செயற்பாடாக்கிநிறைவடையச் செய்யமுடியும். வாருங்கள் நாமெல்லாம் இணைந்துகண்ணகிகலை இலக்கியப் பண்பாட்டுத் தளத்தில் முனைப்போடுமுன்செல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவுரை



**திரு. மா. சதாசிவம்**
**துணைத்தலைவர்,**
**கண்ணகி கலை இலக்கியக் கூடல்**

பெருமதிப்பிற்குரிய அவையோர் அனைவருக்கும் முதற்கண் வணக்கம்.

"திருமாமணிநங்கை வந்தாள் எங்கள் தேசம் தழைத்திட வந்தாள் வந்தாள்" எனும் மகுட வாக்கியத்துடன் கூடிய கண்ணகி கலை இலக்கியக் கூடலின் மூன்றாவது விழாவினை இந்த அரங்கிலே நிறைவு செய்வதில் மகிழ்ச்சியடைகிறோம்.

இப்பிரதேசத்தின் சிறப்புமிக்க பனங்காடு பட்டிமேடு கண்ணகை அம்மன் ஆலயத்தில் விசேட பூஷை ஆராதனையுடன் நேற்று (2013 ஜூன் 15) தொடக்கவிழா ஊர்வலம் ஆரம்பமாகி விழா மண்டபத்தை வந்தடைந்தது. இக்காட்சி இப்பிரதேச மக்களின் மனதை தொட்டிருக்கு மெனக் கருதுகிறேன்.

கிழக்கு மாகாணத்தைப் பிரதிபலிக்கக் கூடிய கண்ணகி வழகுரை சார்ந்த இலக்கியத்திஜனை உலகளாவியரீதியில் எவ்வாறு முன்னெடுக்க வேண்டும் என்பதைப்பற்றி இவ்விழாவில் உரையாற்றிய சான்றோர்கள் பலர் மிகச்சிறப்பாக சொல்லியிருக்கிறார்கள். காலத்தின் தேவை கருதி விழாக்குழுவினர் இதனை முன்னெடுத்து வருகிறார்கள். இந்தவகையிலேதான் வெறுமனே இது ஒரு கலைவிழாவாக மாத்திரமில்லாது கனதியான சமூககண்ணோட்டத்தில் நடைபெறுகின்ற ஒரு விழாவாக இந்தக் கூடல் மதிக்கின்றது.

அம்பாறை மாவட்டத்தில் இவ்வாண்டு விழாவினை நடாத்த வேண்டுமென முன்மொழியப்பட்டபோது கூடல் பெருமனதோடு ஏற்றுக்கொண்டது. இதனடிப்படையில் ஆலையடி வேம்புப் பிரதேசத்தில் ஆரம்ப ஒன்று கூடல் நடைபெற்றது. தொடர்ந்து பல கலந்துரையாடல்கள் நடைபெற்று ஆலையடிவேம்புப் பிரதேசத்தில் விழா நடாத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. இச்சபையிலிருந்து 2013 விழாக்குழு தெரிவு செய்யப்பட்டது.

துணிச்சல்மிக்க தலைவரையும், திறன் பொருந்திய செயலாளரையும் மற்றும் உறுப்பினர்களையும் தெரிவு செய்து விழாவைச் சிறப்பாக நடாத்தி நிறைவு செய்வதில் மகிழ்ச்சியடைகிறோம்.

இந்த விழாக்குழுவின் தலைவர் விபுலானந்தர் சிறுவர் இல்லத்தை எவ்வாறு வழிநடாத்துகின்றாரோ அதேபோன்று இவ்விழாவினையும் சிறப்பாக நடாத்தி நிறைவு செய்திருக்கிறார். இவருக்கு இணையாக கூடலின் செயற்குழு உறுப்பினரும், விழாக்குழுச் செயலாளருமான தம்பி செல்வானந்தம் அவர்களும் செயப்பட்டிருக்கிறார். இவர்களோடு இணைந்து செயற்பட்ட விழாக்குழுவினரையும் இளைஞர்களையும் பாராட்டி நன்றி கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

இதேவேளை கடந்த இருநாட்களாக நடைபெற்ற நிகழ்வுகளில் பங்குகொண்ட அதிதிகள், உரையாளர்கள், ஆய்வாளர்கள், கலைஞர்கள், நெறியாளர்கள், மற்றும் பெரியோர்கள் அனைவருக்கும் சிறப்பான நன்றிகள் உரித்தாகுக.

இவ்விழாவில் கலந்து கொண்ட அனைவரையும் இன்முகத்தோடு வரவேற்று, உபசரித்து, உணவு வழங்கி பெருமைப்படுத்திய அனைவருக்கும் நன்றி கூறுகிறோம். இந்த விழா சிறப்புற யார் யார் எந்தெந்த வழிகளில் உதவினார்களோ அவர்களுக்கெல்லாம் இந்நன்றி உரித்தாகுக.

நன்றி வணக்கம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணகிகலை இலக்கியவிழா– 2014, திருக்கோவில் பிரதேசம் விழாக்குழு

| | | | | |
|---|---|---|---|---|
| **தலைவர்** | : | திரு. வ. ஜயந்தன் | - | தம்பிலுவில் |
| **செயலாளர்** | : | கவிஞர். முல்லைவீரக்குட்டி | - | தம்பிலுவில் |
| **பொருளாளர்** | : | திரு. சி. விநாயகமூர்த்தி | - | தம்பிலுவில் |
| **துணைத்தலைவர்** | : | திரு. ஆ. கணேசமூர்த்தி | - | திருக்கோவில் |
| **துணைச்செயலாளர்** | : | திரு. எஸ்.பி. நாதன் | - | தம்பிலுவில் |


**உறுப்பினர்கள்** :

1. திரு. எஸ்.லோகிதன் - விநாயகபுரம்
2. திரு. சி. உதயகுமார் - விநாயகபுரம்
3. திரு. க. யோகநாதன் - விநாயகபுரம்
4. திரு. கோ. கோகுலமூர்த்தி - விநாயகபுரம்
5. திரு. க. நமசிவாயம் - விநாயகபுரம்
6. திரு. இ. வீரசிங்கம் - திருக்கோவில்
7. திரு. வே. கருணாகரன் - திருக்கோவில்
8. திரு. ஆர்.இரத்தினகுமார் - திருக்கோவில்
9. திரு. என்.எஸ்.தியாகராஜா - திருக்கோவில்
10. திரு. கோ. சேந்தன் - திருக்கோவில்
11. செல்வி. கீ.லோஜினி - திருக்கோவில்
12. செல்வி. சு. வியூமி - திருக்கோவில்
13. திருமதி. யோகா.யோகேந்திரன் - திருக்கோவில்
14. திருமதி. தம்பிலுவில் ஜெகா - தம்பிலுவில்
15. திரு. சோ. பரஞ்சோதி - தம்பிலுவில்
16. திரு. த. பாஸ்கரன் - தம்பிலுவில்
17. திரு. மு. புவிதாசன் - தம்பிலுவில்
18. திரு. ந. நித்தியகுமார் - தம்பிலுவில்
19. திரு. ஆ. உலகராஜா - தம்பிலுவில்
20. திரு. க. கணேசன் - தம்பிலுவில்
21. திரு. சோ. சதானந்தம் - தம்பிலுவில்
22. திரு. சு. உதயச்சந்திரன் - தம்பிலுவில்
23. திரு. வ. பவாநந்தன் - தம்பிலுவில்
24. திரு. த. விக்னராஜன் - தம்பிலுவில்
25. திரு. பா. கிருபாகரன் - தம்பட்டை
26. திரு. வே. தருமலிங்கம் - தம்பட்டை
27. திரு. கு. தயாரூபன் - தம்பிலுவில்
28. திரு. உ. சுமன் - தம்பிலுவில்
29. திரு. சோ. விபுலாநந்ததாஸ் - தம்பிலுவில்
30. திரு. சோ. சுந்தரமூர்த்தி - தம்பிலுவில்
31. திரு. ஞா. விநாயகமூர்த்தி - தம்பிலுவில்
32. திரு. லோ.சந்திரபவன் - தம்பிலுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2014 அழைப்பிதழ்




## கண்ணகி கலை இலக்கிய விழா -2014

**01. ஆகஸ்ட் 2014 வெள்ளிக்கிழமை.**

**முதலாம் நாள் காலை. "தொடக்க விழா"**

**நிகழ்வுகள்**

**பண்பாட்டுப் பவனி.**

மு.ப 07.15 – 08.00

பண்பாட்டுப் பவனி காலை 07.15 க்கு விநாயகபுரம், திருக்கோவில் மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்திலிருந்து விழாக்குழுத் தலைவர் திரு.**வ.ஜயந்தன்** தலைமையில் ஆரம்பித்து பிரதான வீதி வழியாக தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயத்தை வந்தடையும்.

பண்பாட்டுப் பவனி இணைப்பாளர் : திரு.**க.பாஸ்கரன்**
(ஆசிரியர்.விநாயகபுரம் ம.வி)

மாணவர் பவனி இணைப்பாளர் : **திருமதி. தேவமலர் தங்கமாணிக்கம்**
(நடன ஆசிரியை, தம்பட்டை ம.வி)

08.00 – 08.30 பூஜை.

**காலை அமர்வு. (மு.ப. 8.30 - பி.ப. 12.30)**

**இடம்** : தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய கண்ணகி கலை அரங்கு.
**அரங்கு** : "கூலவாணிகன் சாத்தனார்" அரங்கு.
**தலைமை** : திரு.வ.ஜயந்தன் (விழாக்குழுத் தலைவர்)

**முதன்மை அதிதிகள் :**

- திரு. **நீல் டி அல்விஸ்** (அரசாங்க அதிபர், அம்பாறை மாவட்டம்)
- திரு.**டபிள்யூ.ஏ.எல்.விக்கிரம ஆராச்சி.**
  (பணிப்பாளர், கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்.)
- போராசிரியர் **சி. மௌனகுரு.** (காப்பாளர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்)

**சிறப்பு அதிதிகள் :**

- திரு.**சி.ஜெகராஜன்** (பிரதேச செயலாளர், திருக்கோவில்)
- திருமதி. **மனோஹரி சீவரெட்ணம்.**
  (நிர்வாக உத்தியோகத்தர், இலங்கை இந்துப்பேரவை, மட்டக்களப்பு மாவட்டம்)
- சைவப்புலவர்.திரு.**சா.பொன்னுத்துரை** (ஓய்வுநிலை மக்கள் வங்கி முகாமையாளர்)
- திருமதி.**திலகவதி கணேசமூர்த்தி** ((ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர்)
- திரு.**அ.அருளம்பலம்.** (ஓய்வுநிலை உதவி அரசாங்க அதிபர்)
- திரு.**கா. சதானந்தம்** (ஓய்வுநிலை உதவிக் கல்விப்பணிப்பாளர்)

**இணைப்பாளர் :** திரு.**வே.கருணாகரன்**
(பதில் கணக்காளர், பொத்துவில் பிரதேச சபை)

**தொகுப்பாளர் :** திரு. **செ.ஜெயந்தன்.** (நீர்ப்பாசன அலுவலகம், தம்பிலுவில்)

**நிகழ்வுகள்.**

08.30 – 09.00 பேராளர் பதிவும், அதிதிகள் வருகையும், வரவேற்பும்.
09.00 – 09.05 மங்கல விளக்கேற்றல்.
09.05 – 09.10 இறைவணக்கம்.
09.10 – 09.15 தமிழ் மொழி வாழ்த்து – திருமதி. **ஈஸ்வரி சுந்தரராஜன்** குழுவினர்.
09.15 – 09.20 கண்ணகி கலை இலக்கிய விழாக் கீதம் –
செல்வி. **கௌசல்யா இராமலிங்கம்.** பி.ஏ - சங்கீதம்

- 1 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09.20 - 09.25 வரவேற்புரை - திரு. **ஆ.கணேசமூர்த்தி.**
(துணைத்தலைவர், விழாக்குழு)

09.25 - 09.30 அரங்க அறிமுகம் - இணைப்பாளர் திரு. **வே.கருணாகரன்**

09.30 - 09.40 வரவேற்பு நடனம். - திருக்கோவில் மெதடிஸ்த மிஷன் தமிழ் மகாவித்தியாலய மாணவிகள்.

09.40 - 09.45 கண்ணகி இலக்கிய விழாப்பட்டயம் வாசித்தல்.
திருமதி. **சுந்தரமதி வேதநாயகம்.**
(துணைச் செயலாளர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்)

09.45 - 10.00 தொடக்கவுரை - **செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணன்.**
(தலைவர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்)

10.00 - 10.10 தலைமையுரை - **திரு.வ.ஜயந்தன்** (விழாக்குழுத் தலைவர்)

10.10 - 10.25 உரை - திரு. **வி. துலாஞ்சனன்**
**"தம்பிலுவில் கண்ணகி வழிபாடு – ஒரு வரலாற்று நோக்கு"**

10.25 - 10.50 சிறப்பு அதிதிகள் உரை –

10.50 - 11.20 முதன்மை அதிதிகள் உரை. –

11.20 - 11.25 நன்றியுரை – திரு. **க.செல்வாநந்தம்.**
(அம்பாறை மாவட்ட இணைப்பாளர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்)

11.25 - 12.30 நிகழ்த்துகை. **"போர்த்தேங்காய் உடைத்தல்"**
அனுசரணை: **தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயம்.**
இணைப்பாளர்: **திரு.லோ.சந்திரபவன்.**
(மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர்)

12.30 - தொடக்கவிழா காலை அமர்வு நிறைவு.



-2-

# கண்ணகி கலை இலக்கிய விழா - 2014

**01, ஆகஸ்ட் 2014 வெள்ளிக்கிழமை.**

**முதலாம் நாள் மாலை**

**மாலை அமர்வு. (பி.ப. 3.00-7.30)**

**இடம்** : **தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய கண்ணகி கலை அரங்கு.**
**அரங்கு** : **"கவுந்தியடிகள்" அரங்கு.**
**தலைமை** : கலாபூஷணம் **திரு.த.மகேந்திரா** (புராண படன சாதகா)

**முதன்மை அதிதிகள் :**

- வைத்திய கலாநிதி **க.இராஜகோந்தன்.** (விசேட இருதய சிகிச்சை நிபுணர்)
- திரு **சு. முரளிதரன்** (கல்விப்பணிப்பாளர், தமிழ்ப்பாடசாலைகள் அபிவிருத்தி மற்றும் ஜனாதிபதி நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர், கல்வி அமைச்சு)
- பொறியியலாளர் **கு. ராஜேந்திரா.**
(ஓய்வுநிலை மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர்)

**சிறப்பு அதிதிகள் :**

- திரு. **ம.மலரவன்.** (வண்ணக்கர், தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயம்)
- திரு. **கே.சண்முகம்பிள்ளை**
(தலைவர், தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகியம்மன் ஆலயம்)
- திரு. **நா.மானாகப்போடி**
(வண்ணக்கர், தம்பிலுவில் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்)
- திரு. **கா.விஜயகுலேந்திரன்**
(தலைவர், தம்பிலுவில் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்)
- திரு. **கு. ஸ்ரீபஞ்சாட்சரம்**
(செயலாளர், உகந்தை முருகன் ஆலய திருப்பணிச் சபை)
- திரு. **கார்த்திகேசு** (வண்ணக்கர், அக்கரைப்பற்று, பனங்காடு பட்டிநகர் அருள்மிகு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயம்)

**இணைப்பாளர்:** திரு. **கண.இராஜரத்தினம்.**
(முகாமைப் பணிப்பாளர், திருநாவுக்கரசு நாயனார் குருகுலம்)

**தொகுப்பாளர் :** திரு. **க. சத்தியசீலன்.**
(ஆசிரியர், பாணமை அ.த.க.பாடசாலை)

**நிகழ்வுகள்.**

03.00 - 03.05 மங்கல விளக்கேற்றல்.

03.05 - 03.10 வரவேற்புரை. திரு. **எஸ். லோகிதன்** (விழாக்குழு உறுப்பினர்)

03.10 - 03.15 அரங்க அறிமுகம் - இணைப்பாளர். திரு. **கண.இராஜரத்தினம்.**

03.15 - 03.25 தலைமையுரை.

03.25 - 03.50 சிறப்பு அதிதிகள் உரை

03.50 - 04.20 முதன்மை அதிதிகள் உரை.

04.20 - 04.25 நன்றியுரை. **திரு.க.கணேசன்** (நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர்)

04.25 - 07.30 நிகழ்த்துகை. – **"கொம்புமுறி விளையாட்டு"**
அனுசரணை : **தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயம்**
இணைப்பாளர்கள் : **திரு.சோ.சதானந்தம்** (விழாக்குழு உறுப்பினர்)
**திரு.க.சிற்றம்பலம்.** (விழாக்குழு உறுப்பினர்)

**அண்மைக்காலமாக எமது பிரதேசத்தில் அருகிவரும் பாரம்பரிய நிகழ்வான கொம்புமுறி விளையாட்டை இளம் தலைமுறையினருக்கு அறிமுகம் செய்வதுடன், அதனை மீட்டிப் பார்க்கும் நோக்குடன் இந்நிகழ்த்துகை இடம்பெறுகின்றது.**

07.30 தொடக்க விழா நிறைவு.

-3-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணகி கலை இலக்கிய விழா -2014

**02. ஆகஸ்ட் 2014 சனிக்கிழமை.**

**இரண்டாம் நாள் காலை. "இயலரங்கு"**

காலை அமர்வு **(மு.ப. 8.45 - பி.ப. 1.00)**

**இடம்** : **தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலய மண்டபம்.**
**அரங்கு** : **"சேரன் செங்குட்டுவன்"** அரங்கு.
**தலைமை** : திரு.சு.**தவராஜா.** (கோட்டக் கல்வி அதிகாரி, திருக்கோவில்)

**முதன்மை அதிதிகள் :**

- பொறியியலாளர் **செ.திலகராஜா** (கிழக்கு மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர்)
- **கலாநிதி செ. குணபாலன்.** (முதுநிலை விரிவுரையாளர் – தலைவர் முகாமைத்துவ பீடம், தென் கிழக்குப் பல்கலைக்கழகம்)
- கலாநிதி. **வே.யுகபாலசிங்கம்.** (முதுநிலை விரிவுரையாளர், மெய்யியல் துறை, யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு)

**சிறப்பு அதிதிகள் :**

- பொறியியலாளர். **வே.இராஜகோபாலசிங்கம்.** (பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர், திருகோணமலை)
- வைத்திய கலாநிதி **வி.மோகனகாந்தன்.** (ஆதார வைத்தியசாலை, கல்முனை வடக்கு)
- திரு. **ச. பேரின்பராஜா.** (இலங்கை வங்கி முகாமையாளர். தம்பிலுவில்)
- திரு.**நா.அருட்செல்வன்.** (மக்கள் வங்கி முகாமையாளர். திருக்கோவில்)
- சட்டத்தரணி. **சபாபதி பரஞ்சோதி.**
- திரு.**திரு. சீ. ஜெயரூபன்** (உதவிப் பிரதேசசெயலாளர், திருக்கோவில்)

**இணைப்பாளர் : திருக்கோவில் கவியுகன்.**
**தொகுப்பாளர் : ந. மகேந்திரன்** (புள்ளி விபர உத்தியோகத்தர்)

**நிகழ்வுகள்.**

08.45 – 09.00 பேராளர் பதிவும், அதிதிகள் வருகையும், வரவேற்பும்.
09.00 – 09.05 மங்கல விளக்கேற்றல்.
09.05 – 09.10 இறைவணக்கம்.
09.10 – 09.15 தமிழ் மொழி வாழ்த்து
திருமதி. **மதிவதனி பாலேந்திரகுமார்** குழுவினர்.
09.15 – 09.20 வரவேற்புரை. - **திரு.ஆர்.சயனொளிபவன்.**
(மட்டக்களப்பு இணைப்பாளர், விழாக்குழு)
09.20 – 09.25 அரங்க அறிமுகம் -
**இணைப்பாளர் திருக்கோவில் கவியுகன்.**
09.25 – 09.35 வரவேற்பு நடனம். - செல்வி. **அஸ்விகா புண்ணியசீலன்.**
09.35 – 09.45 தலைமையுரை –
09.45 – 10.00 **"கூடல்" (பரல் – 3)** - விழாமலர் வெளியீடு.
அனுசரணை : - வைத்திய கலாநிதி **க. முருகானந்தன்.**
முதற்பிரதி பெறுனர் – **திரு. சிந்தாத்துரை இதயகாந்தன்**
(ஆராய்ச்சி உதவியாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வவுனியா)
வெளியீட்டுரை -கதிரவன் **த. இன்பராசா.** - (தொகுப்பாசிரியர் - செயற்குழு உறுப்பினர், கண்ணகி இலக்கியக் கூடல்)

-4-

10.00 – 10.15 கண்ணகி கலை இலக்கியக் கூடலின் இணையத்தளம் தொடக்கி வைப்பு
அனுசரணை : **"கவிஞன்"**, சிற்றிதழ்
அறிமுகவுரை: **திரு.ச.மதன்.** (**"கவிஞன்"** ஆசிரியர் - செயற்குழு உறுப்பினர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்)
தொடக்கி வைப்பவர்: கலாநிதி. **அரிமா. அ.செல்வேந்திரன்**
(செயற்குழு உறுப்பினர். கண்ணகி கலை இலக்கியக் கூடல்)
10.15 – 11.15 கவியரங்கம்.
தலைப்பு : **"வந்தாள் கண்ணகி வந்தாள்...."**
கவியரங்கத் தலைமை : **முல்லை வீரக்குட்டி**
(விழாக்குழுச் செயலாளர்)
கவிஞர்கள் :
**தம்பிலுவில் தயா.**
**குறிஞ்சி வாணன்.**
**தம்பிலுவில் ஜெகா.**
**கோபால் நாதன்.**
**திருமதி.நவயுகா ராஜ்குமார்.**
11.15 – 11.40 சிறப்பு அதிதிகள் உரை –
11.40 – 12.10 முதன்மை அதிதிகள் உரை.
12.10 – 12.15 நூலங்காடி அறிமுகவுரை: திரு.**சு.கேசவமூர்த்தி.**
(உரிமையாளர், கேசவன் புத்தக நிலையம், கொழும்பு)
12.15 – 12.25 கண்காட்சி அறிமுகவுரை.
கலாநிதி.திருமதி.**மாலதி டீ அல்விஸ்**
12.25 – 12.30 நன்றியுரை – திரு **கோ. சேந்தன்** (தொழில்நுட்ப உத்தியோகத்தர்)
12.30 – 12.50 **விவரண ஒளிப்படக்காட்சி** – கண்ணகி கலை இலக்கிய விழா 2013.
அறிமுகவுரை திரு. **அ. அன்புழகன் குரூஸ்**
(செயலாளர், "கண்ணகி கலை இலக்கியக்கூடல்",
ஆரம்பித்து வைப்பவர்: **திரு.த.கைலாயபிள்ளை**
(தலைவர், "கண்ணகி கலை இலக்கிய விழா 2013" – தலைவர், விபுலாநந்த இல்லம், அக்கரைப்பற்று)
12.50 – 12.55 **நூலங்காடி திறந்து வைப்பு**: **திரு.செ.எதிர்மன்னசிங்கம்.**
(துணைக்காப்பாளர். கண்ணகி கலை இலக்கியக் கூடல்)
அனுசரணை : **கேசவன் புத்தக நிலையம், கொழும்பு.**
இணைப்பாளர். **திரு. பா.கிருபாகரன்.** (விழாக்குழு உறுப்பினர்)
12.55 – 01.00 கண்காட்சி திறந்துவைப்பு. **திரு.சி. சாமித்தம்பி**
(கிழக்கு மாகாணப்பணிப்பாளர், தேசிய பொலிஸ் ஆணைக்குழு - செயற்குழு உறுப்பினர், கண்ணகி கலை இலக்கியக்கூடல்)
அனுசரணை: கலாநிதி.திருமதி.**மாலதி டீ அல்விஸ்**
இணைப்பாளர்: திரு.**ஞா.விநாயகமூர்த்தி.**
(தலைவர், சத்தியசாயி சேவா நிலையம், கிழக்குப்பிராந்தியம்)
01.00 – இயலரங்கு காலை அமர்வு நிறைவு.



-5-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணகி கலை இலக்கிய விழா -2014

**02. ஆகஸ்ட் 2014 சனிக்கிழமை.**

**இரண்டாம் நாள் மாலை**

மாலை அமர்வு. (பி.ப. 3.00 - 7.00)

**இடம்** : **தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலய மண்டபம்.**
**அரங்கு** : **"கோவலன்" அரங்கு**
**தலைமை** : **திரு.யோ.ஜெயச்சந்திரன்.**
(பிரதிக் கல்விப் பணிப்பாளர். திருக்கோவில் கல்வி வலயம்)

**முதன்மை அதிதிகள் :**

- திரு. **க.விமலநாதன்.** (மேலதிக அரசாங்க அதிபர், அம்பாறை மாவட்டம்)
- பேராசிரியர் **வ. மகேஸ்வரன்**
  (தலைவர், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்)
- திரு. **ஆ.இரகுபதி பாலசிறீதரன்.** (தலைவர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்)

**சிறப்பு அதிதிகள் :**

- **திரு.வே.ஜெகதீசன்.** (பிரதேச செயலாளர், ஆலையடிவேம்பு)
- பொறியியலாளர் **மெ.ரவீந்திரலிங்கம்.**
- **திரு. மா.கணேசன்.** (கணக்காளர். பொது வைத்தியசாலை, அம்பாறை)
- வைத்திய கலாநிதி **அ. உதயசூரிய.** (சுகாதார வைத்திய அதிகாரி, திருக்கோவில்)
- பொறியியலாளர் **செ.சுபாகரன்** (நீர்ப்பாசனப் பொறியியலாளர், தம்பிலுவில்)
- திரு. **சோ.இரவீந்திரன்** (அதிபர். தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம்)

**இணைப்பாளர் :** திரு. **எஸ்.பி. நாதன்.** (ஆசிரியர், தம்பிலுவில் ம.ம.வி)
**தொகுப்பாளர் :** திரு. **த.சுஜீவசர்மா** (லேக் ஹவுஸ், கொழும்பு)

**நிகழ்வுகள்.**

03.00 - 03.05 மங்கல விளக்கேற்றல்.
03.05 - 03.10 வரவேற்புரை. - **திரு.சோ.சுந்தரமூர்த்தி.** (ஓய்வு நிலை அதிபர்)
03.10 - 03.15 அரங்க அறிமுகம் - இணைப்பாளர். திரு. **எஸ்.பி. நாதன்.**
03.15 - 03.25 தலைமையுரை —
03.25 - 04.00 திருக்கோவில் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையேயான மனன, கட்டுரைப் போட்டிகளில் பரிசுபெற்ற மாணவர்களின் ஆற்றுகை.
04.00 - 04.10 **"கண்ணகி காவடிப் பாடல்கள்"** - செல்வி. **அகஸ்யா தேவதாஸ்.**
04.10 - 05.30 சிறப்புரை. **"மாதர்க்கு அணி"**
தமிழருவி **த. சிவகுமாரன்.**
(ஸ்தாபகர் - செயலாளர், வவுனியா தமிழ்ச் சங்கம்)
05.30 - 05.50 நாட்டிய நாடகம் - தம்பிலுவில் ம.ம.வி மாணவிகள்.
**"நளவெண்பா சுயம்வர காண்டம்"**
நெறியாள்கை.திருமதி. **மதிவதனி பாலேந்திரகுமார்.**
(நடன ஆசிரியை, தம்பலுவில் ம.ம.வி)
05.50 - 06.15 சிறப்பு அதிதிகள் உரை.
06.15 - 06.45 முதன்மை அதிதிகள் உரை.
06.45 - 06.55 மனன, கட்டுரைப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசு வழங்கல்.
06.55 - 07.00 நன்றியுரை - **திரு.மு. புவிதாசன்** (தாதிய மேற்பார்வையாளர்)
07.00 - இயல் அரங்கு நிறைவு

-6-

## கண்ணகி கலை இலக்கிய விழா -2014

**03, ஆகஸ்ட் 2014 ஞாயிற்றுக்கிழமை.**

**மூன்றாம் நாள் காலை அமர்வு. (மு.ப. 9.20-பி.ப.1.30)**

"ஆய்வரங்கு" - கண்ணகி வழக்குரைக் காவியம்

**இடம்** : **தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலய மண்டபம்.**
**அரங்கு** : **"இளங்கோவடிகள்" அரங்கு**
**தலைமை** : **பேராசிரியர். சி. மௌனகுரு.**

**முதன்மை அதிதிகள் :**

- **கலாநிதி. சி.பத்மநாதன்.** (வேந்தர், யாழ்.பல்கலைக்கழகம், தகைசார் பேராசிரியர், வரலாற்றுத்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்)
- வைத்திய கலாநிதி **க.முருகானந்தன்.**
  (கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்)
- பொறியியலாளர் **திரு. வ. கருணநாதன்**
  (கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர்)

**சிறப்பு அதிதிகள் :**

- திரு. **ஆர். சுகிர்தராஜன்.** (வலயக் கல்விப் பணிப்பாளர், திருக்கோவில்)
- திரு. **பா.பரமேஸ்வரன்.** (பிரதி அதிபர், ஆசிரிய கலாசாலை, மட்டக்களப்பு).
- வைத்திய கலாநிதி. திருமதி. **சுலோசனா ராஜேந்திரா**
  (மாவட்ட வைத்தியசாலை, திருக்கோவில்)
- **திரு.எஸ்.மோசஸ்.** (சிரேஸ்ட தயாரிப்பாளர்,
  சிறீலங்கா ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் - ஊடகத்துறை ஆய்வாளர்)
- திருமதி. **யோகா யோகேந்திரன்.** (மூத்த எழுத்தாளர்)
- டாக்டர். திருமதி. **தவமலர் கோகுலதாஸ்.**
  (கால்நடை வைத்தியர், திருக்கோவில்)

**ஆய்வு மதிப்பீட்டாளர்கள்:** பேராசிரியை திருமதி. **சித்திரலேகா மௌனகுரு.**
பேராசிரியர். **செ.யோகராசா.**
திருமதி. **சந்திராதேவி தயாகாந்தன்.**
(ஆசிரியை, மெதடிஸ்த மத்திய கல்லூரி, மட்டக்களப்பு)

**இணைப்பாளர் :** **திரு.சோ.பரஞ்சோதி.**
(அதிபர், சரஸ்வதி வித்தியாலயம், தம்பிலுவில்)

**நிகழ்வுகள்.**

09.20 - 09.25 மங்கல விளக்கேற்றல்
09.25 - 09.30 வரவேற்புரை திருமதி. **கலைவாணி பிரதீபன்**
(பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்)
09.30 - 09.35 அரங்க அறிமுகம். - இணைப்பாளர். **திரு.சோ.பரஞ்சோதி.**
09.35 - 09.50 தலைமையுரை -
09.50 - 10.00 கண்ணகி வழக்குரைக் காவியம் பாடல் பற்றிய அனுபவப் பகிர்வு.
திரு. **க.தங்கத்துரை.**
(கப்புகனார், தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயம்)

-7-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10.05 - 10.25 ஆய்வுரை I –

**"கண்ணகி வழக்குரைக் காவியத்தின் காவிய அமைப்பு"**

ஆய்வாளர். – **திரு. சி. விநாயகமூர்த்தி.**

(உதவிக் கல்விப் பணிப்பாளர், தமிழ் மொழி, வலயக் கல்வி அலுவலகம், திருக்கோவில்)

10.25 - 10.45 ஆய்வுரை II –

**"கண்ணகி வழக்குரைக் காவியத்தின் பாத்திர வார்ப்பு"**

ஆய்வாளர் – **திரு. வ. குணபாலசிங்கம்.**

(ஆசிரியர், கரடியனாறு ம.வி, மட்டக்களப்பு)

10.45 - 11.05 ஆய்வுரை III –

**"கண்ணகி வழக்குரைக் காவியத்தில் கப்பல் கட்டும் கலையும், போர்க்கலையும்"**

ஆய்வாளர். – **செல்வி. க. தங்கேஸ்வரி.** பீ.ஏ. - தொல்லியல். (சிறப்பு)

11.05 - 11.25 ஆய்வுரை IV - "

**கண்ணகி வழக்குரைக் காவியத்தில் இசைக்கலையும், நடனக்கலையும்"**

ஆய்வாளர்.– **திரு.தெ.பிரதீபன்.**

(விரிவுரையாளர், இசைத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்)

11.25 - 11.45 ஆய்வுரை V –

**"கண்ணகி வழக்குரைக் காவியத்தின் இலக்கிய நயம்"**

ஆய்வாளர். – **திருமதி ரூபி வலன்ரீனா பிரான்சிஸ்.**

(தலைவர், மொழித்துறை, கிழக்குப் பல்கலைக் கழகம்)

11.45 - 11.55 மதிப்பீட்டுக் குறிப்பு I –

11.55 - 12.05 மதிப்பீட்டுக் குறிப்பு II –

12.05 - 12.10 மதிப்பீட்டுக் குறிப்பு III –

12.10 - 12.20 தொகுப்பு – ஆய்வரங்கத் தலைவர்.

12.20 - 12.30 **ஐயந்தெளிதல் -**

12.30 - 12.55 சிறப்பு அதிதிகள் உரை.

12.55 - 01.25 முதன்மை அதிதிகள் உரை.

01.25 - 01.30 நன்றியுரை - **திரு.ச. ஜெயராஜா**

(பொருளாளர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்)

01.30 - ஆய்வரங்க நிறைவு.



-8-

# கண்ணகி கலை இலக்கிய விழா - 2014

**03, ஆகஸ்ட் 2014 ஞாயிற்றுக்கிழமை,**

**மூன்றாம் நாள் மாலை அமர்வு. (பி.ப. 5.00 - பி.ப.9.00)**

**கலையரங்கும், நிறைவு விழாவும்**

**இடம்** : **தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலய மண்டபம்.**
**அரங்கு** : **"மாதவி" அரங்கு**
**தலைமை** : திரு. **ஆ. உலகராஜா.** (ஓய்வுநிலை சிரேஷ்ட போதனாசிரியர்)

**முதன்மை அதிதிகள்:**

- கலாநிதி. **சு.பிறேமகுமார்.**
  (பணிப்பாளர், சுவாமி விபுலாநந்த அழகியல் கற்கைகள் நிறுவகம்)
- திரு. **ஆர்.பிரபாகன்.** (பிரதம ஆசிரியர், வீரகேசரி வாரவெளியீடு)
- கலாநிதி **அனுசூயா சேனாதிராஜா.**
  (முதுநிலை விரிவுரையாளர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)

**சிறப்பு அதிதிகள் :**

- வைத்திய கலாநிதி. **மு. தமிழ்த்தாசன்**
  (மாவட்ட வைத்திய அதிகாரி, திருக்கோவில்)
- அரிமா. **பி.டி.ஏ. ஜெயக்குமார்**
  (நீர்ப்பாசனப் பொறியியலாளர், பொத்துவில்)
- திரு. **த.ரவிச்சந்திரன்**
  (ஹற்றன் நெஷனல் வங்கி முகாமையாளா, திருக்கோவில்)
- திருமதி. **இராஜகுமாரி சிதம்பரம்.**
  (ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் - அழகியல்).
- திரு. **அ. செல்வராசா**
  (ஓய்வு நிலை உதவிக் கல்விப்பணிப்பாளர்)

**இணைப்பாளர் :** திரு **சு.சிறிதரன்** (உதவிக் கல்விப் பணிப்பாளர், அழகியற்கல்வி, திருக்கோவில் கல்வி வலயம்)

**தொகுப்பாளர்கள் :** திரு. **பு.ஜெயசுதன்.** (சட்டக் கல்லூரி, கொழும்பு)

**நிகழ்வுகள்.**

05.00 - 05.05 மங்கல விளக்கேற்றல்.

05.05 - 05.10 வரவேற்புரை. திரு. **என்.எஸ்.தியாகராஜா.**

(ஓய்வுநிலை மாவட்டக் கலாசார உத்தியோகத்தர்)

05.10 - 05.15 அரங்க அறிமுகம் - இணைப்பாளர். திரு. **சு.சிறிதரன்.**

05.15 - 05.25 **புஸ்பாஞ்சலி.** – தம்பிலுவில், ம.ம.வி.மாணவிகள்.

05.25 - 05.35 தலைமையுரை.

05.35 - 05.45 உரை. **இ.இரத்தினகுமார்.**

(அதிபர், குமரவித்தியாலயம், திருக்கோவில்)

**"கிழக்கிலங்கையில் கண்ணகி வழிபாடு"**

05.45 - 06.00 சிறப்பு அதிதி உரை I.

06.00 - 06.10 **கண்ணகியம்மன் காவியப் பாடல்கள் -**

செல்வன் **தே. லோகவியாசன்**

06.10 - 06.15 சிறப்பு அதிதி உரை II.

-9-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06.15 - 06.35 **கொம்புமுறி நடனம்** - மகேசாஞ்சலி நர்த்தனாலயம், திருக்கோவில்.
நெறியாள்கை: திருமதி.**தேவமலர் தங்கமாணிக்கம்.**
(நடன ஆசிரியை. தம்பட்டை. ம.வி.

06.35 - 06.40 சிறப்பு அதிதி உரை III.

06.40 - 06.45 சிறப்பு அதிதி உரை IV.

06.45 - 07.05 நடனம். - **நர்த்தனபவனம் நாட்டியப்பள்ளி** மாணவிகள்.
நெறியாள்கை: நடன ஆசிரியை. திருமதி. **ஷா. பிரபாகரன்.**

07.05 - 07.10 சிறப்பு அதிதி உரை V.

07.10 - 07.30 **நாட்டிய நாடகம், "வழக்குரைக்கும் கண்ணகி"**.
மட்டக்களப்பு புனித சிசிலியா பெண்கள் கல்லூரி மாணவிகள்.
(2013 அகில இலங்கை தமிழ்த் தினப் போட்டியில்
இரண்டாமிடம் பெற்றது)
நெறியாள்கை: நடன ஆசிரியை. திருமதி. **வாசுகி பார்த்தீபன்.**

07.30 - 07.40 முதன்மை அதிதி உரை I.

07.40 - 07.50 முதன்மை அதிதி உரை II.

07.50 - 08.00 முதன்மை அதிதி உரை III.

08.00 - 08.50 **கூத்து. "விஷ்ணுபுத்திரன் வெடியரசன் -**
**சிவகாமி தமிழ் அருங்கலைக் கூடம்**
நெறியாள்கை: **திரு.முருகமூர்த்தி விஜயாலயன்.**

(துணைத் தலைவர், கண்ணகி கலை இலக்கிக் கூடல்)

09.00 - கண்ணகி கலை இலக்கிய விழா 2014 நிறைவு.



அழைப்பிதழ் அன்பளிப்பு:
**வனசிங்க பிரிண்டர்ஸ்**
No. 126/1, Trinco Road, Batticaloa.
T.P: No.065 2227170
E-mail: wanasingheprinters@gmail.com

-10-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பிலுவில் கண்ணகி வழிபாடு



திருமதி. ஜெகதீஸ்வரி நாதன்,
(தம்பிலுவில் ஜெகா)

கண்ணகி வழிபாடு கி.பி. 2ஆம் நூற்றாண்டில் அனுராதபுரத்தை ஆட்சி செய்த கஜபாகு மன்னனால் (கி.பி 171 – 193) இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டதாக ஆய்வாளர்கள் ஆதாரம் காட்டுகின்றனர். சேரன் செங்குட்டுவன் என்னும் மன்னன் திருச்செங்கோட்டையில் பத்தினி அம்மனுக்கு கோட்டம் அமைத்து விழா எடுத்த வைபவத்திற்கு இலங்கை மன்னன் கஜபாகுவையும் அழைத்திருந்தான். விழா முடிவில் சந்தணக்கட்டையால் செய்யப்பட்ட கண்ணகி உருவமும், சிலம்பும் கஜபாகு மன்னனுக்கு கையளிக்கப்பட்டதாகவும், இம்மன்னனாலேயே இலங்கையில் கண்ணகி வழிபாடு பரப்பப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இலங்கையில் முதலாவது கண்ணகி அம்மன் ஆலயம் ஜம்புகோளப் பகுதியைச் சேர்ந்த ***அங்கணாமைக்கடவை*** எனும் இடத்தில் நிர்மாணிக்கப்பட்டது. அதன் பின்பே கிழக்கிலங்கையில் கண்ணகி வழிபாடு பரவியது என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும். இவ்வாறு சுமார் நாற்பதுக்கு மேற்பட்ட ஆலயங்கள் தோற்றுவிக்கப் பட்டதாக அறியப்படுகின்றது.

பட்டிநகர் தம்பிலுவில் வீரமுனை காரைநகர்
பவுசுபெறு கல்முனை கல்லாறு மகி மூரெருவில்
செட்டிபாளையம் புதுக்குடியிருப்பூர் நல்ல
செல்வமுறு மகிழடித்தீவு முதலைக்குடா
அட்டதிக்கும் புகழ் வந்தாறு மூலைநகர்
அங்கங்கு நித்ய கலியாணியா யுறையும்
மட்டவிழ் பூங்குழல் மண்முனை கண்ணகியை
மனதில் நினைக்க வினை மாறியோ டிடுமே (நாவிதன் நாகன்)

மட்டுநகரின் தெற்கே சுமார் 76 கிலோமீற்றர் தொலைவில் திருக்கோவில் பிரதேசச் செயலகப்பிரிவு உள்ளது. இதில் அமைந்துள்ள 22 கிராமங்களில் தம்பிலுவில்க் கிராமம் தனித்துவமானது. பழைமையும் பண்பாடும் மிகுந்த இப்பகுதியில் தொன்மைமிகு கண்ணகி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது.

ஆரம்ப காலத்தில் இவ்வாலயம் தம்பிலுவில் வடமேற்கு மூலையில் ( முனையூரின் மேற்கே) ***ஊரக்கை*** என அழைக்கப்பட்ட நிலப்பரப்பில் அமைந்திருந்தது. 11ஆம் நூற்றாண்டில் முதலாம் விஜயபாகு மன்னன் ஊரக்கையில் குடிகொண்ட ***செண்பகச்செல்வி*** என அழைக்கப்பட்ட அம்மனுக்கு பல நன்கொடைகள் நல்கியதாக ஆதாரங்கள் உள்ளன.

17ஆம் நூற்றாண்டில் கண்டி மன்னனான இரண்டாம் இராஜசிங்கன் அம்மன் ஆலயத்திற்கு அதிகளவு அன்பளிப்புகள் வழங்கியதாக வரலாறுகள் கூறுகின்றன. 18ஆம் நூற்றாண்டில் தம்பிலுவில் கிராமத்தைச் சேர்ந்த, ஆலய அர்ச்சகர் ஒருவர், ஸ்ரீ வரநரேந்திரசிங்கன் எனும் மன்னன் மீது ***பள்ளுப்பிரபந்தம்*** பாடியுள்ளார். அதில் அம்மன்னனை வாழ்த்தும்போது தம்பிலுவில் பதியுறைந்த கண்ணகி அம்மன் பற்றியும் குறிப்பிடுகின்றார்.

**கந்தநறுஞ் சண்பகப்பூ மாலை மார்பன் தென்னிலங்கை**
**காவலன் நீள் மகாவலி கங்கைக்குடையோன்**
**சந்தனப்பூ யாசலனைச் செந்தமிழால் வழுத்தக்**
**தம்பிலுவில் கண்ணகித்தாய் தஞ்சநமக்கே**

கி.பி 17ம் நூற்றாண்டில் (இரண்டாம் இராசசிங்கன் காலம்) தம்பிலுவில் கண்ணகி அம்மன் ஆலயக்கப்புகனார் கட்டாடிக்கண்ணப்பன் என்பவரால் (கட்டாடி என்பவர் கட்டுச் சொல்பவர், தேவவாக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்பவர்) மழைக்காவியம் பாடப்பட்டது.

இப்பகுதியில் நீண்ட காலம் மழை இல்லாத போது பச்சைக்களிமண்ணால் பானை செய்து (சுடப்படாத பானை) அதில் அம்மாளுக்குப் பொங்கல் வைத்து, பூசை செய்து மழைக்காவியம் பாடியதாக ஆதரங்கள் உள்ளன.

**காதலடி யார்கள்பணி விடைகார னுன்னுடைய**
**கட்டடிக் கண்ணப்பனுக் காயினு மிரங்கி**
**மோதுகுளிர் தாரைமழை நீயருள வேணும்**
**கோகனக தம்பிலுவில் வாழுமா தாவே**

(பாடல் - 14. வரிகள் 5 – 8)

இவ்வாறு தொன்மையும், புகழும் பெற்ற தம்பிலுவில் கண்ணகி அம்மன் ஆலயச் சடங்குகள் வருடந்தோறும் வரும் வைகாசி திங்களில் நடைபெறும். இங்கு முதலாம் நாள் வண்ணக்கர் பூசை நடைபெற்று காவிய ஏடுதிறத்தல், மண்ணெடுத்தல், கண்ணகி வழக்குரை பாடல், கல்யாணக்கால் நடல், அம்மன் ஊர்வலம், பொங்கல், குளிர்த்தி என பல அம்சங்களுடன் பூசை நடைபெறும். ஆலய நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் கப்புகனார் மழவராயன் குடியையும், தலைவர் சிங்களக் குடியையும், வண்ணக்கர் கண்டங் குடியானுக்குப் பிறந்த கட்டப்பத்தான் மகனுமாக இருக்கவேண்டும் என்பது மரபு.

தம்பிலுவில் கண்ணகி அம்மன் வழிபாட்டுடன் தொடர்பு பட்டதாக அக்காலத்தில் போர்த்தேங்காய் அடித்தல், கொம்பு விளையாடுதல் ஆகிய நிகழ்வுகளும் இடம்பெற்றன. ஊரில் பருவ மழையின்றி பயிர்கள் வாடி, பஞ்சம் ஏற்படும்போது மழைவேண்டியும், நோய்கள் தீரவும் கொம்பு விளையாட்டு இடம்பெறும். அக்காலத்தில் இப்பிரதேச மக்கள் காட்டுக்குச் சென்று கரையாக்கு மரம் வெட்டி அதிலிருந்து கொம்பு செய்து, கொம்பு விளையாட்டு ஆடுவர்.

ஊர்மக்கள் வடசேரி ( பிள்ளையார் பக்கம்) தென்சேரி (அம்மன்பக்கம்) எனப்பிரிந்து கொம்பு முறிப்பது வழக்கம். தென்சேரியில் கட்டப்பத்தான்குடி, சிங்களக்குடி, கோரைக்களப்புக்குடி, வேடர்குடி, முன்னைங்கைச்சவடிகுடி, குருக்கள்குடி, பொற்கொல்லர்குடி, மழவராயன்குடி, ஆகியோரும்; வடசேரியில் கண்டன்குடி, சருவிலிகுடி, வைத்தியனார்குடி, பணிக்கனார்குடி ஆகியோரும் சேர்ந்திருப்பர். ஆலய முன்றலில் உள்ள கொம்புச் சந்தியில் (இன்றும் உள்ளது) தேங்காய் உடைத்து கொம்பு விளையாட்டு ஆரம்பமாகும். இதில் கொழுகொம்பு, விளையாட்டுக் கொம்பு, தட்டுக்கொம்பு, கூடாரக்கொம்பு, ஏடகக்கொம்பு, தண்ணீர்க்கொம்பு ஆகிய கொம்புகள் முறிக்கப்படும்.

இவ்வாலயத்தை மையமாக வைத்து நாட்டுக்கூத்து, வசந்தன்கூத்து, கோலாட்டம், கும்மி என பல்வேறு கலை வடிவங்களும் இங்கு வளர்ந்துள்ளன. இக்கூத்துக்கள் திரு உ.வில்லியம்பிள்ளை அவர்களாலும், இசைவடிவங்கள் பண்டிதர் த.குஞ்சித்தம்பி என்பவராலும் மெருகூட்டப்பட்டு வளர்க்கப்பட்டன. இப்பிரதேச இலக்கியங்களுள் காலத்தால் மூத்தது கண்ணகி வழக்குரையேயாகும். இதுவே கண்ணகி மாங்கனியில் இருந்து பிறந்ததாக் கூறுகின்றது. ஊர்சுற்றும் காவியத்தில்

**"தம்பிலுவில் மாநகரில் வீற்றினி திருக்கும்**
**தாயேயி ரக்கமுள்ள தருமதே வதையே"**

(பாடல் - 16, வரிகள் 7- 8)

இவ்வாறு தொன்மையும், பெருமையும் நிறைந்த கண்ணகை அம்மன் ஆலயம் தம்பிலுவில்ப் பதியில் அமைந்திருப்பது எமக்கெல்லோருக்கும் பெருமையைத் தருகின்றது. 1970இல் சிட்னி பல்கலைக்கழக ஆய்வாளர் H.Y.HAIT என்பவர் பல ஆய்வுகள் செய்து நூல் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

உசாத்துணை:


1. பத்தினி வழிபாடு – 1978 சி.கணபதிப்பிள்ளை, அட்டப்பள்ளம்.
2. தம்பிலுவில் கண்ணகி வழிபாடு 1999 நா.நவநாயகமூர்த்தி
3. திரு.சி.சபாரெத்தினம் முன்னால் சித்திவிநாயகர் ஆலயத்தலைவர், தம்பிலுவில்
4. கிழக்கின் பண்பாட்டு ஆய்வுகள் 2012 கி.மா.ப.அ.திணைக்களம்
5. கூடல் 2012, 2013




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணகி கலை இலக்கியவிழா - 2014 (உபகுழுக்கள்)

**கொம்புமுறித்தல், போர்த்தேங்காய் உடைத்தல்**

திரு. க. சிற்றம்பலம் (இணைப்பாளர்)
திரு. சோ. சதானந்தம் (இணைப்பாளர்)
லோ.சந்திரபவன். (இணைப்பாளர்)
க.கணேசன்.
தி.மலர்ப்பிரியன்.
சு.திலீபன்.
ந.சதீஸ்.
சு.சுதர்சன்.
க.தஜந்தன்.
ச.அருந்தன்.
து.வேணுகரன்.
அ.தனுஜன்.
ந.தேவப்பிரகாஸ்.
இ.தினேஸ்.
ச.சதூஜன்.
ம.வினோகரன்.

**ஊர்வலம் ஒழுங்கமைப்பு, பண்பாட்டுப்பவனி**

திரு. கா. விஜயகுலேந்திரன் (தலைமை) - தம்பிலுவில்
திரு. த. பாஸ்கரன் (இணைப்பாளர்) - தம்பிலுவில்

**அனுசரணை :**
- **தம்பிலுவில் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபை**
- **தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய பரிபாலன சபை**

**அலங்காரம்**

திரு. வி. உதயகுமார் - விநாயகபுரம்
திரு. க. நமசிவாயம் - விநாயகபுரம்

**வரவேற்பும் உபசரிப்பும்**

திரு. க. கணேசன் தலைமையில் **'சைவநெறிக்கூடம்'** - அம்பாறை மாவட்டம் - தம்பிலுவில் உறுப்பினர்கள்-
ந.தேவப்பிரகாஸ்.
தி.மலர்ப்பிரியன்.
சு.திலீபன்.
சு.சுதாகரன்.
ச.சதூஜன்.
ம.வினோகரன்.
கு.தஜந்தன்.
லோ.சந்திரபவன்.
அ.தனுஜன்.
ந.சதீஸ்.
இ.தினேஸ்.
கு.கணேஸ்.
அ.அருந்தன்.
சு.மோகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊடகத்தொடர்பு, விளம்பரம்

திரு. க. ஜெயசேகரம் - தம்பிலுவில்
திரு. சு. கார்த்திகேசு - திருக்கோவில்

## நிகழ்ச்சிகள் ஒழுங்கமைப்பு

திரு. எஸ்.பி. நாதன் - தம்பிலுவில்

## நிகழ்ச்சி இணைப்பாளர்கள்

**பிரதான இணைப்பாளர் :** திரு. கண. இராஜரெத்தினம்
திரு. த. பாஸ்கரன்
திருமதி. தேவமலர் தங்கமாணிக்கம்
திரு. வே. கருணாகரன்
திரு. திருக்கோவில் கவியுகன்
திரு. பா. கிருபாகரன்
திரு. ஞா. விநாயகமூர்த்தி
திரு. எஸ். பி. நாதன்
திரு. சோ. பரஞ்சோதி
திரு. சு. சிறிதரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைப்பு :**

# மட்டக்களப்புத் தேசத்தில் உள்ள கண்ணகையம்மன் ஆலயங்கள்

கண்ணகையம்மன் வழிபாடு இப்பிரதேசங்களில் சாக்தம் கூறுகின்ற சக்தி வழிபாட்டின் அம்சங்களைப் பெற்றிருக்கின்றது. ஆனால் இப்பிரதேசத்து மக்கள் சாக்த சமயம் பற்றி பூரணமாக அறியாதவர்கள். இருந்தும் சக்தியின் மறு அவதாரமாகவே கண்ணகையம்மனை பக்திபூர்வமாக வழிபட்டு வருகின்றனர். கண்ணகையம்மன் வழிபாட்டை பெறுத்த வரை ஏனைய தெய்வங்களை விட இவர்களது பக்தி, உணர்வு பூர்வமானது.

மட்டக்களப்பிலே உள்ள இருபத்தைந்துக்கு அதிகமான ஊர்களில் கண்ணகையம்மன் கோயில்கள் விளங்குகின்றன (கந்தையா. வி.சீ., *மட்டக்களப்பு தமிழகம்* (முதற்பதிப்பு), பக்.158)சிற்றம்பலம்,க., பேராசிரியர் க.சிற்றம்பலம் 25 கோயில்கள் என குறிப்பிட்டுள்ளார். ,(*ஈழத்து இந்து சமய வரலாறு* பக்.263) மட்டக்களப்புத் தேசத்தில் உள்ள கண்ணகையம்மன் ஆலயங்களாக இதுவரை 48 ஆலயங்களே அடையாளங் காட்டப்பட்டுள்ளன. (மகேஸ்வரலிங்கம்,க., மட்டக்களப்பு சிறு தெய்வ வழிபாடு ஓர் அறிமுகம், பக்.121) **இவற்றுள் 43 ஆலயங்கள் இந்துக்கலாசாரத் திணைக்களத்தில் பதியப்பட்டனவாக உள்ளன.**

**எனது கலாநிதிப்பட்ட ஆய்விற்காக (பேராதனைப்பல்கலைக்கழகம்) மட்டக்களப்பு தேசம் பூராவும் சென்று பரிசீலனை செய்த போது 67 கண்ணகையம்மன் ஆலயங்கள் இத்தேசத்தில் உள்ளமையை கண்டு கொள்ள முடிந்தது. (கண்ணகி கலை இலக்கிய கூடலின் ஏற்பாட்டில் நடைபெறும் நான்காவது கண்ணகி கலை இலக்கிய விழாவான 'கண்ணகி கலை இலக்கியவிழா - 2014' விழாமலரான 'கூடல்' பரல் - 3இல் முதன் முதலாக இச்செய்தி அச்சில் வெளியிடப்படுகின்றது.)**

இது தவிர ஏனைய பெரிய கோயில்களில் வைகாசி குளித்தி முடிந்ததும் ஆனி, ஆடி மாதங்களில் கண்ணகி வழிபாடு நடைபெறும் பல சிறிய கோயில்கள் இருப்பதும் ஆய்வின்போது தெரிய வந்தது.

| மட்டக்களப்புத் தேசத்திலுள்ள கண்ணகையம்மன் ஆலயங்கள்<br>மட்டக்களப்பு மாவட்டம் | | | |
|---|---|---|---|
| 01 | கண்ணகையம்மன் கோயில், கட்டு முறிவு, கதிரவெளி | 02 | ஸ்ரீ பத்தினியம்மன், கதிரவெளி, வாழைச்சேனை |
| 03 | ஆலையடி கண்ணகையம்மன் கோயில், புளியங்கண்டி, வாகரை | 04 | வட்டவான் கிழக்கு, வட்டவான், வாழைச்சேனை, மாங்கேணி. |
| 05 | கண்ணகையம்மன் கோயில், மயிலங்கராச்சி, வாகனேரி | 06 | கண்ணகையம்மன் கோயில், நாசிவன் தீவு, வாழைச்சேனை |
| 07 | கண்ணகையம்மன் கோயில், வட்டவான், வாழைச்சேனை, கோறளைப்பற்று வடக்கு. | 08 | கண்ணகையம்மன் கோயில், கிரான் |
| 09 | கண்ணகையம்மன் கோயில், கோராவெளி | 10 | கண்ணகையம்மன் கோயில், தும்பங்கேணி |
| 11 | கண்ணகையம்மன் கோயில், சந்திவெளி, முறக்கொட்டாஞ்சேனை | 12 | கண்ணகையம்மன் கோயில், ஈச்சங்குளம், சித்தாண்டி |
| 13 | பத்தினியம்மன் கோயில், பலாச்சோலை, வந்தாறுமூலை | 14 | கண்ணகையம்மன் கோயில், வந்தாறுமூலை |
| 15 | பத்தினியம்மன் ஆலயம், ஒரு முலைச்சோலை, செங்கலடி | 16 | கண்ணகையம்மன் கோயில், சத்துருக்கொண்டான் |
| 17 | கண்ணகையம்மன் கோயில், நாவற்கேணி | 18 | கண்ணகையம்மன் கோயில், கருவப்பங்கேணி |
| 19 | கண்ணகையம்மன் கோயில், அமிர்தகழி | 20 | விடத்தல்முனை கண்ணகியம்மன் கோயில், புளியந்தீவு |
| 21 | கண்ணகையம்மன் கோயில்,தாண்டவன்வெளி | 22 | கண்ணகையம்மன் கோயில், கன்னங்குடா |
| 23 | கண்ணகையம்மன் கோயில், ஈச்சந்தீவு | 24 | கண்ணகையம்மன் கோயில், உன்னிச்சை |
| 25 | கண்ணகையம்மன் கோயில், குறிஞ்சாத்தீவு | 26 | கண்ணகையம்மன் கோயில், மஞ்சந்தொடுவாய் |
| 27 | பரமநயினார் கண்ணகையம்மன் கோயில், ஆரையம்பதி | 28 | கண்ணகையம்மன் கோயில், ஆரையம்பதி |
| 29 | கண்ணகையம்மன் கோயில், காத்தான்குடி ஆரையம்பதி | 30 | கண்ணகையம்மன் கோயில், புதுக்குடியிருப்பு |
| 31 | கண்ணகையம்மன் கோயில், கிரான்குளம் | 32 | கண்ணகையம்மன் கோயில், குருக்கள்மடம் |
| 33 | கண்ணகையம்மன் கோயில், களுதாவளை | 34 | கண்ணகையம்மன் கோயில், களுவாஞ்சிகுடி |
| 35 | எருவில் ஸ்ரீ கண்ணகையம்மன் கோயில், எருவில் | 36 | கண்ணகையம்மன் கோயில், கல்லாறு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 37 | கண்ணகையம்மன் கோயில், கோட்டைக்கல்லாறு | 38 | கண்ணகையம்மன் கோயில், குறுமன்வெளி |
| 39 | கண்ணகையம்மன் கோயில், துறைநீலாவணை | 40 | கண்ணகையம்மன் கோயில், மகிழடித்தீவு |
| 41 | கண்ணகையம்மன் கோயில்,கோயில்போரதீவு | 42 | கண்ணகையம்மன் கோயில், பழுகாமம் |
| 43 | கண்ணகையம்மன் கோயில், 38வது கிராமம், வெல்லாவெளி | 44 | பத்தினியம்மன் ஆலயம், 38ஆம் கிராமம், வக்கியல |
| 45 | கண்ணகையம்மன் கோயில், பிரிவு – 1, மண்டூர். | 46 | கண்ணகையம்மன் கோயில், 13வது கிராமம், மண்டூர், தம்பலவத்தை |
| 47 | கண்ணகையம்மன் கோயில், முனைக்காடு | 48 | கண்ணகையம்மன் கோயில், முதலைக்குடா |
| 49 | கண்ணகையம்மன் கோயில், கொக்கட்டிச்சோலை | 50 | கண்ணகையம்மன் கோயில், மகிழூர் |
| 51 | ஸ்ரீ கண்ணகையம்பாள் கோயில், பெரியபோரதீவு | 52 | கண்ணகையம்மன் ஆலயம், தளவாய் |
| 53 | கண்ணகையம்மன் கோயில், திக்கோடை | 54 | கண்ணகையம்மன் கோயில், தேற்றாத்தீவு. |

| மட்டக்களப்புத் தேசத்திலுள்ள கண்ணகையம்மன் ஆலயங்கள் அம்பாறை மாவட்டம் | | | |
|---|---|---|---|
| 01 | கண்ணகியம்மன் கோயில், வீரமுனை | 02 | நாவிதன்வெளி கண்ணகையம்மன் |
| 03 | ஸ்ரீ கண்ணகையம்மன் சவளக்கடை சம்மாந்துறை | 04 | படர்க்கல் பத்தினி கண்ணகையம்மன்கோயில், சென்றல் காம், சம்மாந்துறை |
| 05 | கண்ணகியம்மன் கோயில், காரைதீவு | 06 | விக்கினேஸ்வரா கண்ணகியம்மன் கோயில், கோளாவில்,அக்கரைப்பற்று |
| 07 | மாணிக்கப்பிள்ளையார் கண்ணகையம்மன், அக்கரைப்பற்று | 08 | அருள்மிகு கண்ணகையம்மன், மருதடி, அக்கரைப்பற்று |
| 09 | ஸ்ரீ கண்ணகியம்மன் கோயில், பட்டிநகர், பனங்காடு | 10 | கண்ணகியம்மன் கோயில், தம்பிலுவில் |
| 11 | கண்ணகியம்மன் கோயில், பாணமை | 12 | கடற்கரை கண்ணகியம்மன், கல்முனை |
| 13 | ஸ்ரீ கண்ணகையம்மன், கல்முனை | | |

**தகவல்**
**திருமதி.எஸ்.கேசவன்**
**இணைப்பாளர்**
**சிரேஷ்ட விரிவுரையாளர்,**
**இந்துநாகரிகக் கற்கைகள் புலம்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம்,**
**இலங்கை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியோடு........

- ஆண்டுதோறும் நடைபெறும் கண்ணகிகலை இலக்கிய விழாவுக்குப் பொற்குவை தந்து பங்களிக்கும் பேராளர் பெருமக்களுக்கும்.........
- நிகழ்வுகளுக்கு அனுசரணைகள் வழங்கிய அனைத்து அனுசரணையாளர்களுக்கும்
- 2014ம் ஆண்டின் நான்காவது கண்ணகிகலை இலக்கியவிழாவை மிகமிகச் சிறப்பாக நடாத்தித் தடம்பதித்த திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவு மக்களுக்கும்.......
- 2014ம் ஆண்டின் நான்காவது கண்ணகிகலை இலக்கியவிழாவின் **"கூடல்"**பரல் -3 விழாமலர் வெளியீட்டுக்கு அனுசரணை அளித்த வைத்தியகலாநிதி **க.முருகானந்தன்** அவர்களுக்கும்,
- கண்ணகி கலை இலக்கியவிழாவுக்கு அதிதிகளாய்ச் சமூகந்தந்து சிறப்பித்த பெருந்தகைகள் அனைவருக்கும்....
- கலைகளையும், கனதியானபல நிகழ்வுகளையும் காட்சிப்படுத்திய நற்றமிழ் கலைஞர்களுக்கும்.......
- **'கண்ணகி வழக்குரைக்'** காவியத்தை ஆய்வு செய்த ஆய்வாளர்களுக்கும்.........
- கண்ணகி கலை இலக்கிய விழாக்களின் வெற்றிப் பாதையில் முரசறையும் ஊடகவியல்சார் உழைப்பாளர்களுக்கும்.......
- நான்காவது கண்ணகி கலை இலக்கிய விழாவினைச் சிறப்புற நடாத்திய 'கண்ணகி கலை இலக்கிய விழா - 2014' விழாக்குழுவினர்கள் அனைவருக்கும்.
- கண்ணகி கலை இலக்கிய விழாக்களின் உந்துதலாய் உழைக்கும் கண்ணகி கலை இலக்கியக்கூடல் செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும்.
- இதுவரை நடைபெற்ற கண்ணகிகலை இலக்கிய விழாக்களின் எண்ணங்களை வடிவங்களாய் மாற்ற அலுப்பு மறந்து செயற்படுவதோடு, தொடர்ந்து மூன்றாவது தடவையாக அழைப்பிதழும் அன்பளித்த மட்டக்களப்பு வணசிங்கா அச்சகத்தாருக்கும்.....
- விழாவில் கலந்துகொண்ட கண்ணகி விழா இலக்கிய ஆர்வலர்கள் அனைவருக்கும்.
- எல்லாவற்றுக்கும் உடன்பாட்டுடன் உழைத்துக்கொண்டிருக்கும் நான்காவது கண்ணகிகலை இலக்கியவிழாவின் செயற்பாட்டாளர்கள் அனைவருக்கும்....

**என்றும் மறவாத நன்றியோடு,**

**தொடரும் எங்கள் கண்ணகி கலை இலக்கியவிழாவும், கூடலும்!**

**செயலாளர்.**

**கண்ணகி கலை இலக்கியக் கூடல்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PATTAKANNUS
SINCE 1895

*Jewellers of trusted excellence.....*

**102, New Chetty Street,
Colombo-13**

**Tel : 2422304 / 2431759**

Wanasinghe Printers, 126/1, Trinco Road, Batticaloa. T.P: 065 222 7170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org